உ

குமரன் துணை.

# பாவநாசம் என்னும்

# சிங்கைப் பிரபந்தத் திரட்டு

இது

பாவநாசத் தலபுராணாசிரியராகிய

முக்களாலிங்கமுனிவர் புதல்வரும், ஆநந்தக்கூத்தரின்

இளைய சகோதரரும்

திருக்கைலாச பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துத்

திராவிட மாபாடிய கர்த்தரா யெழுந்தருளி யிருந்த

மாதவச் சிவஞான யோகிகளின்

சிறிய தந்தையுமான

**நமச்சிவாயக் கவிராயரவர்கள்**

இயற்றியது.

மதுரை

**மு. ரா. கந்தசாமிக் கவிராயரால்**

மதுரை "எக்ஸெல்ஸியர் பிரஸில்"

பதிப்பிக்கப்பெற்றது.

**1917.**

இதன் விலை] [அணா-12.

# பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| | முகவுரை. | |
| | நூலாசிரியர் சரித்திரம். | |
| 1. | கலித்துறையந்தாதி. | 1. |
| 2. | பதிற்றுப்பத்தந்தாதி. | 14. |
| 3. | கொச்சகக்கலிப்பா. | 29. |
| 4. | சந்தவிருத்தம் | 42. |
| 5. | பிள்ளைத்தமிழ். | 50. |
| 6. | சிலேடை வெண்பா | 87. |
| | பிழைதிருத்தம். | 100. |

குமரன் றுணை.

# முகவுரை.

ஐங்கரக் கடவுளே யாறிரு தடந்தோட்
செங்கடம் பண்ணலைச் செந்தமிழ் முநிவனைத்
தவஞான ரூப தயாநிதி யாகிய
சிவஞான யோகி திருத்தாண் மலரை.
யடுத்துப் போற்றுதுஉ மன்பர்
லெடுத்த காரிய மிலங்குதற் பொருட்டே.

பாண்டிவளநாட்டில் பொதியமலையடிவாரத்தில் பொருநை நதிக் கரையில் "பாவநாசம்" என்னும் புண்ணியத்தலத்தில் திருக்கோயில் கொண்டருளும் உலகம்மை மீது நமச்சிவாயக்கவிராயர் என்னும் அருட்பெரும் புலவர் இயற்றிய பிரபந்தங்களில் பற்பல பாடல்கள் தென்னாட்டிலே பல இடங்களில் வழங்குவனவாகும். பாடல்கள் பலவும் மதுரம் பழுத்துத் தேன்றுளிக்கும் வளச்செம்பாகத்துடன், பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பல்குவன வாதலின் தமிழ் மக்கள் பலரும் மனப்பாடஞ்செய்து பாராட்டுவதுண்டு. எனது தந்தையார் இராமசாமிக்கவிராயரவர்கள் இப்பாடல்களைக்கூறி மனங் கசிந்துருகுவதைப் பலமுறை யறிந்துள்ளேன். ஆதலின் பாலப் பருவந்தொட்டு இக்கவிகளில் எனக்கு விருப்புமிகவுண்டு. திருநெல் வேலி முதலிய பல இடங்களில் பெரியார் பலர் இப்பாடல்களைக் கூறக்கேட்டு மிருக்கின்றேன். இங்ஙனம் கேள்வி வகையானே பற் பல செய்யுட்கள் எனக்கு மனப்பாடமாயின. பாடல்களின் சுவைப் பெருக்கால் விருப்பமிகக்கொண்டு நூல்களைத்தேடத் தொடங்கினே னாக சில இடங்களில் சில நூல்கள் கிடைத்தன. சிலபிரதிகள் அரை குறையாக இருந்தன. பலவாறு முயன்றும் பிரபந்தங்கள் முழுது மமைந்த சுத்தப்பிரதிகள் கிட்டில. பின்னர் அரிகேசநல்லூர் வித்து வானும் அம்பாசமுத்திரம் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும் அம்பிகா பதிக்கோவையை அச்சிட்டவரும் பழையசரித்திர ஆராய்ச்சி வல்லு நரும் ஆகிய ஸ்ரீ அரிகரபாரதிகள் பலநாள் முயன்று நான்குபிரதிகள்

தேடியொப்பு நோக்கிக் காகிதத்தில் எழுதிவைத்திருந்த கலித்துறை யந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, கொச்சகக்கலிப்பா, சந்தவிருத்தம். பிள்ளைத்தமிழ் என்னுமிவைகளை ஸ்ரீ முருகாநந்த சுவாமிகள் மூலம் கொடுத்துதவினார்கள். இவர்கள் செய்த பேருதவியை என்றும் மறவாது பாராட்டுங் கடப்பாடுடையேன்.

உலகம்மை திருவருளையே துணையாகக்கொண்டு என்னிடமுள்ள சில பிரதிகளையும் பாரதியவர்கள் கொடுத்த பிரதியையும் வைத்து ஒப்புநோக்கினேன். சிற்சில இடங்களில் சிற்சில எழுத்துக்கள் காணப்படவில்லை. அவ்விடங்களை வெற்றிடமாகவே விட்டுவிட்டேன். சிற்சில கவிகள் பாடப்பிறழ்ச்சியால் பொருள் விளங்காவாறுள்ளன. அவற்றையும் இருந்தவாறே விட்டுவிட்டேன். [200வரு அளவினவாகிய இந்நூல்களை இத்துணைப் பிறழ்ச்சியுற்று உண்மைகாண்டற்கியலாவாறு கலக்கந்தருமேல் பலநூறு வருஷங்கட்கு முன்னுள்ள சங்கநூல்கள் பலவற்றையும் ஆராய்ந்து வெளியிட்ட ஸ்ரீமத் மஹாமஹோபாத்தியாயர் வே. சாமிநாதையரவர்கள் என்ன கஷ்டப்பட்டிருப்பார்களென்பதை நினைத்து நினைத்து உருகுகின்றேன் "பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம்"] இன்னுஞ் சிலபிரதிகள் தேடியாராய்ந்து வெளியிடலாமெனக் கருதிய யான் 2வரு காலமாக இருதையவியாதியால் மிகத்துன்புற்று வீட்டைவிட்டு வெளிப்போந்துலவக்கூடாவாறு தளர்ச்சியுற்றமையால் நீர்க்குமிழியாகிய யாக்கையுள்ளபோதே வெளிப்படுத்தவேண்டுமென்ற வேட்கை மிகுதியால் இயன்றவரை சுத்தப்பிரதியாக்கி முன்னரே அச்சிடப்பெற்றுள்ள "சிங்கைச்சிலேடைவெண்பா" என்றநூலையும் உடன்சேர்த்து அச்சிடுவித்தேன். சிலேடை வெண்பா நூலுக்குப் பொருள் விளங்கும்படி உரையெழுதி உடன்சேர்த்து வெளியிட விரும்பி அறிந்தவரை உரையும் எழுதிமுடித்தேன். காகிதப் பஞ்சத்தாலும் காலநீட்டிக்காமல் வெளிப்படுத்த வேண்டுமென்ற உட்கருத்தாலும் அவ்வுரையை இப்புத்தகத்தில் வெளியிடவில்லை. திருவருள் கூட்டுமேல் பின்னர் சிலேடைவெண்பா மூலமும் உரையும் தனிப்புத்தகமாகவெளியிடுவேன்.

இப்புத்தகத்தை அச்சிடுங்கால் கல்விவகையாலும் பொருள் வகையாலும் எனக்குவேண்டு முதவிகளைச்செய்து அன்புபாராட்டிய

தக்கார்கட்கு மிக நன்றி கூறுகின்றேன். இப்பேருபகாரிகட்கு உலகம்மை திருவருள் பெருகுவதாக.

இந்நூல்களில் நோய்த்துயர் மிடித்துயர் பிறப்பிறப்புத்துயர் யமதண்டனைக்கொடுமை முதலிய பலவிஷயங்கள் மிகவும் உருக்கத்துடன் இனிமையான சொற்களாற் றொடுக்கப்பெற்றுள்ளன. கொச்சகக்கலிப்பா சந்தவிருத்தம் இவ்விரண்டனுள்ளும் ஆங்காங்கு மிகக்காணலாம். இவற்றிலுள்ள நயங்களை யெல்லாம் யானெடுத்துக்காட்டல் மிகையாம். இவற்றுள் எந்தநூலிலேனும் சிலகவிகளைப்படிப்பவர் தாமே மனங்கசிந் துருகுவரென்பது நிச்சயம். இயற்கையாகவே ஆராய்ச்சிக் குறைவுள்ளயான் பிணித்துயரால் மனநிலை குன்றியிருக்கும் இக்காலத்துஇச்சிறந்த நூல்களை வெளியிடப்புக்கமையால் எத்தனையோ குறைகளிருக்கலாம். "குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல், கற்றறிந்த மேலோர் கடன்" என்பதைக் கூறி நிறுத்துகின்றேன்.

உலகம்மை திருவடிகளே சரணம்.

மதுரை 25-3-17.
தெற்காவணிமூலவீதி

இங்ஙனம்
மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

உ

சிவமயம்.

## நூலாசிரியராகிய நமச்சிவாயக் கவிராயர்

# சரித்திரச் சுருக்கம்.

புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டத்தில், பூமிதேவியின் மார்பின் மதாணி போன்றதும், கூடல் முதல் இராமேசுவரம் ஈறாக வுள்ள பதினான்கு திருப்பதிகளையும், முதலிடை கடையென்னும் முச் சங்கங்களையும் தன்னகத் தடக்கியதுமாகிய, பாண்டி நாட்டில், "தமி ழெனு மளப்பருஞ் சலதிதந்த" ஆசிரியர் அகத்தியனார் எழுந்தருளி யிருக்கும் பொதியமலைச் சாரலின்கண்ணுள்ள விக்கிரம சிங்கபுர மென்னும் திப்பிய திருப்பதியின்கண், சைவவேளாளர் மரபிலுதித்த முக்களா லிங்கர் என்னும் பெரியாருக்கு; இற்றைக்கு நூற்றெண்பது வருடங்களுக்கு முன்னர் நமச்சிவாய ரென்னும் பெருந்தகையாளரும், சுத்தாத்துவித சைவ சித்தாந்திகளாகிய யாமெல்லாம் இறைவனடிப் புணைசேர்ந்து பிறவிப் பெருங்கடல் நீந்தி யுய்யும்வண்ணம், வடநூற் கடலையும் தென்னூற்கடலையும் நிலைகண்டுணர்ந்து தமிழிலுள்ள சிவ ஞானபோதமென்னும் அரும்பெரு நூலுக்கு மாபாடியமியற்றியரு ளிய ஆசிரியர் மாதவச்சிவஞான யோகிகளை, அருமைத் திருக்குமார ராகப் பெறுதற்கு முன்னர் அருந்தவம்புரிந்த ஆனந்தக்கூத்த ரென்ப வரும், புத்திரராக அவதரித்தனர். இவர்களைத் தந்தையார் உரிய பருவத்திலே நல்லாசிரியனையடைந்து கல்விகற்கும் வண்ணம் செய் தனர். இவர்கள் ஆசிரியர் மாட்டுப் பேரன்புடையராய், வழிபாடு முதலியன செய்தலிற் சிறிதும் முனிவின்றி ஆசிரியருள்ளத் தருள் சுரக்கும் வண்ணம் ஒழுகிக் கற்றுவருவாராயினர். அவ்வாசிரியர் திருவருட்பெருக்கினால், இவர்கள் ஐயந்திரிபறக்கற்றுப் பண்டிதரா யிருந்ததோடு, "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க வதற்குத் தக" என்னு முதுமொழிக் கிணங்க ஜீவகாருண்யம், ஈசுவரபக்தி, பொறை, அடக்கம், வாய்மை முதலிய எல்லா நற்குணங்களும் அமை யப் பெற்றிருந்தனர்.

இவ்விருவருள், நமச்சிவாய ரென்பவர் நாடோறும் தம்மூர்ப் புறத்தேயுள்ள பாவநாச மென்னும் திப்பிய திருப்பதிக்குச் சென்று, தாம்பிரவர்ணியில் நீராடிச் சிவபூசை முதலியன செய்து முடித்துத் திருக்கோயிலிற் சென்று, சுவாமிதரிசனஞ் செய்து தம்மூர்க்கெழுந் தருள்வதியல்பு. இங்ஙனம் நிகழுங்காலத்து, அப்பாவநாசத்தில் திருக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் உலகாம்பிகையை உபாசனு மூர்த்தமாகக்கொண்டு, இடையறாப் பேரன்புடன் உபாசித்து வந்த தோடு, அம்பிகை சந்நிதியினின்று கரைந்து கரைந்துருகிக் கண்களி னின்றும் ஆனந்த அருவி சொரிய, உரோமாஞ்சங் கொள்ள, நாத்தழு தழுப்ப, உரைதடுமாறப் பரவசமுற்று, அவ்வம்பிகையின் திருவரு ளால் அமிழ்தினுமினிய பலதமிழ்ப்பாடல்களைப் பாடித் துதித்து வருவாராயினர். இப்பெருந்தகையார் இயற்கையிலேயே செல்வத்த ராகலின், ஏனையபயனில் முயற்சிகளையெல்லாம் ஒழித்துத்தம்மாட்டு விரும்பிக் கற்கவரும் நன்மாணுக்கர்கட்கு இலக்கியம், இலக்கணம், சித்தாந்த சாஸ்திரம் முதலிய நூல்களைக் கற்பித்து வந்ததோடு, இறைமைக்குணம் முற்றுமுடைய உலகாம்பிகையின் பொருள் சேர் புகழையே எக்காலத்தும் புகழ்ந்து வந்தனர்.

இவர் இங்ஙனம் ஒழுகுங்காலத்து இவர்தந்தையாராகிய முக் களாலிங்கர், தம்மரும்பெறற் குமாரரையழைத்து என் அருமைக்கண் மணியே! பிதிரர்கடன் தேவர்கடன் முனிவர்கடன் முதலியன செய் தற் பொருட்டு நீ ஒரு கன்னிகையை மணந்து இல்லறம் நடத்துவா யென்று கட்டளையிட்டருளினர். அது கேட்ட நமச்சிவாயர் என் றும் ஒரு பெற்றித்தாய பேரின்பத்தை யெய்துதலே தந்துணிபென் பதைக் குறிப்பாலறிவித்து, மௌன முற்று நின்றனர். இவர் குறிப் பினையறிந்த தந்தையார், "குழந்தாய்! வேத சிவாகமங்களில் கூறிய பிரமசரியமாகிய முதனிலையில் நிற்கும் நீ, இதனையடுத்த இல்லற தரு மத்தை நாடாது இறுதி நிலையாகிய துறவறத்தை மேற்கோடல் வேத வழக்கோடும் ஆன்றோர் வழக்கோடும் மாறுபாடாம்; ஆகலின் அந் நினைவை முற்றும் ஒழித்தி" யெனப்பணித்தனர். நமச்சிவாயர் இச் சின்னீரவின்பமாகிய உலகபோகங்களைக், கான்ற சோறெனக் கரு துங் குணமுடையராயினும் "தந்தைசொன் மிக்க மந்திரமில்லை" என் னும் முதுமொழியையெண்ணி, அதற்குடன்பட்டு அவர் கருத்தின்

படி ஒரு பெண்ணருங்கலத்தினை மணந்து கமலபத்ரோதகம்போல இல்வாழ்க்கையினின்று ஒழுகுவராயினர்.

இங்ஙனம் ஒழுகும் நாளில், அம்பிகையின் திருவருளால் அவ்வம்மையார் திருவயிற்றில் அரும்பெறற் பெண்மகவொன்று உதித்துப் பிறைச்சந்திரனையொப்ப வளர்ந்து வந்தது. இவர் நாடோறும் இரவின்கண்ணே கோயிலுக்குச் சென்று, அம்பிகை தரிசனஞ் செய்து, தம்மில்லிற் கெழுந்தருளும் பொழுது பத்திச்சுவைநனி சொட்டச்சொட்டப், பல இனிய தமிழ்ப்பாக்களைப் பாடிக்கொண்டே வருவர். இவ்வன்பர் அன்பினொடு கனிந்துபாடும் பாடலின்சுவையைச் செவிமடுத்து அகமகிழவும், இவர் பெருமையையறிந்து உலகத்தாருய்யவும், திருவுளங்கொண்டு உலகாம்பிகை, ஒருநாளிரவு அர்ச்சகர் அலங்கரித்திருந்த அலங்காரத்தோடு ஒருகன்னிகைவடிவங்கொண்டு மறைந்து, இவ்வன்பர் பின்னே எழுந்தருளிவர, நமச்சிவாயர் தம்மன முதலிய கரணங்களெல்லாம் அம்பிகையின் பாதபங்கயத்துச் செல்லுதலால், மெய்ம்மறந்து வாயிலுள்ள எச்சில், புறத்தே தெறிக்க "எம்மிதயாலயத்தெம்பெருமன்னையே! என்னையாண்டருள்புரிகுவதியாண்டே" என்னும் கருத்தமைந்த பாடலைப்பாடித்துதிக்க; புறம்போந்த அவ்வெச்சிற்றுளிகள் அவரோடு மறைந்துவந்த அம்பிகையின்மீது தெறிக்க, அத்திருக்கோலத்துடனே கோயிலின்கட் சென்று எழுந்தருளி இருந்தனள். மறுநாள் வைகறையில் வழக்கம்போலத் திருப்பள்ளியெழுச்சிக்குக் கோயிலின்கட் புக்க அருச்சகர், அம்பிகை துகிலில் எச்சுற்றுவர் படிந்திருப்பதைக் கண்டு மனந்துணுக்குற்று, அந்தோ இவ் வநுசிதம் புரிந்தார் யாவர் கொல்லோ! வென, மனங்கவன்று, மறுக்கமெய்தி, சிறிது பொழுது நெடிதுயிர்த்து ஒருவாறு தேறி, இத்தகைய கொடுஞ்செய்கைகள் இனி நிகழாவண்ணம் தடுக்கவெண்ணி அக் கோயில் தானிகர்க்குத் தெரிவிக்க, அவர் ஆண்டு சுவாமி தரிசனத்தின் பொருட்டு மதுரையம் பதியினின்றும் போந்த கர்த்தாக்களெனப் பெயரிய அரசரிடம் விண்ணப்பித்தனர். அவ் வரையர் வந்து இதைக் கண்ணுற்றுப் பெரிதும் வருந்தி, இத் தீச்செயல் புரிந்தாரை எவ்வாற்றானும் அறிந்து ஒறுப்பலெனக்கூறி, அர்ச்சகரையழைத்து சம்புரோக்ஷணம் முதலியன செய்து, பூஜை நடைபெறுமாறு பணித்துத்தம் முறையுள் புக்கனர். அன்றிரவில் அவ்வரையர்

எம் பெருமாட்டிக்கும் இங்ஙனம் நிகழ்ந்ததே யெனக்கவன்று, நெடு நேரந் துயிலின்றி வதிந்தபின்னர், அம்பிகையின் திருவருளால் சிறிது துயில்வர, அம்பிகை யவர்கனவிற் றோன்றி, "அன்பனே! நின் மனக் கவல் ஒழிக; நம்மாட்டு இடையறாப் பேரன்புடைய நமச்சிவாய னென்பான் திருக்கோயிலில் நம்மைத் தரிசித்துத் தன்னூர்க்குச் செல்வுழி, நம்மீது அன்பு மயமாகிய இனிய கவிபாடிக்கொண்டே செல்வானாகலால், அப் பாமாலையைக்கேட்கும் வேட்கை மிகுதியால் அவனைப் பின்பற்றிச் சென்றோம். அவன் நமக்குப் பாமாலை புனைந் தலங்கரித்ததேயன்றி, நம் கலைக்கும் ஓர் அணியணிந்தனன். அது நமக்கு மிக்க உவப்பைத் தருவதாகும்; ஆகையால் அதுபற்றி அவனை வருத்தற்க" எனத் திருவாய் மலர்ந்தருளி மறைந்தனள். அரசர் விழித்தெழுந்து, இது கனவோ நனவோ என ஐயுற்றுத்தெளிந்து, அம்பிகையின் திருவளைவியந்து பாராட்டினர். பின்னர் மறுநாளுத யத்தில் ஏவலரைக் கூஉய், நமச்சிவாய ரென்னும் பெருந்தகையா ளரை யழைத்து வம்மின் எனக் கட்டளையிட, அவ்வாணையைச் சிர மேற் கொடு அவரை யழைத்து வந்தனர். அரையர் நமச்சிவாயரை நோக்கி, ஐய! நீவிர் நேற்றிரவில் கோயிலின்கட் சென்று அம்பிகை யின்மீது எச்சிற்றம்பலத்தை யுமிழ்ந்து அநுசிதஞ் செய்ததாகக் கேள்வியுற்றனன்; அங்ஙனம் செய்தற்குக் காரணம் என்னையென வினவ, அவரொன்றுந் தோன்றாது திகைத்து, அரசே! யான் நேற் றிரவு கோயிலின்கட்சென்று, அம்பிகையைத் தரிசனஞ் செய்ததுண் மையே; இத்தகைய அநுசிதத்தைப் புரிந்தேனல்லன்; தரிசனஞ் செய்து எம்மில்விற் கேகுங்கால், தாம்பூலந் தரித்துச் சென்றேனே யன்றி வேறொன்று மறிந்திலேனென உள்ளவாறுரைத்தனர். அரை யர் அப் புலவர் பெருமானின் பக்தி மேம்பாட்டைச் சோதிக்கவெண் ணிக் கோயிலுக்குவம்மின் என உடன் கொண்டு சென்று, அவரை அம்பிகை சந்நிதியில் நிறுத்தி, அம்பிகையின் கையில் ஒரு பூச் செண்டைவைத்துப் பொற்கம்பிகளால் இறுகப்பிணித்து, "ஐய இச் செண்டு நம் கையில் வரப்பாடுக" எனக் கூறினர். நமச்சிவாயர் அம்பிகையின் திருவருளால் ஓர் கலித்துறையந்தாதிபாட, கவிக்கொரு சுற்றுக் அறுந்து,

"விண்டல நின்ற சரற்கால சந்த்ரசு வேதமுக
மண்டல முங்கை மலரொடுந் தோளின் வழிந்தரத்ந
குண்டல மும்பொலி வாலப் பிராயக் குமாரத்தியாய்ச்
செண்டலர் செங்கை யுலகாளென் னுவிற் சிறந்தனளே"

என்னும் தொண்ணூற்றூருங் கவியைப்பாடி முடித்தவுடன், அச் செண்டானது அம்பிகையின் திருவருளால் நமச்சிவாயர் கையின் கண்ணே வந்தது. இவ்வற்புதச் செயலைக்கண்ட அரசரும் ஏனையோரும், அம்பிகையின் திருவருளையும், நமச்சிவாயர் அன்பையும் வியந்து, புகழ்ந்தனர். பின்னர் இப் புலவர் பெருமானுக்கு அரையர் பரிசில் முதலியன கொடுத்துப் பலவகைச் சிறப்புச் செய்தனர். நமச்சிவாயர் எஞ்சிய நான்கு கவிகளையும் பாடிமுடித்து, அம்பிகையின் பாதப்போதில் இடையறுப் பேரன்புடையரா யொழுகுவாராயினர்.

இங்ஙனம் ஒழுகும் நாளில், கன்மத்துக்கீடாய்க் குன்மநோயெய்த, அதனுல் மிகத் துயருழந்து வருந்தி, அம்பிகையின்மீது அந்நோய் நீங்குமாறு பல இன்னிசைப்பாக்களைப் பாடியும், அந்நோய் நீங்கப்பெறுமையால், மீண்டும் அம்பிகையின்மீது சிங்கைக் கொச்சகக்கலிப்பா எனப் பெயரிய நூலொன்றையியற்ற வெண்ணிப்பாடுங் காலத்து, அந்நோய் அதிகரித்தமையால்,

"பைமருந்தும் வாகடநூற் பண்டிதனூர் கொண்டுவந்த
கைமருந்து மேதுமஞ்சட் காப்புமருந் தொவ்வாதாற்
செய்மருந்து பின்னிடுமுன் றீர்த்தமருந் துண்டுபிணிக்
குய்மருந்து வேறே துலகுடைய மாதாவே"

எனவரும் இப்பாடல் முதலிய பலபாடல்களைப்பாடிப் புலம்பி வருந்தினர். எத்துணைப் பெரியாரும் பிராரத்த கன்மத்தை யனுபவித்துக் கழிக்க வேண்டுவது நியமமாதலால், இங்ஙனம் பலவாறுகப் பாடியும், அந்நோய், நீங்காது மேன்மேலும் அதிகரித்து வருத்த, அவ் வருத்தம் சகியாது, கொடும் பிணியுடனிருந்து வருந்துவதிலும் உயிர் துறப்பதே சாலவும் நலமெனக்கருதிக் கல்யாண தீர்த்தத்தின் கண் இழிந்தனர். அவ்வமையத்து, அம்பிகைதோன்றி, "அன்பனே! என்னகாரியஞ்செய்தனை ; நீ நம்மாட்டு உழுவலன்புடையையாதலின்

இந் நோயை இப்பொழுது யாம் தீர்ப்பினும், நீ முற்பிறவிகளி லீட்டிய கன்மங்கள் நின்னுயிர் புக்குழிப்புக்கு வருத்து மென்பதையறிதி" எனத் திருவாய் மலர்ந்தருளினர். அதனைச் செவியுற்ற நமச்சிவாயர், அன்புருவாகிய தாயே! இப் பிறவியிலேயே இக் கன்ம நோயை அநுபவித்துக்கழிப்பல்; இனி யொரு பிறவியும் வேண்டகில்லேனென விண்ணப்பித்து, ஆண்டு நின்றும் போந்து, திருக்கோயிலுட்புக்கு, அம்பிகையையும் சுவாமியையும் தரிசனைசெய்து, "என்குடி முழுதாள்க" என்னு முதற்குறிப்புள்ள செய்யுள் முதலிய பலபாக்களைப் பாடித் துதித்துத் தம்மில்லிற் கேகினர்.

இவர் இங்ஙனம் ஒழுகும் நாளில், அருந்ததியன்ன பெருந்திறற் கற்பினையுடைய இவரது மனைவியார், அம்பிகையின் திருவடி நீழலையடைய, நமச்சிவாயர், இதுவும் அம்பிகையின் செயலெனவெண்ணி மனஞ்சலியாமல் தம்மொழுக்கநெறியிற் சிறிதும் வழுவாது நின்று, தாயினையிழந்த தம்மரும் பெறற்புதல்வியைப் பாதுகாத்துவருங் காலத்து, ஒரு நாள் மாலைப்பொழுதில், வழக்கம்போல, பாவநாசத்துக்குச் சென்றிருந்தனர். அவ்ரது புதல்வியாரும் சமையற் றொழிலினை முடித்துக் கோயிலுக்குச் சென்றிருந்த தந்தையார் வரவினை எதிர்பார்த்திருக்கும் அமையத்துப் பூப்படைந்தனர். பூப்புற்ற அவ்வம்மையார் தம்தந்தையார் வந்தவுடன் அமுதுபடைக்கும் வண்ணம், அயலகத்துள்ளதோர் மாதினைவேண்ட, அவ்வேண்டுகோளுக்கு அவ்வம்மையார் இசைந்தமைகண்டு ஆண்டுச்சிறிது பொழுது தாழ்த்தனர். அவ்வமையத்தில் நமச்சிவாயர் தம்மில்லிற் கெழுந்தருள, அன்பரன்பிற் கெளியளாகிய உலகாம்பிகை, அவரது புதல்வியாரின் திருவுருக்கொண்டு, நமச்சிவாயரை யன்போடு வரவேற்று, அன்ன முதலிய படைத்து உபசரிக்க, நமச்சிவாயர் உண்டு, கரசுத்தி செய்தற்கு வெளி வரும்போது, அவரது புதல்வியாரால் வேண்டப்பட்ட அவ்வம்மையார் வந்து, ஐய! தாங்களே படைத்துண்டீர்களோ? அல்லது வேறு யாரும் படைத்தனரோ? என வினவினர். உடனே நமச்சிவாயர் என் பெண்மணியே அமுது படைத்தனளே யல்லது வேறொருவரும் படைக்கவில்லை யென்றனர். அவ்வம்மையார் ஈதென்ன ஆச்சரியம், நும் புதல்வி பூப்படைந்து எம் மில்லின் கணுள்ளாள். அவள் என் தந்தையாருக்கு இன்று அன்னம் படைத்திடுயென வேண்ட

அவ் வேண்டுகோட்கிணங்கித் தங்கட்கன்னம் படைக்க என்னில்லின் கண்ணிருந்து விரைந்து வருகின்றேன், எனக் கூறினர். உடனே நமச்சிவாயர், மனந்துணுக்குற்று, இச்சூழ்ச்சியை யாதெனவறியேன் என மனங்கவன்று, தம் மில்லினுள்ளே சென்று, தம் புதல்வியைத் தேடிக்காணப் பெறுமையால்; உலகாம்பிகையே தம்மாட்டுக் கருணை கூர்ந்து இத் திருவுருக் கொண்டு எழுந்தருளி வந்தனள் என வெண்ணிக், கண்களினின்றும் ஆனந்தவருவி சொரிய, உரோமாஞ்சங் கொள்ள, அம்பிகையைப் பாடித் துதித்தனர். இவ் வற்புதச் செயலை யறிந்த யாவரும் பேராச்சரியமுற்று, புலவர் பெருந்தகையின் பக்தி மேம்பாட்டை வியந்து, அவரைப் பெரிதும் பாராட்டினர்.

இங்ஙனம் நிகழும் நாளில், தம் புதல்வியாருக்குத் திருமணம் செய்யக்கருதி, ஒத்த பண்பும், குலனும், ஒழுக்கமும் வாய்ந்த ஒரு மணமகனைத் தேடி மணஞ்செய்வித்துப், பின் தீர்த்தயாத்திரை தல யாத்திரை செய்யக்கருதி, பல தலங்கட்கும் சென்று, சுவாமி தரிசனம் செய்துகொண்டு, இராமேசுவரத்தை யடைந்து இராமநாதரைத் தரிசித்தனர். அவ் விராமநாதரைத் தரிசித்த பலன் சேதுமன்னரைக் காணின் உளதாம் என்னும் ஐதிக முண்மைபற்றி, அவ்விறைவனைக் காண்டற்கு இராமநாதபுரம் சென்று, அம் மன்னர் கடைத்தலையிற் பலநாட் காத்திருந்தும் அம்மன்னரைக் காண்டற்கு அமையம் வாய்க்கப்பெறுமையால் மனங்கசிந்து,

"முத்தலை சிந்தும் பொருநா நதித்துறை மூழ்கியெழுந்
தத்தலை நின்று விடாயாறிக் கல்வி யளைந்து நறுங்
கொத்தலர் சும்பகக் காவோடு நின்று குலாவியயான்
இத்தலை வந்து கடைத்தலை காத்த விளந்தலையே"

என்னுங் கவியைப்பாடினர். இதனைச்செவியுற்ற சேதுமன்னர், வாயிலிற் போந்து, இப்புலவர் பெருமானைக் கண்ணுற்று ஐய! நீவிர் யாவர்? என வினவ, அரசே! யான் பாவநாசத் தலத்தின்கண் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்ற உலகாம்பிகையின் சந்நிதியினின்று அவ்வம்மையார் புகழை அநவரதமும் பாடித் துதிக்கும் புலவன்; என்னை நமச்சிவாயர் என அழைப்பர், என்றனர். அம் மன்னர், இப் புலவர் பெருந்தகையாரது கல்வியின் அருமையும்

பெருமையும் அம்பிகைமாட்டுப் பேரன்புடைமையும் முன்னர்ப் பல ராலும் கேள்வியுற்றிருந்தனராகலின், உடனே கட்டித் தழுவி முக மன்கூறித், தம் அரண்மனைக்குள் அழைத்துச்சென்று, ஆசனத் தமரச்செய்து, இனியமொழிபலபுகன்று, உபசரித்துச், சிறிதுநேரம் அளவளாவி வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். அவ் வமையத்து, இவரது கவியில் தெய்வத்தன்மையுண்டென்று கேள்வியுற்றிருந்தன ராகலின் அதனைச்சோதிப்ப தெங்ஙனமென மன்னர்கருத அதைக் குறிப்பாலுணர்ந்த நமச்சிவாயர், அரசன் அருகேநின்ற அடைப்பைக் காரனையழைத்து, அவன் நாவில் திருநீற்றையும் மஞ்சட்காப்பையும் இட்டுப்பாடுகவெனப் பணித்தவளவில், அவன்,

"பாவுக்குள் ளேயரன் பாதிக்குள்ளே பன்னி ரண்டுமடற்
பூவுக்குள் ளேகவ் கோணத்தி லேதென் பொதியைவரைச்
சார்புக்குள் ளேவந்து நின்றதல் லாவுல கம்பிகையென்
னாவுக்குள் ளேவந்து நின்றுடன் கீர்த்தி நடாத்தவென்றே"

என்னும் கவியைப்பாட, அரசரும் கேட்டுவியந்து, நமச்சிவாயரைப் புகழ்ந்து பாராட்டினர். பின்னர் அரசர் சிவிகை முதலிய விருதுகள் கொடுத்து இவரை மேன்மைப்படுத்தினர். இங்ஙனம் விருது முதலி யன பெற்று, நமச்சிவாயர் தம்மூர்க்குச்செல்ல வெண்ணி, வழியி லுள்ள பிற தலங்களையும் வணங்கித் தம்மூரை யடைந்தனர். தாம் பெற்ற விருது முதலியனவெல்லாம் அம்பிகையின் திருவருளால் கிடைத்தனவென் றெண்ணி, அவற்றை அம்பிகையின் சந்நிதியிற் சேர்த்து, அம்பிகையினிடத்து இடையறாத பேரன்புடையாராய் இன் புற்று, சின்னாளிருந்து, உலகாம்பிகையின் திருவடி நீழலையடைந் தனர். அஞ்ஞான்று;

"பாரிலே நமக்கொருவர் சரியோ தென்றற்
பருவதத்தில் வருதாம்பிர பர்ணி யாற்று
நீரிலே மூழ்கிவினை யொழிந்தேஞ் சைவ
நெறியிலே நின்றுநிலை பெற்றேஞ் சிங்கை
யூரிலே குடியிருந்தே மெமது கீர்த்தி
யுலகமெலாம் புகழ்ந்தேத்த வுலக மாதின்

பேரிலே கவிதையெல்லாஞ் சொன்னேஞ் சொன்னேம்
பிறப்பிலெழு பிறப்பு மறப் பெறுகின்றேமே.”

என்னும் இக்கவியைத் திருவாய்மலர்ந்தருளினர் என்பர்.

இப் புலவர் பெருமான், அவ்வவ் வமையங்களில் பாடிய தனிப் பாடல்கள் இன்னும் எத்தனையோ உள்ளன. இவையன்றி கலித்துறையந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, கொச்சகக்கலிப்பா, பிள்ளைத் தமிழ், சிங்கைவெண்பா, சாந்தவிருத்தம், *வண்ணம் முதலிய பிரபந்தங்களும், இப் புலவரால் இயற்றப்பட்டனவாம். இவர் திருவாய் மலர்ந்தருளிய இப் பிரபந்தங்கள், அருட்கவியின்பாற்பட்டு இன் சுவை முதிரப்பெற்றுக் கற்பனலங்காரங்களுடன் சுத்தாத்துவித சைவ சித்தாந்த நுண்பொருள்க ளமையப்பெற்றுக் கற்போர் நெஞ்சங் கழிபேருவகை பூப்பச் செய்வதோடு, இம்மை யின்பங்களையு மெய்தற்கேதுவாய் இருக்கும், என்பது துணிபு.

இப் பிரபந்தத்திரட்டுப் பழைய தாலபத்திரப் பிரதிகளில் “பாவநாசத் தலபுராணம் பாடிய முக்களாலிங்கமுனிவர் புதல்வரும், ஆனந்தக் கூத்தரின் இளைய சகோதரருமாகிய நமச்சிவாயக் கவிராயரவர்களியற்றிய பிரபந்தங்கள்” என்று எழுதப்பட்டிருத்தலால் இதிலிருந்து பார்க்குங் கால் நமச்சிவாயக் கவிராயரவர்கள் திராவிடமாபாடிய கர்த்தாகிய ஸ்ரீ-மாதவச்சிவஞான யோகிகளின் சிறிய தந்தையாயிருக்கலாமெனத் தெரிகின்றது. சிவஞானயோகிகளுக்கு முக்களா லிங்கரென்னும் பிள்ளைத்திருநாம மிருந்ததும், யோகிகளின் தந்தையார் ஆநந்தக் கூத்தரென்பதும் சிவஞானயோகிகள் சரித்திரவாயிலாக விளங்குகின்றன. இதனுல் ஆனந்தக்கூத்தர்தம் அரும்பெறற் றவப்புதல்வருக்கு முக்களாலிங்கரென நாமஞ்சூட்டினதுகொண்டு ஆநந்தக்கூத்தரின் தந்தைபெயர் முக்களாலிங்க முனிவரென்பதும் பொருத்தமுடையதாகின்றது. தந்தைபெயரை மைந்தர்க்கிட்டு வழங்குவித்தல் தமிழ் நாட்டுப் பெருவழக்காறுதலாலென்க. அன்றியும் பாவநாசத் தல புராணம் ஆறை அழகப்பமுதலியாரவர்கள் கேட்ப அரங்கேற்றப் பெற்றதென்பது அந்நூல் புராணமகிமைச்சருக்கம். 23-வது செய்யுளில்,

---

* வண்ணமும் ஏனைய பிரபந்தங்களும் அகப்படவில்லை.

"அம்பொன் மாளிகை யாறைவாழ் மயிலப்ப னருள்குமார சுவாமி
தம்பி யாமுகில் புகழ்ச்சிவ சயிலநா தனுக்குமுன் னவனுனேன்
கம்ப மாகரி காத்தரு ளழகப்பன் கனிந்தவன் பொடுகேட்ப
வும்பர் நாயகர் சந்நிதா னத்தினி லுரைத்ததிக் கதையாமால்"

எனக் கூறப்பெற்றுளதாதலால் அழகப்பமுதலியாரவர்கள் காலமும் முக்களாலிங்க முனிவர்காலமு மொன்றுவென்பதை நோக்குவோம். அழகப்பமுதலியாரவர்கள் காலம் இற்றைக்கு 210 வருடங்கட்கு முன்னதாகத் தெரிகிறது. மாதவச்சிவஞான யோகிகள் பரிபூர்ணமாகி 131 வருடங்களாகின்றன. அதன்முன் மாதவச்சிவஞானயோகிகள் ஜீவிய காலமும் ஆனந்தக்கூத்தர் காலமும் 80-வருஷம் இருத்தல் அமையும். ஆகவே ஆறை அழகப்பமுதலியாரவர்கள் காலமும் பாவநாசத்தல புராணுசிரியராகிய முக்களாலிங்க முனிவர்காலமும் இற்றைக்கு 210-வருஷங்கட்கு முற்பட்டுள்ளதென்பதும் பொருத்தமுடையதேயாம்.

திருநெல்வேலி இந்துகலாசாலைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த சிறந்த தமிழ்வித்துவானும் சிவபூஜாதுரந்தருமாகிய அனந்தகிருஷ்ணக்கவிராயரவர்களும், பாவநாசத் திருக்கோயிற் றருமகருத்தாயிருந்த விக்கிரமசிங்கபுரம் புதுவீடு சுப்பையாபிள்ளையவர்களும் இந்த நமச்சிவாயக் கவிராயரவர்களின் பெண்வழிச் சந்ததிகளேயாவர். இப் புலவர் பிரான் திருமரபு நீடூழிவாழ்க.

உலகம்பிகை திருவடிகளே சரணம்.

இங்ஙனம்,

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

உ

சிவமயம்,

பாவ நாசம் என்னும்

# சிங்கை உலகம்மை

## கலித்துறையந்தாதி.

### காப்பு.

முந்தாதி வேதப் பொருளாகுஞ் சிங்கை முதல்வியுல
கந்தாதி பாட வருள்செய்யு மேயெந்தை யார்சடைமேழ்
பிந்தாதி மாகர சந்திர ரேகை பிடித்திதழிச்
செந்தாதி னுலொர் சிவப்பேற்றுந் தாழ்கைச் சிறுகளிறே.

### நூல்.

உலகே பொதிய மலைப்பா ரிசநின் றுலாவுசுமங்
கலகே கயநடங் கண்டிருப் பாயிருக் காதிமறைப்
பலகேள்வி யுண்மைப் பொருளேயுன் பாதம் பணிவனப்பால்
விலகே னெறியை விலக்கேன் வினையை விலக்குவையே. (க)

விலக்குந் தரமல்ல வேயைம் புலாதிக்கும் வேள்பகைக்கு
மிலக்குந் தமியனு மென்னெஞ்சு மோநெட் டிருவிழிதேன்
கலக்கும் பொருநைத் துறைமுக் களாவையன் கைபுனைநித்
திலக்குங் குமத்தனத் தாயிது வோநின் றிருவுள்ளமே. (உ)

உள்ளத் திறங்க ளுலகே யுனக்கிங் கொளிப்பதென்ன
கள்ளத் திறங்களென் கன்மமன் றோநிட் களங்கமனப்
பள்ளத் திறங்குமுன் னுற்பல தாரைக்கு பாநதிநீர்
வெள்ளத் திறங்குவ தெந்நாள் சனன விடாய்கெடவே. (ங)

கெடுவா யெனையுங் கெடுப்பாய் மருண்டு கிலேசம் வந்தாற்
படுவாயுன் னோடு படுபவ ரார்வினைப் பாசநெஞ்சே
விடுவாயென் னம்மை யுலகா ளிடத்தின்பு வேண்டிலன்பு
நடுவா யவள்பத நாவாய் சனன நடுக்கடற்கே. (ச)

கடலுந் தரங்கமும் போலுல கேநின்ற கன்மமும்பா
மூடலுந் தொடர்ந்த வுறவென்சொல் கேனுறு கோடிதழி
மடலுங் குலேந்து மதுவூற்ற வெந்தை மதிச்சடைமேற்
படலுஞ் சிவந்த பதம்பாடி யுன்னையும் பாடியுமே. (ரு)

பாடுங் கவிக்கிரங் காயுல கேகொடும் பாவிக்குநீ
கூடும் புசிப்பன்றிக் கூட்டுவை யோதன்னைக் கொண்டுதப்பி
யோடுந் தனையு முழைத்திடுங் காலிவ் வுயிரகன்றால்
வாடும் பிறகிந்த மண்ணோ டறுதியிம் மண்ணுடம்பே. (சு)

மண்கொள்ளு மோவந்த விண்கொள்ளு மோநின் மகிழ்நர்மனத்
தெண்கொள்ளு மோவிஃ தேதோ வதிசய மெண்ணியெண்ணிப்
புண்கொள்ளு மோர்புன் மதியேனுங் காணவிப் போதிரண்டு
கண்கொள்ளு மோவுல கேயின்று நீநின்ற கட்டழகே. (எ)

கட்டிய செம்பட்டு முத்தா ரமுநின் கணவரைப் போய்த்
தெட்டிய கண்ணுந் திருத்தோடுந் தோளும் தெளிந்துநறுக்
கொட்டிய மென்மலர்க் கூந்தலுஞ் சாந்தக் குழம்பலம்ப
முட்டிய கொங்கையு மாயுல கேவந்தென் முன்னிற்கவே. (அ)

நிற்கும் பகிரண்ட மெல்லாந் தகர்த்துநிர்த் தூளிபடப்
பொற்குன்ற மும்பொடி யாகநின் றாடும் புனிதர்தமை
விற்குங் கடைக்க ணுலகேயுன் மாய விலாசவுண்மை
கற்கும் பெரியரல் லாற்சிறி யேனெங்ஙன் காண்பதுவே. (கூ)

காணக் கிடைத்தது நின்றிருக் கோலமென் கள்ளமனம்
பூணக் கிடைத்ததுன் பொன்மலர்த் தாளுன்னைப் போற்றிசெய்து
பேணக் கிடைத்த துலகெனும் பேர்பெற்ற பேறுகண்டு
நாணக் கிடைத்ததொன் றம்மா வதையென்ன நான்சொல்வதே (ய)

சொல்லப் படாதுல கம்மேநின் பேரெழிற் றோற்றமப்பாற்
செல்லப் படாது திகைத்துநின் றேன்பற்றிச் சிற்றுளியாற்
கல்லப் படாத கரும்பாறை நெஞ்சைக் கரைத்தினிமேல்
வெல்லப் படாதெழு மோகாந்த காரத்தை வெல்லுவையே. (கக)

வெல்வாயென் னம்மை யருளாற் புலன்களை வேங்கைகண்ட
புல்வா யெனவஞ்சும் புன்மைநெஞ் சேபிறை போலெயிற்று
வல்வா யமன்வரு மோவுல கேயென்று வாய்திறந்து
சொல்வாய் விழிக்கினுஞ் சோர்வா யுறங்கினுந் தும்மினுமே. (கஉ)

தும்முங் கனன்முத் தலைச்சூல பாணிநெஞ் சுக்குள்வைத்துச்
செம்மும் புதையற் றிரவிய மாமுன் சிலம்படியை
விம்மும் புளகத் தனத்துல கேயென் மிடறுளைந்து
கம்மும் படியித் தனைநாட் கதறியுங் கண்டிலனே. (கரு)

கண்டத்தி லேயன்று சற்றே கறுத்த கறுப்பனிலாத்
துண்டத்தி லேசெஞ் சுடர்காட்டு பாதத் துணைதுணையா
யண்டத்தி லேகண்ட தெல்லாமென் னம்மை யடியர்தங்கள்
பிண்டததி லேகண் டிருப்பார்கற் பாந்தரம் பின்னிடவே. (கச)

பின்னிட்ட கொந்தள பாரத்தின் மாலைப் பிரசமுண்டு
தென்னிட்ட வண்டின் சிறைக்காற்று மூர்ச்சனை தீர்க்கவந்து
முன்னிட்டு நின்றென் னுயிர்விடுங் காற்பத முந்தருவா
யென்னிட்ட மிங்கி துலகே யுனக்கிட்ட மெப்படியே. (கரு)

எப்படி நீதுணை செய்குவை யோவறி யேன்பிழைத்த
தப்படி யேனிச் சனனத்தி லேதள்ளத் தக்கதன்று
லப்படி யேழு பிறப்பினுஞ் சூழுமல் லாற்பகட்டுக்
கப்படி யூர்திக்கென் மேலே தினமுங் கடுந்தரவே. (கசு)

தரமோசென் றுண்டிப் பொருட்டாற் பிறர்வையத் தாழ்ந்துமண்
மரமோவிங் கெப்படிக் கேட்பதம் மாவிந்த வாழ்க்கையென்ன [ணே
திரமோபுன் சன்ம மினிப்போது நீவைத் திருந்ததிக
பரமோவுன் பொற்பதந் தாவுல கேபடும் பாடறிந்தே. (கஎ)

அறியாத தொன்றை யறிந்தனு பூதிவந் தானந்தமாய்ப்
பிரியாது நின்றுப்ர பஞ்சமெல் லாந்தள்ளிப் பின்னையொன்றுங்
குறியா திருந்துணைக் காணு விடிற்பிழைக் கும்படிக்கோர்
நெறியாதுங் கண்டதுண் டோவுல கேசொல்லு நீயெனக்கே. (கஅ)

எனக்கே சகாவுனை யன்றியுண் டோவென் றிருளெறிக்குங்
கனக்கேச பாரக் கரும்பநெஞ் சேயொருக் காணினைத்தாற்
றனக்கே சரீரம் பகிர்ந்தானை வாழ்வித்த தாயெளிவந்
துனக்கே சகாயம் புரிவாளொர் சிற்பத முன்பதமே. (கசு)

பதமென்ற தாமரைப் பூவுக்கு ளாறு பதச்சுரும்பா
யிதமென்று போயிருந் தாயிலே யேமுடை யாக்கையையற்
புதமென்று தாயுல கைப்பணி யாதென்ன புத்தியிதைச்
சதமென்று நீகெடுத் தாய்மன மேயெனைச் சந்ததமே. (உ0)

சந்தன பாரத் தனம்பிதி ரோடத் தமிழ்மறைச்சம்
பந்தன வாவறப் பால்கொடுத் தாய்விருப் பாவிகள
பெந்தன மாமிச் சடஞ்சுடு காட்டுப் பெருநெருப்புக்
கிந்தன மாகத் தமியேனு நெஞ்சு மிருந்தனமே. (௨௧)

தனத்தாசை யுண்டது நின்பூ சனையெண்ணிச் சற்சனங்க
ளினத்தாசை யுண்ட துனக்கன்பு வேண்டி ரகசியவுற்
பனத்தாசை யுண்டது சிற்பதங் காமித்த பாதகனேன்
மனத்தாசை யிவ்வள வம்மா வுலகுண்ட மாறங்கையே. (௨௨)

தங்கங் குழைத்த முலைத்தாள மொற்றித் தனிக்குழையா
னங்கங் குழைத்தவென் னம்மாசற் றேனு மகங்குழையாய்
பங்கங் குழைத்த புனல்போற் கலங்கிப் பரந்துதிரிந்
தெங்கெங் குழைத்து வளர்ப்பதென் சாண்குழி யிம்மட்டுமே (௨௩)

மட்டுண்ட தென்றெண்ண வேண்டாம் பிறர்தலை வாயிலிற்போய்த்
தட்டுண் டலைந்து தடுமாறித் தீவினைச் சங்கிலியாற்
கட்டுண்ட தென்னசொல் வேனுல கேயொருக் காலுமெய்த்தோர்க்
கிட்டுண்ட திங்கில்லை யேற்றுண்டு நான்பட்ட தின்னமுண்டே (௨௪

இன்னம் பராமுக மேனடி யார்க்கு மெனக்குமென்ன
பின்னம் பராபரித் தாற்பிழை யோமனப் பேய்க்கிசையப்
பொன்னம் பராபரை நல்குமென் றேசில புத்திசொன்னேன்
முன்னம்ப ராடப் படித்தசங் கீத மொழிக்கரும்பே. (௨௫)

கரும்போ வெனுஞ்சொல் லுலகேயென் விண்ணப்பங் கள்ளரும்பே
யரும்போல்வ னென்சொன் மொழிவதென் றேகுறிப் பாலிரக்கம்
வரும்போ லிருந்ததும் வாரா தெனவு மதிமருண்டே
னிரும்போ விரும்பல்ல வோவறி யேனுன் னிதையத்தையே. (௨௬)

இதையத் தெறித்த விருண்மாற்றி நின்னரு ளின்றிரவி
யுதையத் தெறித்த வெயிலொக்கு மேநின்று சூழறுகால்
புதையத் தெறித்த மதுக்கொன்றை யார்தம் புரிசடைக்கா
டதையத் தெறித்த பதத்தா லலைக்கு மரும்பிடியே. (௨௭)

பிடிபட்ட தன்றுன் சொருபத் தியானம் பிறந்துபிறந்
தடிபட்ட சன்மமெந் நாட்படு மோநின் றதிர்படுமெவ்
விடிபட்ட வெவ்வர வென்னநொந் தேனுல கேயெனக்கிப்
படிபட்ட துன்ப மினிப்போது நீமுகம் பார்த்தருளே. (௨௮)

அருளுக்குத் தென்மலைச் சந்தனச் சார லகண்டிதசிற்
பொருளுக்குச் சிங்க புரத்துல காளுக்குப் பூங்குழலின்
சுருளுக்குப் பைம்புய ரேற்கனின் றுளுக்குத் தொண்டுபட்டு
மிருளுக்குச் சிந்தை யிடைப்படு மேலுண்மை யென்படுமே. (உகூ)

படுக்கின்ற கண்ணியிற் பட்டிடு பட்ட பறவையைப்போ
லெடுக்கின்ற சன்மத் திடைப்பட்டு வீணி லிகபரமுங்
கெடுக்கின்ற கன்மங் கெடுப்பதென் றேவன்பர் கேட்டதெல்லாங்
கொடுக்கின்ற கற்பகக் கொம்பே யசல குலவல்லியே. (௩0)

குலவல்லி மேனை குமாரத்தி மூரற் குறுமுளைநித்
திலவல்லி சூடகச் செங்காந்த ளோதுபைந் தேங்கமழூற்
பலவல்லி தாமரைப் பூவல்லி மெல்லப் படக்கன்றுதா
ணிலவல்லி சூட மலையா சலப்பக்க னின்றபொன்னே. (௩க)

பொன்னா சையுமடப் பூவைய ராசையும் போலநிலத்
தின்னா சையுமெனக் கின்னா செயுமிதற் கேதுசெய்வே
னுன்னாசை மேற்கொண்டு வாழ்முக் களாவன யோகியென்போன்
றன்னாசை நோய்க்கு மருந்தேகல் யாண சவுந்தரியே. (௩உ)

தரியேனுன் பேரன்றி மற்றவர் பேரையுன் சந்நிதியைப்
பிரியே னினியிந்தப் பேயேன் பிறவி பிறந்திறந்து
திரியேன் வறுமைக்கென் செய்வேன் றவர்பின்பு சென்றுபரி
கரியே னுலகம்ம வேறென்ன வேண்டக் கடவதுவே. (௩௩)

கடவுங் கடுநடைக் கார்மேதி யூர்திதன் கையிலகப்
படவுங் கெடவுங் கடப்படு மோவின் பகீரதி போய்த்
தடவும் பவளச் சடையா னலர்ந்தசெந் தாமரைக்கை
தொடவுஞ் சிவந்த பதத்துல காளைத் துதிசெய்துமே. (௩ச)

துதிசெயுந் தொண்ட னெனக்கே முழுதுந் துணைசெய்துமேல்
விதிசெயுஞ் செய்கை வெறுஞ்செய்கை யாய்விட வேறுசெய்து
கதிசெயுந் தன்பதங் காட்டுங்கொ லோதரங் கப்பொருநை
நதிசெயுங் கம்பலை நீங்காத சந்நிதி நன்னுதலே. (௩௫)

நுதலைக் கிழித்துப் புறப்பட்ட தீக்கொலை நோக்கின்முழு
முதலைத் தமிழ்ச்சிங்கை முக்கள வீசனை மோகஞ்செய்யுந்
திதலைக் குரும்பைக் கரும்பேயுன் பல்லவச் சில்லரிப்பூங்
குதலைச் சதங்கைப் பதங்களுக் காட்பட்டுக் கொண்டனனே. (௩௬)

கொண்டே னுளத்துல கம்மநின் னூபுரக் கோகனகங்
கண்டே னொருவருங் காணாத காட்சியைக் கற்பகம்பூந்
தண்டே னுகர்ந்து களிதூங்கு மோர்சஞ் சரிகமென்ன
வுண்டே னிருந்தரு ளானந்த மாமமிர் தோதகமே. (௩௭)

ஓதன மான விடத்தா ரெழுத்திட்ட தொப்பவிலைச்
சாதன வோலையந் தாழ்குழை யாள்பதந் தன்னைநெஞ்சே
மாதன மாக மதித்தன மோகெடு வாய்மருண்ட
சேதன மாக விருந்தோம் பிறந்தென்ன செய்தனமே. (௩௮)

செய்தவம் போதன் முதலோ ரிதுவென்று தெய்வமலர்ப்
பெய்தவம் போருகப் பெண்பெரு மாளெம் பிராட்டியையென்
கைதவம் போத வுலகேயென் றேத்திலன் காலனினி
வைதவம் போத விழைத்தாய் பிழைத்தென்று வாதிக்குமே. (௩௯)

வாதித் தலைத்த வினைமாற்றி வாயுவை மட்டிருந்திச்
சாதித்த சித்தி தரும்யோக சாதனை தன்னிலொன்றிப்
பேதித்த தத்துவ மெல்லாங் குளானந்தப் பேரமுதாற்
சோதித் தவர்க்கென் னுலகா ளருள்வந்து தோற்றிடுமே. (௪0)

தோற்றேன் வினைப்பகை யைம்புல வேடருஞ் சூழ்ந்துமனந்
தேற்றே னறிவைச் சிறைப்படுத் தார்பசுந் தீங்குதலைக்
கோற்றேன் மொழியுல கம்மாசும் மாவவர் கோட்டிகொள்ள
வாற்றே னினிச்செய லற்றே னுனக்கின் றடைக்கலமே. (௪௧)

கலசந் தருமுனிக் காமணக் கோலமுங் காட்டிமந்தா
நிலசந் தனகிரிச் சாரலின் றூளமுன் னீதிமறைக்
குலசந் ததிக்குணப் பால்கொடுத் தாளையுட் கொண்டிருந்துஞ்
சலசந் திரசஞ் சலப்படு நெஞ்சைத் தடுப்பதென்றே. (௪௨)

என்றைக்கு நீதுணை யம்மாவென் னுவி யிறந்துவிடு
டன்றைக்கு மோடிவுந் தஞ்சலென் பாய்நச் சராவரையான்
மின்றைக்கு மாலையங் கோடீர காந்தி விளங்குபொலங்
கொன்றைக்கு மேற்றிய பொற்றாட் சிமையக் குலக்கொழுந்தே (௪௩)

கொழுந்து நிலவும் பிறைமான நாறுங் குழகன்முடிக்
கழுந்து வரிவிற் கனகா சலத்துன் கணவரொடு
மெழுந்து விடையிற் புறப்படு வாயுல கேயினிப்போய்
விழுந்து நிரையத் தழுந்தாதென் னுவி விடும்பொழுதே. (௪௪)

பொழுது கழிந்தது வீணே யெனக்கென்ன புத்தியுன்னைத்
தொழுது பணிந்து துதித்தில னேயிதைச் சொல்லிச்சொல்லி
யழுது புலம்பில் விடுமோ யமனினி யாயினுமென்
பழுது களைந்து புரப்பா யுலகம் படைப்பவளே. (சரு)

படைப்பா ரொருவ ரளிப்பா ரொருவரப் பாலொருவர்
துடைப்பார் பிறகு தொழில்வே றிரண்டு தொகுத்துவகுத்
தடைப்பா ரிருவ ரெனத்திரி வாருல கம்மமற்றுன்
கடைப்பார்வை செய்கின்ற தொன்றாலேந் தாதிக்கக் காருமே. (சசு)

காறுங் துவர்க்கும் புளிக்குங் கைப்பாமென் கவிமுறைப்பாட்
டேறுந் திருச்செவிக் கேறுதென் றாலு மெளியனுன்பேர்
கூறுந் தொழில்விட்டு மற்றோர் தவஞ்செய்து கொண்டுநின்னைத்
தேறும் படிக்குல கம்மவென் பாழ்மனஞ் செவ்வல்லவே. (சஎ)

செவ்விக் கலையின் மதியே மதியெனத் தீமையராக்
கௌவிக் கிடந்ததுங் கண்டிரங் காயெந்தை கண்ணுதலா
னௌவிக் கருங்க ணுலகேபொன் னுசையி னூற்பிறரை
வெளவித் திரிந்தன னிப்படி யோவென்னை வாழ்வித்ததே. (சஅ)

வாழ்வித்த தொன்றிலை யிந்நாள் வரையும் வறுமையினாற்
றாழ்வித்த தீங்கொரு சற்றல்ல வேயித் தனையுமிற்க
வீழ்வித்த தென்னை யருங்கொடு நோய்க்குள்வெவ் வேறுகெட்டே
னாழ்வித் தகமென்ன சொல்வே னுனக்கென் னுலகம்மனே. (சகூ)

அம்மனை பந்து கழங்காக் குலாசல மத்தனையு
மெம்மனை யங்கை யெடுத்தாடு நாளுல கீன்றெடுத்த
செம்மனை நுண்பருங் கிந்திரை கேள்வனத் தேவரெல்லாந்
தம்மனை யென்று புகுவா ரிவண்மலர்த் தாளிணைக்கே. (ருo)

தாளென்ற கிண்கிணிப் பங்கயப் பூவைத் தலையின்முடித்
தாளென்று சொன்ன தனைகமுன் டேயுன்னை யாதரித்துங்
கோளென்ற வல்வினை தீரா விடிலைய கோபிழைக்கு
நாளென்று மங்கல கல்யாண சுந்தர நாயகியே. (ருக)

நாயக மண்டல முக்கோணத் தேயுன்னை நாடுமிந்தப்
பேயக மண்டர்தம் பேறெண்ணு மோபெரும் பேருவரி
போயக மண்டிடுங் காவிரி யீந்தருள் புங்கவன்கைத்
தூய கமண்டல நன்னீர்ப் பொருநைத் துறையன்னமே. (ருஉ)

அன்னம் பழகும் பிடிநடை யாளுல கம்மை செம்மை
கன்னம் பழகுங் கயற்பார்வை வெள்ளக் கருணைக்குளே
முன்னம் பழகும் பழவடி யாரை முழுதுநம்பி
யின்னம் பழகும் பொழுதே வருமுத்தி யின்பங்களே. (௫௩)

இன்பந் தருநல் வினையில்லை யோவெளி யேற்குளது
துன்பந் தருங்கொடுந் தொல்வினை யோவெந்தை சோகங்கண்டு
முன்பந் தாதுந் துமியோங் கிமாசல முன்றிலிட்ட
நன்பந் தரினின்று சற்றே கவிழ்ந்து நகைத்தபெண்ணே. (௫௪)

பெண்மைத் திருவுருப் பெம்மா னுடம்பிற் பிறக்குணர்த்து
முண்மைப் பொருளை யுலகுடை யாளை யுணர்ந்திலையே
கண்மைக் குவளை யமிர்தப்ர வாகக் கருணைகண்டு
வண்மைக் கடலும் வறுமைக்கு ளாய்கின்ற வன்னெஞ்சமே. (௫௫)

நெஞ்சுக்கு ளேயெங்ஙன் வைப்பேனுன் பாத நினைந்துபுல
னஞ்சுக்கு ளேயொன்றுக் காணு மில்லை யறிவுகெட்டே
னஞ்சக்கு ளேநல்ல துண்டோவெண் டோளெந்தை நாணிலவுப்
பிஞ்சுக்கு ளேசிவப் பூட்டிய தாட்டுணைப் பெண்கொடியே. (௫௬)

கொடியேன் மனமுங்குழையேனுன் பேர்சொல்லிக் கூப்பிட்டுன்சீர்
படியே னினியெப் படிப்பிழைப் பேன்யமன் பாசம்விட்டா
லடியேன் விடுவிடென் றப்போ தடிக்கு மடிவிலக்கி
யடியேனை யம்ம வுலகேயெவ் வாறு விடுவிப்பையே. (௫௭)

விடுபோந் தவனென் னடியானென் றோடி விலக்குவையோ
கொடுபோய் நரகிற் குளிப்பாட்டு போவென்று கூறுவையோ
வடுபோ ரயின்முத் தலைவே னமன்செயு மாக்கினைக்குட்
படுபோதி னென்சொல்லு வாயுல கேயுன் பராக்கொழிந்தே. (௫௮)

ஒழிவாய்த் தவம்விட் டலையாரென் னம்மை யுலகடியார்
விழிவாய்ப் படுஞ்செவி வெவ்வா யராவெள்ளி வெற்பறுபட்
டழிவாய்ப் பகிரண்டத் தாயிர கோடி யடுக்கு முந்நீர்க்
குழிவாய்ப் புனலிற் குலைவாய்க் கிடந்து குழம்பினுமே. (௫௯)

குழக்கன் றலவை மலைப்பா ரிசத்திற் குடியிருக்கும்
பழக்கன் றிருவுருப் பாதிசெய் தாயிந்தப் பாவிகண்ணீ
ருழக்கன் றரியன் றெருகோட்டை யுண்டுகண் ணேட்டைபட
வழக்கன் றியதுன்பந் தீராய்கொ லுன்னடி யார்க்கன்றியே. (௬0)

அன்றிற்பெயர்க்குன் றெறிந்தோனைப் பெற்றவென் னம்மைதமிழ்க்
குன்றிற் பிறந்த குழந்தைமந் தாநிலங் கொம்பனையார்
முன்றிற் புறந்தவழ் சிங்கைக்கங் காதரமூர்த்தியிட
மொன்றிற் சிறந்தது வேகுடி யாய்வந் துறைந்தனளே. (சுக)

உறைக்குங் கனன்முத் தலைவேல் வலந்திரித் தூழிநிற்கு
மிறைக்குந் தெளிதற் கெளியதன் றேயுல கீன்றவன்னை
நிறைக்கும் புவனந் திரோதாயி மாயையி னின்றழுந்த
மறைக்குந் திரும்ப வெளியாக்கு மிந்த மகத்துவமே. (சுஉ)

மகமுந் தவமும் பயின்மலை யாசல வாணனெங்கோ
னகமும் புறமு மமர்ந்திருப் பாய்பொரு ளார்ச்சிதமுஞ்
சுகமும் பெறுகிலன் பொய்வாழ் விதென்று துறந்துமுய்யே
னிகமும் பரமு மிழந்தே னெனக்கெ னினிப்பிழைப்பே. (சுங)

பிழைத்தே னிதுவரை பொய்யோடு மெய்யும் பிதற்றியொன்றே
விழைத்தேன் வினைமட் டிலக்கில்லை யேயெளி யேனரகத்
துழைத்தேன் விடிவதுண் டோநின் கருணையுண் டாகிலுண்டா
மழைத்தே னளகத் துலகே பிடிப்பிது மாத்திரமே. (சுச)

திரம்போ லுடலை நினைந்திரை தேடித் திரிந்துநச்சு
மரம்போ னெடுக வளர்ந்திருப் பார்புன் மனையிலொரு
தரம்போ லிரண்டு தரநடந் தால்வைது தள்ளுவரென்
றரம்போலென் னெஞ்சை யுலகே கவலை யறுக்கின்றதே. (சுரு)

அறுத்துப் பொருப்பைப் பிளந்தோர் பொருநை யருவிபைங்கோங்
கிறுத்துப் புறப்பட் டிறங்குதண் சார லிடத்து நின்று
பொறுத்துச் சிவந்தநின் பொற்றாட் கடிமை புகுந்ததம்மே
மறுத்துப் பிறப்பில்லை யென்றுநன் றாவென் மனத்தெண்ணியே. ()

எண்ணத்தி லேயுண்மை யெண்ணாமல் வேத மெடுத்துச்சொன்ன
வண்ணத்தி லேயென் மனம்வைத்தி லேன்கொங்கை வள்ளத்துப்பால்
கிண்ணத்தி லேசைவக் கன்றுக்கு வார்த்தவள் கீர்த்தியெல்லா
மண்ணத்தி லேநின் றமுதூறப் பாடிக்கொண் டாடிலனே. (சுஎ)

ஆடிச் சிவந்த பதத்தார் பவளச் சடாடவிபட்
டோடிச் சிவந்த சரோருகத் தாளென் னுலகிருதாள்
சூடிச் சிவந்த தலையுமெக் காலமுந் தோத்திரங்கள்
பாடிச் சிவந்த கவிநாவும் பெற்றதென் பாக்கியமே. (சுஅ)

பாக்கிய மாவ துலகேயுன் பங்கய பாதமெண்ணும்
யோக்கிய வானென வோங்கிய வாழ்வென் றொருபிடியாய்
வாக்கிய வேத வழிநட வாமன் மயங்கிமலந்
தேக்கிய தீவினைக் குள்ளே மனஞ்சென்று சிக்கியதே. (சுகூ)

சிக்கென்ற கொங்கை யுலகேமெல் லென்று சிவந்தபதத்
துக்கென்று வந்து தொழும்புசெய் வேனறந் தோற்றவெறும்
பொக்கென்ற வாவிப் புலான்மீனுக் கேயப் புனன்மடைவாய்க்
கொக்கென்று நின்று குறிக்கின்ற தாற்றல்வெங் கூற்றமொன்றே ()

ஒன்று மலச்சட மொன்பது பீறலவ் வொன்பதினு
நின்று மலச்செடி நாறுமெங் நேரமு நீர்விட்டன்றைக்
கன்று துடைப்பினுந் தீராது பாழ்த்த வருவருப்பி
தென்று தவிர்ப்ப துலகே நரக மிதினுநன்றே. (எக)

நன்றாய் முடிந்த தடியேன் சரித்திர நான்செய்பிழை
யொன்றா யிரம்பதி னாயிர மாயொரு மிக்கவொரு
குன்றாய் முடிந்தது கொல்லோ வினிது குடியென்றுபோய்
நின்றா யொதுங்க வுலகே பொதிய நிழலுக்குள்ளே. (எஉ)

நிழலுங் குளிர்ச்சியு நீங்காப் பொருநை நெடுந்துறையா
ளழலும் பசித்தழ லாற்றுமென் னாததை யாதரித்திங்
குழலுங் கருத்து மிழைநூலைப் பாவிழைக் கூடுபெய்யுங்
குழலும் பயிற்சியு மொன்று நன்றாமென் குணகதியே. (எங)

கதிகாட்டி யென்னைப் புரப்பாள் கருணையுங் காட்டிநல்ல
மதிகாட்டி யுண்மை வழிகாட்டித் தன்மண வாளருக்குச்
சதிகாட்டி யொக்கநின் றூட்டுவித் தாளித் தனையுலக
விதிகாட் டினளங் கிதைக்காட்டிற் பேறினி வேறில்லையே. (எச)

இல்லது முள்ளது நீயறி வாயுல கேவினைதான்
வல்லது செய்யினு மற்றது நீயுன் மனம்பொறுத்து
நல்லது செய்வ துனக்கே புகழ்தொண்ட னானுன்சித்த
மல்லது பின்னை யறியே னுரைத்தென்ன வாவதுவே. (எரு)

ஆவது மோர்பொரு ளாகா ததுமூல கம்மமண்மேற்
சாவது மாறிச் சனிப்பது மூருஞ் சகடமென்னப்
போவது மீள்வது மெல்லாமுன் சித்திரம் புன்மையன்றோ
நோவது மேழை யுகப்பதும் வேறு நுவல்வதுமே. (எசு

வதுவைத் திருமுன்றிற் பந்தரின் கீழம்மி வைத்ததன்மேல்
விதுவைப் புனைதொங்கல் வேணிப் பிரான்வைத்த மென்மலர்த்தா
ளதுவைப் பெனவெண்ண மாட்டாமற் போய்க்கழு காதியுண்ணும்
*பொதுவைப் பொருளென் றுலகே யிரையிட்டுப் போற்றுவனே.

போற்று வணங்கு முலகாளைத் தென்னம் பொருப்பொருபா
ஞற்று நிரம்பி நடைகாவும் பாய்ந்து நறுங்கனிச்சா
றூற்று வளங்கெழு தென்பாற் களாநிழ லுட்பொருநை
யாற்று நெடுந்துறை மேலிருப் பாள்செம்பொ னாலயத்தே. (எஅ)

ஆலயம் போதென் றிருந்தார் வணங்குல கம்மையைநான்
காலையம் போதும் பகற் போதும் பானுக் கதிரமுங்கு
மாலையம் போதுந் தொழுவே னெனக்கிது மாத்திரமே
வேலையம் போதனுக் கென்பொருட் டாலில்லை வேலையுமே. (எகூ)

வேலை யெடுத்துப் பொருப்பெறிந் தோனம்மை மென்கமலக்
காலை யெடுத்துக் கருத்துள்வைத் தேனில்லை கல்வியின்சொன்
மாலை யெடுத்துப் புனையேனென் சொல்வதம் மாவவதி
யோலை யெடுத்துப் புறப்படுங் கூற்றுக் குரையெடுத்தே. (அ0)

எடுத்த பிறப்பிற் கதிபெற வேண்டி லெறிதிரைநீர்
மடுத்த முனிக்கு மணக்கோலங் காட்டி மலையமலைக்
கடுத்த தலத்தி லிருந்தாளை யம்மை யவளைவெம்மை
கொடுத்த பசிக்குயிர் வெம்பிடு வீர்சென்று கும்பிடுமே. (அக)

கும்பத்தில் வந்தவன் போற்றுல காள்பொற் குழைதடிந்து
விம்பத்தி னின்று விளையாடுங் கண்கள் விடக்குமரக்
கம்பத் திருந்து வணங்காத பாவியைக் காத்துநல்ல
சம்பத்து நல்கி யொழிப்பதென் றோமனத் தாபத்தையே. (அஉ)

தாபிக்குஞ் செய்கை தருமுயிர் காக்குந் தகைமைநல்குங்
கோபிக்குந் தன்மை கொடுப்பிக்கு மூதண்ட கோடியெல்லா
நாபிக்குள் வந்தவன் முன்னோரைக் கொண்டு நடப்பிக்கும்வான்
சோபிக்குங் கண்கொண் டுலகாளென் பாசந் துடைப்பிக்குமே.

துடைத்தா யிலைவன் கலிநோயை யென்னைத் தொழும்புசெய்யப்
படைத்தா யிலைவந்து பார்த்தா யிலையுள்ளப் பள்ளத்தில்விட்
டடைத்தா யிலையுன் கருணைப்ர வாகத்தை யைவரைவிட்
டுடைத்தா யுலகம்ம நன்று யிலையென் னுயிர்ப்பயிரே. (அச)

* பொது—சரீரம்.

பயிரிட்டு வேலி பிரிப்பவர் போலிந்தப் பாழ்ம்பிறவிக்
குயிரிட்டு வாழ்வொழித் தாயுல கேபக ரோ்தியென்னைத்
தயிரிட்ட மத்தினைப் போலலைத் தாலத் ததிமறிப்பே
னயிரிட்ட வேலை யுலகீன்ற நின்றிரு வாணையிட்டே. (௮௫)

இட்டம் பிறிதிங் கிலையுல கேயெனக் கிந்திரனார்
பட்டம் பெறுவது பாரமன் றேதம் பதவியிலே
நட்டம் புயனையு மாற்றுவிப் பாரன் னவரிடத்தே
சட்டம் பலவுண் டுனைப்போற்றப் பெற்றவர் தாட்டிகமே. (௮௬)

தாட்டா மரைதந் தருளுல கேபட்ட சஞ்சலங்கள்
கேட்டா ருருகுவர் கெட்டே னினியென் கிலேசமெல்லாம்
பாட்டா லுரைசெயிற் பட்டோலை கோடிபற் றாதலையோ
ரேட்டா யிரம்வரி தீட்டவல் லார்சற் றெழுதுவரே. (௮௭)

எழுதும் படியு முருவேற்றும் போற்று மினச்சுரும்பர்
கொழுதுண் பரிமளக் கொந்தள நீளக் குயிலுலகாண்
முழுதுங் கருணை புரிவாள் சனனமு மோசனமாம்
பழுதுந் தவிருங் கெடுவீ ரெழுத்தொர் பதினஞ்சுமே. (௮௮)

அஞ்சித் திரிந்து பெரியோரைக் காணி லயர்ந்துகெட்டேன்
கஞ்சிக கலைந்து கவலைப்பட் டேன்சதங் கைததிருத்தாட்
பஞ்சிக் கிணங்கு மழியாக் கருணை பழுத்தவப
ரஞ்சிப் பசும்பொ னருட்பாவ நாசத் திருக்கவுமே. (௮௯)

இருக்குந் தலமிலை யோமுக் களாநிழ லெந்தையெல்லா
முருக்குங் கடவுண் முழுத்தீ யுடம்பையுன் மோகத்தினா
லுருக்கும் படியங் கிருந்தாய் பொறுத்தது வோவிறுகிப்
பருக்குந் தனமுலை யாயுல கீன்றவுன் பச்சுடம்பே. (௯௰)

பச்சைப் படிவத் துலகே யிரண்டு படியுனக்குப்
பிச்சைப் படிநெல் லுப் பெம்மா னளப்பதி பேருலக
மிச்சைப் படிக்குண்ண வன்றோ வெனக்கில்லை யென்னிலிந்தக்
கொச்சைப் படிறன் பொருட்டா லளக்குங் குறைப்படியே. (௯௧)

படிக்குங் கவியின் பயனாகச் சொல்லிற் படுத்துவினை
முடிக்கும் படியென் முயற்சிகொண் டோவண்டு மூச்செறிய
வெடிக்குந் தொடைமைக் குழலுல கேயென்று வேதமெல்லாம்
வடிக்கும் பெயரையென் னுத்தமும் பேற வழுத்துவனே. (௯௨)

வழுத்த நினைக்கிலன் மாதுல காளையென் மண்டைவிதி
யெழுத்தை வெறுப்ப தினியேது கண்டதெல் லாம்புசித்துக்
கொழுத்த விடக்குட லான்வந்த பாவமொர் கோடியென்னைக்
கழுத்தை முறிக்குஞ் சுமைப்பார மெததக் கனக்கின்றதே. (கூந)

கனமுண்ட கூந்த லுலகேயுன் சந்நிதி காத்திருக்க
மனமுண்டு பாழ்த்த வறுமையொட் டாது வலியச்செய்யு
மினமுண்டு நீகொடு போய்நெடுந் தூர மிவனையங்கே
தனமுண்டு காட்டென் றதுகேட் டதுவுந் தடையுண்டதே. (கூச)

உண்டார் கடல்விடந் தன்மண வாளரன் றுண்கையிலே
கண்டா ளுலகம்மை கண்டத்தி லேமலர்க்கையைவைத்துக்
கொண்டாள் பிறகங் கமுதான தென்பது கொண்டிவட்கு
விண்டாலென் புன்கவி நன்கவி யாமென்று விண்டனனே. (கூரு)

விண்டல நின்ற சரற்கால சந்த்ரசு வேதமுக
மண்டல முங்கை மலரொடுந் தோளின் வழிந்தரத்ன
குண்டல மும்பொலி வாலப் பிராயக் குமாரத்தியாய்ச்
செண்டலர் செங்கை யுலகாளென் னுவிற் சிறந்தனளே. (கூசு)

சிறப்பார் சிறப்பி னுலகா ளடியவர் சிந்தைக் கென்னும்
பிறப்பார் பிறப்பும் பெறுவார் தவமும்மப் பேறுதப்பி
யிறப்பா ரிறப்பு மிறவாமை வேண்டுமென் றில்லறத்தைத்
துறப்பார் துறப்பு நகைக்கிட மானவித் தொண்டனுக்கே. (கூஎ)

தொண்டைக் கனிவிள்ள வள்ளுகிர் வீணை துழாவநெடுங்
கொண்டைச் சொருக்குப் புறந்தாழ வோலைக் குழைதடவுஞ்
சண்டைக் கயலுஞ் சிவப்பேற மாதங்கி சாமளையாம்
பண்டைப் படிவத் துலகா ளருள்வந்து பாலிக்குமே. (கூஅ)

பாலான வேலையிற் சிந்தா மணிமண்ட பத்தின்மறை
நாலான பீடத்தை ஞானந்த மாயருண் ஞாயிருபோன்
மாலான தேவர்கள் காலான மஞ்சத்து வந்திருக்கு
மேலான வாழ்வையுங் கண்டேன் பொருநைக்கு மேல்புறத்தே. ()

மேலைக் கடவு ளிடப்பாக முந்துள்ளு வெள்ளருவி
மாலைப் பொதிய வரைச்சா ரலுநின்ற வண்ணமுந்தாட்
காலைக் கமலமுங் கல்யாண விக்ரக காந்தியும்பொன்
னோலைக் குழையுங் குழற்காடும் வாழி யுலகம்மையே. (ந)

உலகம்மை கலித்துறையந்தாதி.

முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

பாவ நாசம் என்னும்

# சிங்கை உலகம்மை

## பதிற்றுப்பத்தந்தாதி.

### விநாயகர் காப்பு.

பத்துக் கவிக்கொருபண் பானசந்த பேதவிய
லொத்துக் கவிக்கு மொருநூறு—முத்தமிழு
மோதலவி நாயே னுலகுமைக்குச் சொல்லவரும்
பூதலவி நாயகன்றாட் பூ.

### நூல்.

உலகம் பிகையும் பர்பரா வுமசஞ்
சலகம் பமதா சலசந் ததியா
ளலகம் பயிலன் னகணின் னருளென்
பலகம் பிதபா சமறுப் பதுவே. (௧)

பதுமத் தடியெப் படிபெற் றிடுமோ
புதுமத் தளையிற் பொறிதட் டழிவே
னதுமத் திமநெஞ் சருவிப் பொதிய
மதுமத் தரிடத் துமடப் பிடியே. (௨)

பிடியே யுலகம் பிகையே பகையே
தடியே னிலையிற் றலையத் தகுமோ
மிடியே னெனயான் விருதா வினிலிப்
படியே மனிதப் பதரா யினனே. (௩)

இனமா டமடந் தையரென் றொருபொய்க்
கனவா னதுகண் டதையுண் டெனவே
மனமீ னமயங் குவனோ வனசந்
தனபூ தரசா யையினின் றவளே. (௪)

நின்றே நெருநின் னிலையின் னிலையிற்
பின்றே னினிமேற் பிறவே னிறவேன்
குன்றே யணுவே குறுகா நெடுகா
வொன்றே பலவே யுலகம் பிகையே. (ரு)

அம்பா னவரும் புசுரும் பலரக்
கொம்பா னதினின் றருகுழைந் தமிலா
விம்பா னனமின் னுலகென் செய்குவாள்
வம்பா னதன்வஞ் சகநெஞ் சகமே. (சா)

நெஞ்சத் துயரம் மகிழ்த் துவதோ
கொஞ்சத் துயரன் றதுகொண் டெளியேன்
கஞ்சத் தினுமுக் களவீ சரதுண்
மஞ்சத் துமிருந் தமனேன் மனியே. (எ)

மனசஞ் சலமிஞ் சினவஞ் சனைதே
டினசஞ் சிதவெவ் வினையெவ் வளவோ
கனசந் தனவெற் பிறைகைப் புனலே
பனதுங் கபயோ தரபஞ் சமியே. (அ)

பஞ்சா னனசே கர*பா கமதிப்
பிஞ்சா னதணைந் துபிலத் துளவா
லஞ்சா துலகம் மையடிச் * சுவடே
நெஞ்சா னதினிற் குநிறுத் திடிலே. (கூ)

இடுவா ரெவர்கைக் கிலையென் றயர்வேன்
கெடுவேன் பிறகென் கெடுபுத் தியினு
னெடுவா னவர்கோ னிலமைக் குலகா
ணடுவாள் பணிபண் பினர்நண் பரையே. : (க0)

வேறு.

பரையோ பரம்பொருளின் பாவகமோ பாவகத்தி
னுரையோ வுரைகடந்த வொன்றோவொன் றல்லவோ
பிறையோ பிறைகலந்த பேரமுதப் பேராறோ
வரையோ வணுவோநீ மாதுலக மாதாவே. (கக)

---

* பாகமதிற் } என்றும் பாடபேதம்.
* சுவடென் }

மாதாநீ யுன்பான் மவுணனெனக் கோர்தகப்பன்
காதார் விழியுலகே கள்ளனொரு பிள்ளையம்மா
பேதாதி பேதப் பிறவிதொறும் பிள்ளைமுத்தந்
தாதாவென் பாரந்தத் தாயர்பலர் தாதையரே. (௧௨)

தாதைதாய் மாமன்மகன் றம்பிதமக் கென்பர்சிலர்
பேதையேற் கிங்கே பிறக்குமுன்னிப் பேருளதோ
வேதையோ மாயமொன்று மில்லாத துண்டாக்கி
வாதைநீ செய்வதுமென் வம்பிலுல கம்பிகையே. (௧௩)

கையோ வுனைத்தொழுமென் காலோ வலஞ்சூழு
மெய்யோ வணங்குமருள் வேண்டிமனந் தூண்டினதா
லையோ வெளியேனை யாள்வதினி யென்னமெய்யோ
பொய்யோ வுலகுடைய பூவாய் புகல்வாயே. (௧௪)

புகலா யெனும்புமுடைப் புண்ணீர் புறங்காட்டி
லகலாதைதம் பூதவெறி யாட்டில்விழுந் தாடினதா
லிகலார் புரமெரித்தார்க் கின்னமுத மீந்தசந்த்ர
முகலா ளிதத்துலக முத்தேபே யொத்தேனே. (௧௫)

தேனுக்கு மின்சுவையாத் திங்களுக்கோர் சீதளமாய்
வானுக்கு நின்மலமாய் மாமலர்க்கும் வாசனையா
யூனுக்கு மன்னுயிரா யோங்குமுல கம்மாபொய்
யேனுக்கு மெய்யுணர்வா யெப்போ திருப்பாயே. (௧௬)

மாயுந் திரைநீர்ப் பரவைநெடும் பாரில்வந்து
போயுந் திரிவேன் புதுமையிது போதாதோ
தாயுந் தமருஞ் சலிக்கவுல கேநரியும்
பேயுங் களிக்கப் பிறப்பே னிறப்பேனோ. (௧௭)

இறவேனுன் கிண்கிணித்தா ளேத்தினதி ஞலினிமேற்
பிறவேன்வந் திங்கே பிறந்தபலன் பெற்றேனுன்
மறவே னிதற்கொருங்கம் மாறுலகம் மாவினையைத்
துறவே னுனைப்புகழுந் தோத்திரமிம் மாத்திரமே. (௧௮)

திரமோ வுடம்பிதென்ன சென்மமோ தீவினையா
யிரமோமுன் செய்ததம்ம விவ்வளவன் றெவ்வளவோ
வரமோ கவலை யகவிரும்புக் கித்தனைக்குந்
தரமோ வுலகுடைய தாயேநான் பேயேனே. (௧௯)

பேயோ வெனக்குழறும் பேதா யுனக்குமொரு
வாயோவென் றென்னையிகழ் வாயோ மகிழ்வாயோ
தூயோர் தொழுமுலகே சொல்வதெல்லாஞ் சொல்வேனுன்
காயோ பழமோநீ கட்டளைசெய் காரியமே. (௨௦)

### வேறு

காரிசைந்த கொந்தளங் கருங்கணம்பு விம்பவாய்
தாரிசைந்த கொங்கைகும்ப சம்புவன் றொழும்பிரான்
பாரிசந் துலங்கிநின்ற பைம்பொனின் சிலம்புசூழ்
வாரிசங்கள் கொண்டநெஞ்சு வண்டிருந்து கொண்டதே. (௨௧)

கொண்டலன்ன காலன்வந்து கோவியாது பாவியான்
றெண்டுசெய்வ தென்றுநீ தொழும்புகொள்வ தென்றுகா
ணண்டர்தெண்ட னிட்டிறைஞ்சு மாதிலோக நாயகி
விண்டுசொல்லு மிவ்விரண்டும் வேண்டிலொன் றும் வேண்டிலேன்.

வேண்டிநின்ற தம்மசந்த வெற்பினிற்ப ணிந்துபோந்
தீண்டிருந் திறக்குநேர மென்னையாளு முன்னையான்
காண்டலொன்று நீவழங்கு காட்சியொன்று மீட்சியின்
றூண்டுகொள்வ தொன்றுவேறி தன்றியில்லை யொன்றுமே. (௨௩)

ஒன்றுமில்லை யுண்மையம்மை யுலகையன்றி விலகவோர்
குன்றுமில்லை யண்டரண்ட கோடியில்லை வீடுசேர்
நன்றுமில்லை யிவளையன்றி ஞானம்வந்து போனபே
ரின்றுமில்லை யன்றுமில்லை யென்றுமில்லை யில்லையே. (௨௪)

இல்லையென்று முள்ளதென்று மிடையிருந்த * தடிமைநா
னல்லையென்று சாற்றின்முந்துன் னருளுமென்ன தாகுமோ
முல்லையென்று முறுவல்கண்டு முக்காளாவின் முக்கணுன்
றொல்லையென்ற மையல்விண்டு சொல்லுமம்ம வல்லியே. (௨௫)

வல்லியங்க ணின்றதென்றல் வரையின்மாலை யருவிநீர்
பல்லியங் கறங்கமன்னு பாவநாசர் பங்கில்வா
ழல்லியங் குழற்பசும்பொ னடியர்தங்க ளடியர்தந்
தொல்லியங்கள் சொல்லுமம்ம சொற்கலோக மொக்கவே. (௨௬)

ஒக்கநின்று † சேட்பமார்க்க முள்ளடக்க மெள்ளவோர்
விக்கல்வந்து களைகளைத்து விழிசுழன்று கழியுநாட்

* 'அடியை' என்றும் பாடம். † சேட்பம்—சிலேத்மம்.

டுக்கமுன்பு ரிந்துபின்பு சுடுவர் போவர் தொடர்வதார்
தக்கதில்லை யுலகெனம்மை சரணமல்ல தரணமே. (உஎ)

அரணமுண்ட துலகெனம்மை யருகுசென்று தெரியலான்
மரணமுண்டு சனனமுண்டு வாதையென்று பேதியேன்
சரணமுண்டு துவர்துவண்ட தரளமுண்டு மரகதக்
கிரணமுண்டு மனதிலென்ன கேதமென்ன சேதமே. (உஅ)

சேதனத் தமிழ்ப்பொருப்பெ திர்ந்துதன்னை வந்தியா
தேதனத்த மென்சிரத்தெ ழுத்தைவந்த ழிக்குமோ
மாதனக் குழைக்கெனம்மை வாரியிட்ட வாள்விலைச்
சாதனச் சுருட்டுதைந்து தள்ளுமைக்கண் மெள்ளவே. (உகூ)

மெள்ளமெள்ள முன்செய்தீமை விவகரிக்கு மவர்கண்மு
னுள்ளதுள்ள தென்னவம்ம வொப்புவித்த டிப்பராங்
கொள்ளைகொள்ளை யென்பொலாத கொடுமைசேர்க்கி னடுவனார்
தள்ளுதள்ளு நரகிலென்பர் தமிழ்வரைப்பெ ணமிழ்தமே. (ந0)

வேறு

அமிழ்தந் துளும்பி விளிம்பலம்ப வலர்ந்த மதிபோ லங்கணிலா
வுமிழ்தண் முறுவன் முகிழ்த்தமுத்தத் துலகேயுனைவாழ்த் துரைப்பேனே
தமிழ்தந் தருளுந் தனவனசந் தனபூ தரசீ தளப்பொருநை
யிமிழ்தண் புனலிற் படிந்தேழெட் டெழுத்து மெழுதிப் படியேனே. (நக)

எழுதிப் படியே னுன்பெயரொன் னெழுத்திப் படியோ வெப்படியோ
பொழுதிப் படிவீண் கழியின்விளி பொழுதிப் படியே புகலாமோ
கொழுதிப் படிதேன் மலர்க்குழலார் குரல்வீணையிற்கின் னாமிதுனத்
தொழுதிப் படியே யெழுப்புமிசை தொலையா மலையத் துலகாளே. (நஉ)

காள விடம்பட் டினவளைச்செங் காந்தள் கயங்கக் கணவர்தம்மை
யாள விடம்பெற் றிருந்தவுல கம்மே வருத்த லாமேயோ
மீள விடம்பெற் றிலனடியேன் மீளாச் சனன வினைப்பாச
நீள லடங்காக் கடலருளி னிலைத்தா லொழிய நிலையாதே. (நந)

நிலைபட் டொருமுப் பதுகடிகை நேரத் தளவி னிறைவெயிலாற்
றுலைபட் டிரவு விடியுமென்னைத் தொடரு மிரவு தொலையாதோ
சிலைபட் டமுஞ்சுட் டியும்புனைந்தாற் றிலத நுதலொப் பெனச்சிவனெஞ்
சலைபட் டிடவா ழுலகுருவத் தருண வெயில்கண் டடியேற்கே. ()

அடிபார்த் துனது திருக்கடைக்கண் ணருள்பார்த் திருள்வார்த் தனையகுழன்
முடிபார்த் திறைஞ்சும் படியுனக்கென் முகம்பார்த் திரங்க முடியாதோ
துடிபார்த் திறங்கு மதனையன்று சுடப்பார்த் தவனோர் துவளிடைக்கோர்
கொடிபார்த் திலங்கு முலகுடைய கொம்பே யடியேன் கொடியேனே. (௩௫)

கொடியொன் றிரண்டு முகைசுமந்து கொண்டு வணங்கக் குலமறையின்
முடியொன் றிரண்டு சரணுலக முத்தே யெனக்கு முடிசூட்டாய்
மிடியொன்றிரண்டு வினைதருமோ வியப்பொன் றிலையோ வினையேன்சொற்
படியொன் றிரண்டு பிழைபொறுப்பாய் பலவா மிதுவோ பலனுமே.

பலநாள் வினையுந் தொழுமொருநாட் பலநா ளெனப்போம் படிவாழ்நாட்
சிலநா ளிதற்கு ளுனக்கடிமை செயுநா ளேது சிறியேனுன்
குலநாண் முளரித் திருத்தாளாற் குழனுண் மலராற் குழைந்தான்மங்
கலநாண் புனையு முலகுடைய கரும்பே மனது திரும்பேனே. (௩௭)

திரும்பித் தனைய னெனநோக்கிச் சிறப்பித்தனைபோற்சிறியனெனும்
பெரும்பித் தனையுன் னருணுட்டிப் பிழைப்பித் தனையேற் பிழையேனே
கரும்பித் தனைபண் பில்லையென்று காண்பித் தனைய கனிமொழிவா
யரும்பித் தனைநேர் முறுவலுல கம்மே யழுது விம்மேனே. (௩௮)

விம்மிப் புளகித் தெழுமுலைகே விருப்பா யரன்கை நெருப்பாற
வம்மிக் கருங்கல் வைத்தமல ரகத்தா மரைவைத் தலர்த்துகள் போய்ச்
செம்மிக் கிடந்த சடைநுதலைத் திறந்த விழியைத் தெழித்துருவாஞ்
சொம்மித் தனையும் பெறத்தனியே சும்மா விருந்து துயில்வேனே.

துயிலும் விழிப்பு மானசன்மத் தொழிலென் றறியா வழிநின்று
பயிலும் வளமைத் தொழும்பரொடும் பயிலா வகையென் செயலானேன்
மயிலு மருளுங் குயிலுலகாள் வல்லி முகிழ்த்த கொவ்வையினல்
வெயிலு நிலவுந் தரவிருளும் வெளியாய் மனமுந்தெளியாதோ. (௪0)

வேறு

தெளியாத சிந்தை தெளிவித்து நின்று தெளிகின்ற வுண்மைதெளிய
வொளியாய் விளங்கி யிருளா யிருண்ட வொழியாத மாயை யொழிய
வெளியாரின் வந்து தனையே வழங்கி யெனையா னிழந்து விடவே
யளியாலெ னம்மை யுலகாள் கொடுத்த வானந்த மென்சொல் வதுவே. ()

சொல்லப் படாத பரநாத விந்து துரியங்க டந்து தொடரச்
செல்லப் படாத நிலைநின்று கொண்ட திலகா சுலப்பெ ணுலகாள்
கல்லப் படாத வினைவேர் விழுந்து கவரோடு சிந்தை யெவரும்
வெல்லப் படாத திதில்வந் திருக்க விழைகின்ற தென்ன விழைவே

விழநின் றலைந்த சுவரிற்கை வைத்து விழுவார்க ளென்ன வினைபா
லழநின்ற துன்ப மனைவாழ்வை நம்பி யலைவேன் மயக்க மலவோ
தொழநின்ற தொண்டர் நிலைநின் றறிந்து துயர்தீர்வ தென்று வயலூ
டுழநின்ற புண்ட ரிகம்விண்டு சாயு முயர்சிங்கை யூரி னுலகே (௪௩)

உலகத் தனந்த பலயோனி தோறு முருவப்ப டுத்து குருவாய்ப்
பலகற்பி தஞ்செய் வினையந்த கார படலங் கிழித்து விடலாந்
திலகத் தலர்ந்த வரவிந்த சந்த்ர திலகாச லப்பெ ணுலகாள்
விலகத் துவண்ட மனமொன்று பட்டு விபரீதபேதம் விடிலே.(௪௪)

விடவும் படாது விகடப்ர பஞ்ச விவகார வஞ்ச வினையாற்
கெடவும் படாது செலவிட்டு மிஞ்சு கிறபோக நின்ற ததிலே
படவும் படாது சனனத்தி லேது பலனோ துடக்கி தலைவோ
தொடவும் படாதெ னுலகேயி வாறு துணிவேனி தென்ன துணிவே. (௪௫)

துணியான கந்தை யிடுபிச்சை கொண்டு சுகியாக வுண்டு பசியைத்
தணியா தெவர்க்கு மகிதங்கள் செய்து தனதானி யங்கள்கனமாப்
பிணியான சென்ம நிலைநின்று தேடு பிறவாத நன்மை பெறவே
பணியா தறிந்து முலகே மகிழ்ந்து பரிவேனி தென்ன பரிவே(௪௬)

பரியங்க மெங்கள் சிவனு ருறங்கு பாவாற்றி தீப நிலையந்
தெரியங்க மெங்கண் மறைநாம மம்மை திருமேனி செம்மை தெரியி
லெரியங்க மென்ப ருலகாயி தன்மை யிவைபல்ல ரூப மெனவையோ
துரியங் கடந்த ததிலேழை யாசை தொடர்கின்ற தென்ன தொடர்வே. (௪௭)

தொடரிற் பிணித்த தெனமோக துக்க சுகமென்றி ரண்டு மிகமே
விடரிற் பிணித்த தெளிதோ பரத்தி லெனையேது செய்ய நினைவோ
பிடரைப் பிடித்து யமராசன் முன்பு பிடியென்று தள்ளி விடிலப்
படரைத் தவிர்த்தெ னுலகம்மை யென்று பணிவிப்ப தென்ன பணியே.(௪௮)

பணியத் துணிந்து பழகாத சிங்கை பரஞான வுண்மை பறிபோய்
மணியைக் களைந்த படநாகமென்ன மலைவாய் மயங்கு முலகம்
பிணியைத் தவிர்க்கு முலகா ளெனக்கோர் பிடிபா டறிந்து முடிமே
லணியத் தவஞ்செய் தறியாமன் மற்ற தறிகின்ற தென்ன வறிவே.

அறியாத சிந்தை யறிவிக்குமன்ப ரறிவிற்கு முண்மை யறிவாய்ப்
பொறியாத மந்த்ர மறையுங் கடந்த பொருளே தனக்கொர் பொருளாய்க்
குறியாது சிந்தை யுலகென்ற தற்கோர் குறியிட்ட பேரை நெறியாற்
பிறியாது சொல்வ ததிமாறி யம்ம பிழையேனி தென்ன பிழையே()

## வேறு

பிழைபட வனந்த கோடிப் பேதகப் பிறவி தோறு
நுழைபட முடியா தென்று நுவலுமென் கவலை கேட்டு
மழைபடர் பொதியச் சாரன் மரகத மணியே வஞ்ச
ரிழைபட மனைக டோறு மிரக்கவித் தொழிலிட் டாயே. (௫௧)

இட்டுண்டு சுகிப்பார் முன்னே யிரந்துண்டு வினைப்பா சத்தாற்
கட்டுண்டு திரியச் செய்த கருத்துண்டு கவலை யுண்டே
தட்டுண்ட புவன கோடி தருமுல குடைய தாயே
யட்டுண்ட யமன்கைப் பாசத் தலைப்புண்டு மடங்கி டாதே. (௫௨)

அடங்கிநன் னெறியி னில்லா தன்னைதன் னுதர பாரக்
கிடங்கினில் வீழ்ந்து கெட்டேன் கிடந்தனன் கிடைகொள் ளாமன்
மடங்கியிப் புவியில் வந்தேன் மறுத்தினி வரினுய் வேனோ
தடங்கிரி யிறுமாந் தென்னுந் தனத்துல குடைய தாயே. (௫௩)

தாயென்று மனைவி யென்றுந் தந்தைதா யென்றுங் காதற்
பேயென்றும் வினைசூழ்ந் தென்னைப் பிடித்தது பிடிப டாமற்
போயென்று வருவ துன்முன் போதுவா யெனவெப் போதுன்
வாயென்ற குமுதப் போது மலருமோ வுலக மாதே. (௫௪)

மாதருங் கிளையும் வாழ்க மைந்தரு மனையும் வாழ்க
வோதரும் பொருள்பெற் றிங்கே யுவந்தனு பவிக்க வாங்கே
நீதருங் கருணைச் செல்வ நிலைமைபெற் றுலகே நிற்க
வாதரம் புரிவன் வாழ்த்தே னன்னதுக் கின்ன தாமே. (௫௫)

ஆமென வெனது பாடற் கருள்செயி னமனார் வந்து
தாமென செய்வா ரென்சொற் றவறுகண் டுலகுத் தாயே
யோமெனு மெழுத்து ணின்ற வொருவனு மொருத்தி நீயு
நாமென செய்வோ மென்று நகைசெயிற் பகைசெய் வாரே. (௫௬)

செய்தியொன் றுலகம் மாகேள் சீவன்விட் டிடுநாள் செவ்வே
யெய்தியென் களைப்பு மாற்றி யிதழ்க்கடை திறந்து பாலும்
பெய்துநின் பேருஞ் சொல்லிப் பிணத்தின்மேல் விழுந்து பின்னு
முய்திறம் புரிவா ரில்லை யுனையன்றித் தனிய னேற்கே. (௫௭)

தனியனுக் கினிவாழ் வென்ன தாயில்லை தந்தையில்லை
யினியசொற் சொல்லு வாரு மில்லையென் றிரங்கு வேனோ

முனியகத் தியன்வந் தேத்து முதல்வியுன் முன்னே யுள்ளங்
கனியநெக் குருகி மீளாக் கதிபெறக் கருதி னேனே. (ருஅ)

கருதிநின் கருணை வேண்டிக் கரைந்துல கம்மா வென்று
சுருதிகண் டறியா வுன்னைத் தொழிலன்றோ தொழும்பு கொள்வாய்
குருதியங் கமலப் போதின் கொழுமுகை நெகிழக் கோலப்
பருதிநின் றலர்த்து மந்தப் பனிமலர்ப் பருவம் பார்த்தே. (ருகூ)

பார்த்தகண் பறியா தையன் பையவுன் மெய்ப்பி லூன்றச்
சேர்த்தகட் டுளையை யல்ல திருவருட் பெருநீர் வெள்ளம்
வார்த்தகட் டுணையை யல்ல வளைந்துல கம்ம வானோர்
தூர்த்தபொன் மலர்சூழ் பாதத் துணையையே துணைகொண் டேனே. (சு0)

## வேறு

கொண்டு போயென்னை யடம்படர் கொடுநர கிடுமுன்
கண்டு போவென விலக்கியென் கலக்கமுங் களைய
வுண்டு போலுமொ ரருந்தவ முனைப்புகழ்ந் துரைக்குந்
தொண்டு போலிலை யுலகம்ம துணிவதித் தொழிலே. (சுக)

தொழவு மாலையஞ் சூழவுஞ் சூழ்ந்துல கடிக்கீழ்
விழவும் வீழ்ந்தெழுந் திறைஞ்சவும் விம்மிநின் றுருகி
யழவு மானந்த பரவச படிக்கடி யுள்கி
யெழவு நாவெடுத் தேத்தவுங் கடனெனக் கினியே. (சுஉ)

இனியெ னக்கொரு குறைவிலை யென்றிர வேனுன்
புனித முக்கள விடத்துறை மாணிக்கப் புதுப்பூங்
கனியி டத்தொரு மரகதக் கனியையென் கண்ணுற்
றனியெடுத்தெடுத் தருந்தினேன் மருந்தெனத் தனித்தே. (சுஙு)

தனித்து நானின வளியினைச் சுழுமுனை தாக்கப்
பனித்த தாமரை நெகிழ்த்ததி னமிர்தமும் பருகி
யினித்த தாமெனு முலகியல் வழக்கைவிட் டிகழ்ந்து
குனித்த வாணுத லுலகினைக் குறிப்பதென் குறிப்பே. (சுச)

குறித்து நித்தமு நினைப்பனெ னுலகம்மை குமுதந்
தெறித்த நித்தில நிலவையு நிலவெடுத் திடையே
முறித்து வைத்தநன் னுதலையு நுதல்விழி முத்றபாற்
பறித்த சித்திரப் படிவமும் படிப்படி பகுத்தே. (சுரு)

பகுத்து ணைப்பதெப் படிவெளி காலனல் படிநீர்
வகுத்த பற்பல புவனமு மலைகளு மாமுந்
தொகுத்த மற்றையெவ் வுயிருமாய் நிரந்தரந் தொடர்ந்து
மிகுத்து நிற்பதோ ருருவுள துலகமெல் லியற்கே. (௬௬)

மெல்ல ருஞ்சரு கிலையிவை விருந்தென வருந்திச்
சொல்ல ருந்தவம் புரிந்துல கருணிலை தொடர
வல்ல ரும்பலர் மறுத்தெனைப் போலதை மதியாப்
புல்ல ரும்பலர் சுவர்க்கமு நரகமும் பொதுவே. (௬௭)

பொதுச்சி றப்பென நோக்கிரண் டுனக்குயிர் பொதுவே
யதுக்கு ளுத்தம மத்திம நிலைமை கண்டருள்வா
யெதுக்கெ டுத்ததெ னுடலமீவ் விரண்டுமெற் றிருந்தேன்
மதுத்து ளித்தசந் தனவரை மரகத மயிலே. (௬௮)

மயிலி யற்பரை யுலகுமை யுகமுடி வரம்பில்
வெயிலு டைப்புழு வெனப்பிறப் பிறப்பினின் மெலிவாய்ப்
பயிலு யிர்க்கொரு தனதடி நிழல்படத் துயிற்றித்
துயிலெ ழுப்பின ளெனிலவர் தொலைப்பரத் துயரே. (௬௯)

துயரெ னக்குநான் தொலைப்பதற் கிசைந்தொரு தொழிலிட்
டுபெரு நித்தியப் பொருளிதென் றநித்தியத் தொழுகிப்
பெயர்வு பெற்றிலன் பரத்தினுக் கதுகடைப் பிடியோ
வுயர்வ கற்றியிங் கருள்வதென் றுலகுடை யவளே. (௭௰)

வேறு.

அவமே செய்வே னவன செய்யு மனுகூலத்
தவமே செய்யே னென்னுல கம்மா தளர்கின்றே
னவமோ டெண்முப் பானிடு நாற்கோ ணடுமேவிச்
சிவமோ டொக்கு முன்னரு ளென்னே தெருளேனே. (௭௧)

தெருளுந் தெய்வத் திவ்விய வேதச தெளிவாய்நின்
றருளுஞ் செல்வத் தென்னுல கம்மைக் கரிதுண்டோ
மருளுந் தன்மைச் சஞ்சித மாற்று மறமுண்ட
திருளும் புன்மைச் சின்மதி யேனுக் கெளிதென்றே. (௭௨)

அன்றைக் கன்றுன் சந்நிதி நேர்வந் தடிதாழ்வ
தென்றைக் கென்றுன் கண்ணருள் சேர்வ தெளியேனுன்

கன்றைக் கன்றும் பண்புள தோமுக் களவோர்பாற்
குன்றைக் குன்றுந் தன்மைசெய் கொங்கைக் குலமானே. (எ௩

மானத் தாலுங் கல்வியி னாலு மனமாறு
ஞானத் தாலும் புண்ணிய நண்ணு நலமெல்லா
மீனத் தாலும் புன்மையி னாலு மெளியேன்பொய்
யூனத் தாலுங் கொள்வதெவ் வாறென் னுலகம்மே. (எ௪)

அம்மா தெய்வப் பொன்னுல கேயென் றருளுள்ளங்
கைம்மே னிலவித் தீங்கனி யாகக் கனிவாகி
யிம்மே முன்னே பின்றவள் செல்வ மிவைமேலோர்
சொம்மே யென்னத் தந்தருள் செய்யுந் தொழிலாளே. (எ௫)

ஆள நினைத்தா லிங்கினி வாரா தருளிங்கே
மீள நினைத்தா லுன்னரு ளென்னும் வெகுகோப
மூள நினைத்தா லேசுவ னீபின் முனிவாய்நான்
மாள நினைத்தா லேதுல கம்மா மதியேனே. (எ௬)

ஏனேன் வந்தே னென்றெதிர் வாயோ வெமவாதைக்
கானே னம்மா கோவென நானின் றழுநோ
மானே பொன்னே யென்னுல கன்னே மதியற்றுப்
போனேன் முன்னே நின்புக ழெல்லாம் புகழாதே. (எஎ)

புகழுங் கால மேலென வாமோ போங்கால
நிகழுங் கால மற்றெதிர் கால நெறியில்லோர்க்
கிகழுங் கால மென்ன விளைத்தா யிடராம்பிற்
றிகழுங் கால மென்னுல கேயென் செய்வேனே. (எஅ)

செய்வே னோநா னுன்பணி யிந்தச் செனனத்தி
லுய்வே னோநா னுற்றுயர் வேனோ வொழிவேனோ
வைவே னோவா கப்பொரு கண்ணால் வரமெல்லா
நைவே னோவா வென்னுல கம்மா நல்காயே. (எ௯)

காயா தென்பா லின்னருள் பூத்துக் கனியாதோ
வீயா தேக வீடென் பொருளென் றிறுமாந்தே
ஞாயா தென்பாழ் நெஞ்சிது சூற்கொண் டதனுனின்
றேயா தென்பா லிவ்வுல கீன்ற வொருகொம்பே. (அ0)

## வேறு

கொம்பு காந்தள் கரும்பு குழைத்துமே
லம்பு வாய்ந்த வரும்பு திருந்தவே
பம்பு சாந்தப் பனிவரைக் கீழ்நின்று
நம்பு வேன்பெற நன்மை பழுத்ததே. (அக)

பழுத்த செஞ்சுடர் பாதிபச் சேலென
முழுத்த தண்சினை முக்கள ஹூடுபொன்
விழுத்த குங்கிரி மெய்பகிர் தெய்வநான்
வழுத்த வென்னெதிர் வந்தது வந்ததே. (அஉ)

வந்த னத்த மனத்தினி துண்டன
னிந்த னத்தி லெரித்தன வெண்ணிலாப்
பந்த னத்தினற் பத்துமுக் கோணிமேலோர்
சந்த னக்கிரிச் சாரன் மருந்தையே. (அரு)

மருந்தி தென்ன வளைந்து சகோரமா
யிருந்து கண்க ளெதிர்ந்தல கம்மைதன்
முருந்து வெண்பன் முகிழ்த்த முகிழ்நிலா
விருந்தி னுண்ண விடாய்தணி வித்ததே. (அச)

வித்தி லாமல் விளைந்துல கென்னுநா
மத்தி னுைருள் வாய்ந்து வெளியிலே
சித்தி யாமொரு தெய்வப் பயிருமென்
பத்தி நீர்மனப் பாத்தி படர்ந்ததே. (அரு)

படர்ந்த தீமுனைப் பஞ்சென வஞ்சனை
தொடர்ந்த தீமை தொலையத் தொலைக்குமே
கடந்த ஞானியர் காணு முலகுடை
மடந்தை நூபுர மார்தளிர்க் காந்தியே. (அசு)

காந்த னன்னுதற் கண்குளிர் வித்திற
மாந்த குங்கும மங்கலச் செப்பின்மே
லேந்து மின்னிசை யாழ்தெறித் தின்னுயிர்
சாந்த மென்கிரிச் சாயையி னின்றதே. (அஎ)

நின்று தேடி நெறிக்கொளுந் தாயினைக்
கன்று தேடிக் கதறுதல் போலுனை

நன்று தேடுவ ளுடுவ னீயெனை
யென்று தேடுவ தென்னுல கம்மனே. (அஅ)

அம்ம னைக்குல கம்பிகைக் காதிதன்
செம்ம னைக்கிது செய்கை யறிக்கையிட்
டெம்ம னைக்கொ ரிடுக்க ணிழைத்துளார்
தம்ம னைக்கோர் சமனை விடுப்பதே. (அகூ)

விடுப்ப னின்னல் விடேனின்னன் மெய்வரத்
தொடுப்ப னன்மை தொடேனன்மை சூழ்ந்துனை
யடுப்ப னல்ல தடேனல்ல தேயவங்
கெடுப்ப தென்னுல கேகுல தெய்வமே. (கூ0)

வேறு

தெய்வமறை முறையிடுநின் சேவடியுஞ் சிலம்புந்
திருவுடையு முத்தாரந் திருந்தியநூ லிடையு
மைவரையி னிறைரோம வலயொழுங்கு வயிறு
மணிவரையை நிகருமரு மந்தபயோ தரமுங்
கைவளையும் வளைபொருமங் கலநாணின் கழுத்துங்
கருணைமடை திறந்தொழுகுங் கயல்விழியும்விழிபோய்த்
தைவருபொற் குழையுமுகத் தாமரையுங் குழலுந்
தாயுலகே யெழுதினனெஞ் சகப்பட்த்தி னிடத்தே. (கூக)

இடத்தகன்ற தனச்சுவட் டி லெடுத்தணைத்த வீணை
யெழுநிலையத் தெழுசுருதி யிசையமுதந் தெறிக்க
மடற்கமல வரிவளைக்கை மணிவிரன்மெல் லுகிரால்
வரிநரம்பு கடைதிருத்தி மரபின்முறை தெரிந்து
விடக்கருங்கட் கடைசிவந்து வெய்யில் சுருள் சுருட்டி
விடுமோலைக் குழைதடவ விரைக்குழல்பின் சரியத்
தொடக்கயங்கும் வரிச்சிறையஞ் சுகத்தொடுமுத் தாடிச்
சுகித்தருள்சா மளையுலகென் றுணைவிழிக்கோர் துணையே. (கூஉ)

துணையெனக்கு நெடுந்தமரத் துணைத்தரங்க மிரங்கச்
சுருட்டியகின் முருட்டுருட்டுந் துறைப்பொருநைக்குடபாற்
பணைமலர்ச்சந் தனப்பொதியப் பனிவரைக்கு வடபா ற்
படர்சினைமுக் களவினிழற் பவளவரை வுலப்பால்
விணையெறியு மதுவெயில்விட் டெறிந்திருளை விலக்க
விளங்குமர கதவொளிவிட் டெறிந்தொரிடப் பாலிற்

கணைபொருகட் கடைசுரந்து கருணைதிரை யெறியக்
கதிர்முறுவ னிலவெறித்தொர் கரும்புநின்ற நிலையே. (கூ௩)

நிலவுகொழுத் திருள்கிழித்து நெடுந்திசைபோய் விளக்கு
நிறைமதியிற் சதமடங்கு நிலவுதிரு வுருவும்
பலவமிர்தக் கதிர்துளிக்கும் பளிக்குமணி வடமும்
பலகலையும் விரித்தெழுதும் பருமணிப்புத் தகமு
மலகில்கலைப் பொருளுரைத்த வபிநயமுத் திரையு
மலம்புபுனற் குண்டிகையு மணிமணிக்குண் டலமு
மிலகுபிறைச் சடைமுடியு மெனக்குவெளி யாக
விருந்தனளென் னுலகம்மை யிதையமல ரகத்தே. (கூ௪)

அகத்தொருதன் னிலைதரித்தோ வல்லதுமற் றுளதோ
வறிந்திலனென் னுலகுடையா ளருளேயெவ ரறிவார்
சகத்துயிர்கள் புரக்குமிணைச் சரணிலொன்று மணியா
சனத்திருக்க மடக்கியொரு தாளுபர மடித்து
முகிழ்த்தவிழி மணிநாசி முனைகுறிப்ப வொருகை
முழந்தாளிற் கிடப்பவொரு முகிழ்விரற்கை யபைய
மகத்துவமுத் திரைதரச்செம் மாந்திருக்கு மந்த
மவுனபர வசவடிவை மறக்குமோ மனமே. (கூரு)

மனநினைப்பின் மலர்கடம்ப வனத்தமிழ்த்தோத் திரஞ்சூழ்
மழகதிர்ச்சிந் தாமணிமண் டபதத்தினு மாகி
யனவரதஞ் சத்திகள்வே றனந்தமயல் சூழ
வதிர்துரங்க வாகினிநின் றணிவாசல் புரக்கத்
தனதருகு வீணையின்மா தங்கியிசை பாடச்
சரோருகன்மான் மகேசனுருத் திரன்மணிக்கா லான
வினமணிச்சிங் காதனத்தி லினிதுதிரி புரையா
விமையமயி லுலகும்மைபங் கிருக்குமர சிருப்பே. (கூகா)

இருப்பதுநீ யுலகுமையே யிசைத்தமிழ்த்தேன் கொழிக்க
விமிழ்திரைத்தண் பொருநைநதி யிறைத்தருவி கொழிக்கும்
பொருப்பொருபா லிதுவறிந்து புகழ்வனிது வல்லாற்
புவனசரா சரத்திடத்தும் புயற்கயிலை யிடத்தா
ருருப்பவளம் பசப்பொருபா லொருபுறத்து மகத்து
முபநிடத முடிவிடத்து முபநிடதத் தப்பால்

விருப்பினடி தொழும்பாமன் வெளிக்குவெளி யாக
வெளியிடத்து நிலையமெனப் பரவுவனு னினையே. (கள)

நினைவன்மனத் திருள்வெறிக்க நிலவெறிக்குந் தாள
நிரைதெறிக்கக் கடைகுனிக்கு நெட்டிலைச்செங் கரும்பு
முனையினினற் பசுங்குருதி முகந்திரைக்குங் கணைபோன்
முகைகவிழ்க்கும் பசுந்தேறன் முருகுவிளைந் தரும்பு
புனைதிறற்பா சாங்குசமும் புதுநிலவும் புரளப்
புரளுமுழுத் தரளவடம் புதையவெயி லெறிக்குங்
கனகதிர்ப்பொன் னுருவமுமுக் கண்களுமெக் கண்ணுங்
கண்டுலகி னருளையிரு கண்கண்முகந் திடவே. (கஅ)

முகந்துகொள நிலவெறிக்கு முளைமருப்பு மடுத்து
முதிர்பொருப்பு நெருப்புதிர முறிந்துபொடி யுதிர்ந்து
தகர்ந்திடியப் பொருதுமெனத் தனிமுகத்து விழிசெந்
தழல்கவிப்ப முசலமொரு தடக்கைகொடு சுழற்றி
யிகந்துநில முதுகுகிழித் திரங்கியுர கேச
னினச்சுடிகை மணிதுணிக்கு மிகல்கலப்பை தாங்கி
யகந்தையறப் பச்சுதிர முகநதவரா கியுமா
யம்மையுல கிருக்கநமக் கார்க்கினிமேற் பயமே. (கக)

பயனிதெனத் தமிழ்பிறந்த பருப்பதமு நெடுநீர்ப்
பாலருவித் துறைக்கருங்கற் பாறைகிழித் திறங்கும்
புயல்படுதடாகமுந்தண் பொருநைவர நதியும்
பொதும்பர்நிழற் குளிர்தூங்கப் பொலிந்தபடித் துறையு
முயர்திருமுக் களவுவன மோங்குசிங்கை நகரு
மொருகரக முனியெதிர்கண் டுணர்பாவ நாசர்
மயில்விளையு முனதுசுப மங்களவிக் ரகமும
வாழியென வாழ்த்துரைதது வாழ்த்துவனு னுலகே. (க00)

பதிற்றுப்பத்தந்தாதி

முற்றிற்று.

உ

சிவமயம்.

பாவநாசம் என்னும்

# சிங்கை உலகம்மை.

## கொச்சகக் கலிப்பா.

### நூல்.

என்பா லிரங்கா திரும்பான் மனம்புடைத்த
வன்பா லறப்பான் மறப்பால தாகாதோ
வன்பான் முலைப்பா லழும்பா லனுக்களித்த
வுன்பா லடைந்தே னுலகுடைய மாதாவே. (௧)

என்னுடைய சென்ம மினியடையே னல்லனெனிற்
பொன்னுடைய மின்னிலையும் பொன்னடியுங் காண்பேனே
மின்னுடைய பல்லதுக்கி மேதியுடை யான்வருநா
ளுன்னுடைய தஞ்ச முலகுடைய மாதாவே. (௨)

ஏகிவிடி லிப்பிறவி யின்னமொரு சென்மமெடுத்
தாகினுஞ்செப் பாறு மருவியுநான் காண்பேனே
போகியர்போ லைம்புலனும் போம்வழிபோ காதசிவ
யோகிகடம் பேறே யுலகுடைய மாதாவே. (௩)

எண்பொருந வென்னெஞ்சா லின்னமுமுன் கோபுரமுந்
தண்பொருநை நந்தியுஞ் சந்நிதியுங் காண்பேனே
பண்பொருவா நீதிப் பழங்கடவுள் வேதாந்தத்
தொண்பொருளே யம்மே யுலகுடைய மாதாவே. (௪)

நாறு முடையுடம்பு நந்தினு லெந்தையொரு
கூறு முனதுதிருக் கோலமுநான் காண்பேனே
வாறுபதப் புள்ளினங்க ளள்ளிமுகந் துண்ணநற
வூறு மலர்க் கூந்த லுலகுடைய மாதாவே. (௫)

அண்டருல கெய்திடினு மாறும் படித்துறையுந்
தண்டலையுந் தென்பொதியச் சாரலுநான் காண்பேனே
துண்ட மதிக்குடுமித் தொங்கலார் சிந்தைபறி
வுண்டகதிர் வேற்கண் ணுலகுடைய மாதாவே. (௬)

தீட்டுதமிழ் மாமுனிக்குச் சித்திரைமா தப்பிறப்பிற்
காட்டுமணக் கோலமெந்தக் காலமுநான் காண்பேனோ
வேட்டுமுலைப் பாலிமய வெற்பரசி யொக்கலைவைத்
தாட்டு மகவே யுலகுடைய மாதாவே. (எ)

துள்ளு மறிதிரைப்பார் சூழினுமுன் சூழுநீர்
தள்ளு மருவித் தடாகமுநான் காண்பேனோ
வெள்ளுமதி னெய்யுமென வெங்குநிறைந் தேபுரமு
முள்ளுமா நின்று யுலகுடைய மாதாவே. (அ)

காடுஞ் செடியுமையோ கானடையே போய்த்திரிந்து
பாடுங் கவலையுமென் பாழ்வினையுந் தீராவோ
தோடுங் குழையு மெட்டித் தொட்டுவிளை யாடிநடந்
தோடுங் கயற்கண் ணுலகுடைய மாதாவே. (கூ)

காலைப் பொழுதெழுந்து காமர்மலை யத்தருவி
மாலைப் புனல்படிந்து வந்தணையுங் காண்பேனோ
மேலைக் கடவுள் விலையெழுதுஞ் சாசனப்பொன்
னோலைக் குழையா யுலகுடைய மாதாவே (க0)

பைமருந்தும் வாகட நூற் பண்டிதனர் கொண்டுவந்த
கைமருந்து மேதுமஞ்சட் காப்புமருந் தொவ்வாதாற்
செய்மருந்து பின்னிடுமுன் தீர்த்தமருந் துண்டுபிணிக்
குய்மருந்து வேறே துலகுடைய மாதாவே. (கக)

காட்டு மருந்துங் கடைமருந் துங்கைசலிக்கக்
கூட்டு மருந்துங் குணமருந்தென் பாருனையே
யாட்டுமருந் தைம்புலனுக் கன்பிருந்தாற் போலுவகை
யூட்டுமருந் துண்டோவுலகுடைய மாதாவே. (கஉ)

பன்னுதர மோவாயுப் பற்றிவலித் தீர்த்தலைத்தா
லென்னுதரம் வேறே யிருப்புதர மோவுரையாய்
மன்னுதர மாறுடைய மைந்தரிரு பேரையரு
ளுன்னுதரம் வேறோ வுலகுடைய மாதாவே. (கங)

ஆர்மருந்தும் வேண்டேனீ யாடுமபி டேகமஞ்ச
ணீர்மருந்து பாழ்ம்பிணியை நீக்குமருந் தாகாதோ
வேர்மருந்தும் பசிலையு மெய்மருந்தாங் கைம்மருந்து
மோர்மருந்து மேனோ வுலகுடைய மாதாவே. (கச)

வண்டிருந்தார் கூந்தன் மலைமருந்தா முன்னையுமுட்
கொண்டிருந்து மாயக் கொடும்பிணிக்குள் ளாவேனோ
பண்டிருந்தார்க் குள்ளே பசித்தபசி பாலமிர்த
முண்டிருந்தார்க் குண்டோ வுலகுடைய மாதாவே. (கரு)

பாமரனென் சொல்வேனோர் பச்சிலையுந் தீர்த்திடுமுன்
காமரபி டேகமஞ்சட் காப்பினுக்குந் தீராதோ
நீமரபி னுடமஞ்ச ணீர்குடித்து நோயிருந்த
தூமர்கன வன்றோ வுலகுடைய மாதாவே. (கசு)

பண்டிதரே வாரும் பரிகாரம் பாரும்வெகு
கண்டிதமாய் நோய்க்குமது கைம்மருந்து தாருமென்றே
கொண்டிதனாற் றீருமென்றுட் கொண்டமருந் தெத்தனையோ
வுண்டிதநான் காணே னுலகுடைய மாதாவே. (கஎ)

முன்குறைய தாக முதுக்குறைவில் லாரிகழப்
பின்குறைதான் பட்ட பெருங்குறைதான் போதாதோ
வென்குறையி தென்னா ரினிக்குறைவந் தான்முழுது
முன்குறையி தென்பா ருலகுடைய மாதாவே. (கஅ)

தப்புவிப்பாய் நோயை யென்னைத் தாவிப்பாய் சற்குருவாய்ச்
செப்புவிப்பாய் ஞானந் தெளிவிப்பா யென்றிருந்தே
னிப்புவிப்பால் வேறுபட்ட தென்குறையென் றாருக்
கொப்புவிப்பா யம்மே யுலகுடைய மாதாவே. (ககூ)

இத்தரநின் றோரா யிரந்தரநொந் தேனுனைநான்
பத்தரமென் றுளுமனப் பாழிரும்பு தேயாதாற்
றத்தரமென் றோடிவருஞ் சண்டனுக்குன் றெண்டனப்போ
துத்தரமென் சொல்வே னுலகுடைய மாதாவே. (உ0)

காகபல மங்கோர் கதலிபல மாகாதென்
போகபலன் மெய்யடியார் போக்யபலன் போலாமோ
வாகபல் சொல்லியென்ன வாவதடி யேன்பிறந்த
யோகபல நன்றாச் சுலகுடைய மாதாவே. (உக)

நீர்க்குமிழி வாழ்வை நிலைக்குமிது வென்றுநெடும்
பார்க்குளிருந் தேதோ பழிக்குளகப் பட்டேனா
னார்க்குளெனை யொப்பிடுவ தம்மா வுனைநம்பி
னோர்க்குளவ மானே னுலகுடைய மாதாவே. (உஉ)

கன்றுமறி போற்குதித்துன் காதின்மறிந் தோடமுக்கட்
குன்றுமறி வங்கடுவுங் கூர்விழியின் பார்வையினு
லென்றுமறி னோரறிவ தெத்தனையோ வத்தனையி
லொன்று மறியே னுலகுடைய மாதாவே. (௩௧)

புக்கலைவே னங்குமிங்கும் பொய்க்கலைநூல் சொல்லிவெறிக்
குக்கலைநேர் வார்க்கிதமே கூய்க்கலைவேன் கொள்கை யென்னே
மிக்கலைநூன் முத்தொளிரு மேகலைசூழ் வெற்பரசி
யொக்கலைமேற் பிள்ளா யுலகுடைய மாதாவே. (௩௨)

ஈட்டியதுக் காகவங்கு மிங்குமெனக் காட்டிவம்பி
லாட்டியலைத் தாயினிநா னாடினதும் போதாதோ
காட்டிமறைத் தாருயிர்க்குக் கன்மபல போகமெல்லா
மூட்டிவைத்தா யுண்டே னுலகுடைய மாதாவே. (௩௩)

செவ்வொன்றோ காண்பேன் செலவொன்றோ விம்மிவரத்
திவ்வொன்றோ ஊழ்வினைதா னென்பதொன்றோ வாயிரமோ
வவ்வொன்றோ கோடிதத்துண் டாக்கமன மேக்கமுற்ற
தொவ்வொன்றோ கெட்டே னுலகுடைய மாதாவே. (௩௪)

தின்னுடனே காலர் சினத்துடனே யென்னையுறத்
தன்னுடனே செல்வதற்குத் தாழ்க்கிலவர் தாழ்வாரோ
வென்னுடனே மாறுகொண்டோ ரிங்கிவரென் றங்கவரை
யுன்னுடனே சொல்வே னுலகுடைய மாதாவே. (௩௫)

புத்தியென்ன வித்தையென்ன போதமென்ன வேதமந்த்ர
சித்தியென்ன வித்தனைக்குஞ் சேதமென்ன வாராதோ
பத்தியென்ன தென்னவொரு பான்மையிலே மேன்மைபெற
யுத்தியென்ன சொல்லா யுலகுடைய மாதாவே. (௩௬)

விண்டாற் பயனேது விண்டபடி யேயுனையுங்
கொண்டாற் பிறவி கொடுத்தார் கொடுப்பாரோ
கண்டாற் பசிபோமோ கையளவி னெய்யிடுசோ
றுண்டாற் பசிபோ முலகுடைய மாதாவே. (௩௭)

ஈட்டுவித்தா யெவ்வினையு மீட்டினே னேதேதொன்
றூட்டுவித்தா யப்படிநின் றூடினேன் மேற்குறையோ
காட்டுவித்தாய் கண்டதெல்லாங் கண்டேனென் கன்மபல
மூட்டுவித்தா யுண்டே னுலகுடைய மாதாவே. (௩௮)

பார்வழிச்சென் றெத்தனையோ பாடினேன் பாதகர்தம்
பேர்வழியுங் கேட்டுருகப் பேச்சுரைத்தேன் பேய்ச்சுரைக்காய்
நீர்வழியுண் டோகசப்புத் தீம்பால்விட் டேதுபிழைப்
போர்வழியுங் காணே னுலகுடைய மாதாவே. (௩௯)

பெத்தரிக்கத் தார்க்கிதமாய்ப் பேசினுமென் பேச்சையவர்
கத்தரிக்கப் பார்ப்பரல்லாற் காசுபணந் தாராரால்
வித்தரிக்கத் தேவையில்லை வீண்குடும்பந் தாங்கி யென்னு
னுத்தரிக்கக் கூடா துலகுடைய மாதாவே. (௪0)

சித்தமோ கந்திமிர்ந்த தீவினையோ தீவினையா
மத்தமோ கம்புரிய வன்னதுமோ கித்ததென்ன
சத்தமோ வாருதியென் சாதகமோ டெட்டிதுதான்
யுத்தமோ சொல்லா யுலகுடைய மாதாவே. (௪௧)

வெள்ளமறி யாமல்வழீஇ வீழ்வதுபோல் வெவ்வினையின்
கள்ளமறி யாமன்மனங் கைகடந்த தென்னுமோ
துள்ளமறி யேந்தினற்குந் தோன்று வுனதுதிரு
வுள்ள மறியே னுலகுடைய மாதாவே. (௪௨)

நன்றுங் குறியே னயங்குறியாய் நின்றதிலே
யென்றுங் குறியே னிடசாற் குறியேனென்
பொன்றுங் குறியாற் புழுங்கினேன் போக்குவரத்
தொன்றுங் குறியே னுலகுடைய மாதாவே. (௪௩)

முத்தார மந்த முழுத்தார் வதனவிம்ப
வித்தார மாமதியுன் மேனி செக்கர் மாலையென்றே
சித்தார விந்தம்வைத்த செல்வருக்கோ செல்கதிவீ
டெத்தார மிட்டா யுலகுடைய மாதாவே. (௪௪)

வைப்புரிய முந்நீர் வலம்புரியுந் தொண்டரவ
ரெப்புரிகை யாள ரிடம்புரிவின் ஞேரிடங்காண்
வெற்பிருக்கை யாளரொடு வேதவிந்து நாதாந்தத்
துப்பரிக்கை மேல்வா முலகுடைய மாதாவே. (௪௫)

பிட்கிற் பிளவுபடாப் பேதமைப்பட் டேற்றகையை
முட்கிட் டியினெமனுர் மோதுவரங் கேதாமோ
மட்கிப் பகன் மதிபோல் வாழ்ந்தவரைத் தாழ்ந்திரந்துண்
டெட்கித் திரிந்தே னுலகுடைய மாதாவே. (௪௬)

வம்பருக்கு ளாய்ப்புறம்போய் வாடாம லுன்கருணைச்
சொம்பருக்கு ஞானத் தொழும்பருக்கு ளாவேனோ
நம்பருக்கு மாரணற்கு நாரணற்கு மிம்பருக்கு
மும்பருக்கும் வாழ்வே யுலகுடைய மாதாவே. (சஎ)

குன்றோ கடலோ குறித்தோ நெறித்தோடிச்
சென்றோ ரிடந்தேடிச் செல்வனென்று சொல்வதற்கே
யின்றோ வுளதோமற் றெல்லாங் கடந்ததென்ப
தொன்றோ பலவோ வுலகுடைய மாதாவே. (சஅ)

குன்றுபடு வெங்கானிற் கோடுபடா யானைகொப்பத்
தென்றுபடு மென்பா ரெமபடருக் கொப்பாரே
கன்றுபடு நோயைக் கரைத்திடிலோ சித்தமெனக்
கொன்றுபடு மம்மே யுலகுடைய மாதாவே. (சகூ)

பெத்தரிகந் தானே பெறுகதியென் பாரதையுன்
பத்தரிகழ்ந் தேமுப் பரகதிச்சென் றேறுவரா
னத்தரிகண் சாத்துமொரு நாயகர்கண் சாத்துதனத்
துததரிகஞ் சாத்து முலகுடைய மாதாவே. (ருo)

மல்கித திரியில் வளர்தீப நெய்சுருங்கி
லெல்கித் திரியுமனத் தன்பறுவே னென்பெறுவேன்
நல்கித் திரியாத ஞானம்வைத்தா லீனவினைக்
கொல்கித் திரியே னுலகுடைய மாதாவே. (ருக)

சொல்காதோ கண்ணே சுருங்காதோர் தன்மையன்றி
மல்காதோ ரென்றதையெவ் வாறுணர்ந்து தேறுவனோ
நல்காதோ தம்மைமுற்று நம்பினே னென்பதெனக்
கொல்காதோ சிந்தை யுலகுடைய மாதாவே. (ருஉ)

ஆற்றுநீர் போற்பெருகி யற்றுவிடு மல்லதறச்
சேற்றுநீர் போற்குழம்புஞ் செல்வநிலை நில்லாதா
லேற்றுநீர் கொள்வீரென் றீயாருக் கீவாருக்
கூற்றுநீ ரன்றோ வுலகுடைய மாதாவே. (ருங)

நன்றுசொல்லி நால்வருக்கு நன்மைசொல்லிப் புன்மை சொல்லிக்
கன்றுசொல்லி ஞலவரைக் காய்ந்துசொல்லி யேற்பதென்னோ
வின்றுசொல்லி நீக்கவொட்டா தில்லாமை பொல்லாத
தொன்றுசொல்லி லாமே யுலகுடைய மாதாவே. (ருச)

கத்துப் பிடித்தேன் கடைப்பிடியென் றுன்கருணைக்
கொத்துப் பிடித்தேனைக் கொண்டுபணி கொள்ளாயோ
பத்துப் பிடித்தாதி பாண்டரங்கன் தாண்டவத்துக்
கொத்துப் பிடித்தா யுலகுடைய மாதாவே. (நிரு)

மூடமிது வன்றோ முறைதிறம்பி வம்பிலையோ
பாடமிடுங் கல்விப் பயனொழுக்கம் பாழ்படலாற்
றேட வரும்பொருள்கள் சேர்த்தவெல்லாம் போக்கியவெற்
றோடமென நிறபே னுலகுடைய மாதாவே. (நிசு)

மூடப் படுதழல்சூழ் மோகமன மாய்நமன்போ
ராடப் படுமுன்விரைந் தாட்படநின் பாற்படுமோ
வாடப் படுசிறையாய் வல்விலங்கிற் பட்டவருக்
கோடப் படுமோ வுலகுடைய மாதாவே. (நிஎ)

கிட்டுமோ கிட்டாதுன் கேண்மைவணங் கேனெனதூழ்
தட்டுமோ தட்டாதுன் றண்ணளியைத் தாராய்நீ
யெட்டுமோ வெட்டாத வென்மனநா னீடேற
வொட்டுமோ வொட்டா துலகுடைய மாதாவே. (நிஅ)

பண்ணாது நன்மைபுன்மைப் பாழ்வினையென் னாள்விடியு
மண்ணா திருந்தான் மணியுமணி யாகாதே
யெண்ணாத தெண்ணிமன நீடழிய வைப்பதுனக்
கொண்ணாதென் கண்ணே யுலகுடைய மாதாவே. (நிகூ)

பண்ணாதோ பேரருளுன் பார்வையத னாலெனக்கு
நண்ணாதோ விவ்விடரா னுனிரங்க நீயிரங்க
வெண்ணாதோ வுன்மனந்தா னென்மனங்கல் லென்றதுதா
னெண்ணாதோ வம்மே யுலகுடைய மாதாவே. (சூ0)

நீதியவா யுன்னை நினைப்போர் வினைத்தீயைக்
காதியசாம் ப்ராச்சியபதங் கைவிலைக்குங் கொள்வாரால்
வாதிபல ரங்கவருக் கிங்கிதனைப் பார்க்கவுமோ
ரூதியம்வே றுண்டோ வுலகுடைய மாதாவே. (சூக)

வெள்ளமோ வெள்ளிமலை மேடோ தமிழ்மலைக்கீழ்ப்
பள்ளமோ தெள்ளியநாற் பத்துமுக்கோண் மத்தியமோ
கள்ளமோ காண்கிலனுன் காண்பே னுனக்கடியா
ருள்ளமோ கோயி லுலகுடைய மாதாவே. (சூஉ)

மெள்ளத் திருப்பாயென் விம்மலையுன் பொம்மன்முகை
வள்ளத் திருப்பான் மறைக்குழந்தைக் கேசுரப்பாய்
கள்ளத் திருப்பாமென் கன்மனம்விட் டேயடியா
ருள்ளத் திருப்பா யுலகுடைய மாதாவே. (கூங)

பொன்னைநம்பி வேறோர் புவியைநம்பி யொவ்வொருவர்
தன்னைநம்பி யாயிரம்பேர் தன்னைநம்பி வாழ்வாரா
லென்னைநம்பி னோர்சலிக்க யான்சலிக்க வென்றுநன்று
யுன்னைநம்பி வாழ்ந்தே னுலகுடைய மாதாவே. (கூச)

கற்றதுணை யுண்டாங் கருத்தறிவு கல்வியன்றோ
பெற்றதுணை மற்றோர் பெருந்துணைகள் வேறுமோ
வற்றதுணை யாதோ வருந்துணையாய் நல்கெனக்கா
ருற்றதுணை யம்மா வுலகுடைய மாதாவே. (கூரு)

ஆட்டைக் கொருதரந்தா னுனது மீனமலக்
கூட்டைக் கழுவியம்மை கோயின்மணி வாசலிற்போய்ப்
பாட்டைக் குளறினுஞ்சொற் பற்றுகிலா தற்றதுள
மோட்டைக் குடமோ வுலகுடைய மாதாவே. (கூகூ)

வேட்டமிலாக் கானகத்து வெவ்விலங்கா வெவ்வினையுன்
னோட்டமிலாப் பாழ்மனது நண்ணினதுக் கொண்ணுதோ
வாட்டமிலாச் சீர்குலைந்து வாடிநிற்க நான்மறுகி
லோட்டமிலாத் தேரோ வுலகுடைய மாதாவே. (கூஎ)

சொற்பனமாம் வாழ்வுசுப சோபனமா ஞானமென்று
கறபனயா வுந்தெளிந்து காண்பனவுங் காண்பார்நா
னற்பனதோ சத்துணரேன் ஞானநிலை கண்டவர்த
முற்பனமார் காண்பா ருலகுடைய மாதாவே. (கூஅ)

பூசனையா லுன்கமலப் பூஞ்சரணம் பூர்வசென்ம
வாசனையார் காண்பரது வஞ்சனையார் காண்பாரோ
வீசனையா னுமவ ரெண்ணு ரவர்கருத்தின்
யோசனையார் காண்பா ருலகுடைய மாதாவே. (கூகூ)

நையும்வகை செய்துமன நாணும்வகை செய்தியறஞ்
செய்யும்வகை செய்துநெறி சேரும்வகை சேராயோ
பொய்யும்வகை யொன்றுமிலாப் புண்பாடும் போயடியே
னுய்யும்வகை யுண்டோ வுலகுடைய மாதாவே. (எ0)

கோலக்கங் காதியுங் கூன்பிறையு நாறுமுன்று
ணீலக்கண் பார்த்தெனக்கு நீயுதவு நாளெதுநாண்
மாலக்கண் சாத்துமண வாளரொடு நீயிருந்த
வோலக்கங் காண்பே னுலகுடைய மாதாவே (௭௧)

ஆலமிடு துன்பத் தறிவினெருப் பாற்றின்மயிர்ப்
பாலமிடு கின்றதெனப் பண்பினிடம் வெம்பினதால்
வாலமுட வெண்பிறையார் மாலையிட நாலுமறை
யோலமிட நின்று யுலகுடைய மாதாவே. (௭௨)

பெண்மையென்று மாண்மையென்றும் பேதமென்றுஞ் சாதியெல்லாந்
தண்மையென்று நெஞ்சிலொரு தன்மையென்றுங் காண்பாராற்
றிண்மையென்று பல்பலவுந் தேர்வார் தெளிந்தபடி
யுண்மையென்று காண்பே னுலகுடைய மாதாவே. (௭௩)

ஆங்கா ரணந்தான தாங்கார வெம்பிணிக்குட்
பாங்கா ரிருந்து பரிகாரஞ் செய்வாரேல்
வேங்காரம் வைத்தபுண்போல் வெவ்வினைப்பட் டேற்கிரங்கா
யோங்கார வாழ்வே யுலகுடைய மாதாவே. (௭௪)

நீர்குறைய வாடி நிலைகுலைந்த தாமரைபோற்
சீர்குறைய வாடிநொந்து சிந்தைகுறை யாகாதே
யார்குறைசொல் வோருனைநீ யங்குறைய வீங்கெளியேற்
கோர்குறையு முண்டோ வுலகுடைய மாதாவே. (௭௫)

தப்பனையென் பார்ப்பருன்னைத் தாழ்ந்தவரைச் சூழ்ந்தவற்குக்
கைப்பனைவே மூந்தொழுவார் காம்பனைய தோளனையார்
துப்பனைய ஞானச் சொரூபனைமால் செய்யநித
மொப்பனைசெய் கூந்த லுலகுடைய மாதாவே. (௭௬)

செப்போசெப் பன்றோநான் செப்புவதிங் கிப்புவன
வைப்போவைப் பன்றோநீ வாழ்வதென்றும் வாழ்வதெல்லாந்
தப்போதப் பன்றோ தனியுனைநா னொந்ததுனக்
கொப்போவொப் பன்றோ வுலகுடைய மாதாவே. (௭௭)

செப்பலவுன் கொங்கைபசுந் தேனலவுன் பான்மொழிசெந்
துப்பலவுன் செவ்வாய் சுரும்பலவுன் பார்வையம்மே
யிப்பலவொப் பிந்திரைமற் றெல்லார்க்கு முன்னுறுப்புக்
கொப்பலவென் சொல்வே னுலகுடைய மாதாவே. (௭௮)

எய்த்தவெலாங் கையேற் றிரந்தவெலா மித்தனைசூழ்
வித்தவெலா மண்பிறப்பில் வீழ்ந்தவெலாந் தாழ்ந்திடநீ
வைத்தவெலா மெண்ணியுன்னை வாழ்த்தினவெ லாமனதுக்
கொத்தவெலாஞ் சொன்னே னுலகுடைய மாதாவே. (எகூ)

மெல்லாச னும்புபத்து வேதியனப் போதியற்ற
நில்லாசொ ரூபமதி னேசம்வைத்து நிற்பேனோ
நல்லா சிரியரென ஞானமொழிந் தார்மயங்கு
முல்லாச மின்னே யுலகுடைய மாதாவே (அ0)

காதிமனோ வாக்குடல்செய் கற்பனையோ நற்பகன்முன்
மோதிமமாய் ஞான முடிக்கின்முடி வாகாதோ
சோதிமகா மேருவில்லார் துங்கமனப் பங்கயத்தி
லோதிமமாய் நின்று யுலகுடைய மாதாவே. (அக)

கற்சாபத் தண்ணருளை நான்சார நல்கிலுனை
மற்சாதிப் பாரெவரோ வந்திலையுன் சிந்தை யென்னோ
கற்சாபத் தார்கருணைக் கண்களிக்க நண்பளிக்கு
முற்சாகப் பெண்ணே யுலகுடைய மாதாவே. (அஉ)

நித்தியோப வாசபல நினைவழி பாடுசெயுந்
துத்தியோப சார சுகிர்தபல மொவ்வாதாற்
சத்தியோப சாரசுப தன்மபரி பாலனஞ்செ
யுத்தியோக வாழ்வே யுலகுடைய மாதாவே. (அங)

முற்பா தகமிதுவோ மூதுணரே னேதுதய
வெற்பா தவக்கிரணம் வீசவிருள் சூழாதே
பொற்பாத சேவையிடர் போக்காத தூழ்புரிந்த
வுற்பாத மன்றோ வுலகுடைய மாதாவே. (அச)

நற்பலமொன் றெய்திலதே நான்பலவா மெண்ணுமிடர்
பற்பல்புண் பாடு பலபலவென் சொல்வேனோ
பொற்பலர்செந் தாமரையிற் பூத்தவென வாய்த்தொளிரு
முற்பலமென் கண்ணே யுலகுடைய மாதாவே. (அரு)

இங்கரிப்புக் காரரைப்போ லேனரிப்ப தென்பரந்தத்
தொங்கரிக்கட் டேதொழிப்பார் சொற்கவியுஞ் சொல்வேனோ
சங்கரிக்கத் தானைபடை தான்வேண்டு மோகலிநீ
யுங்கரிக்கப் போமே யுலகுடைய மாதாவே. (அசூ)

சூழியத்துக் கான சுரிகுழற்குந் தோளிணைக்கும்
வீழியத்துப் பாரிதழ்க்கும் வெண்ணகைக்கும் வெவ்வேறு
வாழியத்த தாமரைக்கும் வாழ்த்துரைத்து வாடினநா
னூழியத்துக் காளோ வுலகுடைய மாதாவே. (அஎ)

புந்திச் செயன்மயலிற் பூண்டுபுல்லி லேதவிடு
சிந்திச் சிதறினதாய்த் தீர்ந்ததிடர் தீர்வேனோ
வந்திச்சு பாகிசிந்தை *யானைவளப் போர்கணையா
யுந்திச் சுழியா யுலகுடைய மாதாவே. (அஅ)

நீஞ்சக் கடப்படுமோ நின்கரணத் தோணிதனில்
வாஞ்சைக் கடல்கடந்தென் வஞ்சநெஞ்சம் வாராதே
தீஞ்சர்க் கரைமொழியாய் செய்யசரக் கூர்விழியா
பூஞ்சற் குழையா யுலகுடைய மாதாவே. (அகூ)

அம்பளவோ காவி யரும்பளவோ பார்வையருட்
சம்பளமேற் றுண்பவர்க்குத் தானமுத்தித் தானமன்றோ
பம்பளகை யூரும்விண்ணோர் பட்டினமுங் கட்டியதற்
கும்பளமோ விட்டா யுலகுடைய மாதாவே. (கூ0)

தேர்ச்சிதரா நெஞ்சறிவைத் தீங்கதிர்ச்செஞ் சாலியெனுப்
பேர்ச்சிதரா தின்னம் பெருஞ்சிதலா யுண்ணுதோ
வார்ச்சிதரா வூமே வலிதேநான் சொன்னதுகேட்
டேர்ச்சிதநீ செய்யா யுலகுடைய மாதாவே. (கூக)

பற்றிவைத்த வென்னறிவைப் பாழ்ங்கவலை வீண்படவே
முற்றிவைத்த வம்பின் முதலாக்கக் காரியமோ
நெற்றிவைத்த கண்ணரொடு நீடுவாய்த் தாயிலைநா
னெற்றிவைத்த துண்டோ வுலகுடைய மாதாவே. (கூஉ)

விட்டிலே யொத்து விளக்கிலே வீழும்வினைக்
கட்டிலே வீழ்ந்துதவங் காண்கிலனென் றேங்குவனோ
தட்டிலே யேழைமனஞ் சஞ்சாரப் பட்சிமய
லொட்டிலே வீழா துலகுடைய மாதாவே. (கூங)

நானேதிங் குண்மைசொல்ல ஞானமறி யேன்மயிலே
மானேயென் பொன்னே மணியே மரகதமே
தேனேமென் பால்சேர்ந்த தீங்கனியே மாங்குயிலே
யூனேயென் பேன்கே ளுலகுடைய மாதாவே. (கூச)

---

* யானைவளப் பேர்கணை என்றும் பேதம்.

மண்ணுங் குழிந்ததற்பர் வாயிலிற்போய் வந்துநொந்த
வெண்ணுங் குழம்புமன மேங்குமெனக் கேயிரங்காய்
பண்ணுங் குழைந்தசொல்லும் பான்மணக்க மேனேமுலே
யுண்ணுங் குழந்தா யுலகுடைய மாதாவே. (சுரு)

பொட்டகத்துப் பொன்போலும் புட்கலத்துச் செம்மணிபோ
லிட்டகத்துக் குள்ளேநா னென்றும்வைத்துக் காண்பேனோ
சட்டகத்துக் கொன்றேகைத் தாட்கிபல கூனிதென்ன
வொட்டகத்துக் கொன்றே வுலகுடைய மாதாவே. (சுசு)

பெண்டாட்டி பிள்ளையெனப் பேயாட்டங் காட்டியெனக்
கொண்டாட்டு வித்தவுனைக் கொண்டாட வேண்டாமோ
மிண்டாட்டு பாழ்ங்கலியால் வீணுட்ட மாட்டியெனே
யுண்டாட்ட வேண்டா முலகுடைய மாதாவே. (சுஎ)

பற்றப் பிறவினையைம் †பாலின்மறைத் தோர்வளர்த்த
தெற்றைப் பிறகிடிவித் தீப்பிறவி தீராதோ
மற்றைப் பிறைமயங்க வட்டரத்னச் சுட்டிகட்டு
மொற்றைப் பிறையா யுலகுடைய மாதாவே. (சுஅ)

காமச் சுடர்நெருப்புக் காயவழி தேர்ந்துநெஞ்சி
லேமச் சுடர்பொரிபோ லென்றும்வைத்துக் காண்பேனோ
சேர்மச் சுடர்முடித்தார் சூர்யோ தயச்சுடர்சே
ரோமச் சுடரே யுலகுடைய மாதாவே. (சுகூ)

வெவ்வா தனவினையை மேவா தருள்கிலேவே
றெவ்வா தரவிங் கிரவா திரங்காயே
லவ்வா தவன்வெயிற்கு ளானபுழு வாய்மெலிவ
தொவ்வாதென் னம்மே வுலகுடைய மாதாவே. (க00)

ஏழிசைய வண்டிரங்க வெண்டிசைய வெண்டுகிலார்
சூழிதழி கிண்டு துணைத்தா ளளித்தாள்வா
யாழிநெடு நீரொருகை யாபோச னத்தர்தொழ
வூழிதொறும் வாழி யுலகுடைய மாதாவே. (க0க)

உலகம்மை கொச்சகக் கலிப்பா,

முற்றிற்று.

---

† பாலின் மறைத்தோர்-பானமறந்தோர் எனவும் பாடபேதம்.

சிவமயம்.

## பாவநாசம் என்னும் சிங்கை

# உலகம்மை சந்த விருத்தம்.

தாந்த தன்னன தான தனந்தன
தாந்த தன்னன தான தனந்தன
தாந்த தன்னன தான தனந்தன—தனதான.

வாழ்ந்த தென்னவி சால தலங்களை
யாண்ட தென்னப்ர தாப மிகுந்திறு
மாந்த தென்னவிர் தாவின் மதங்கொடு தலைகீழாய்
வீழ்ந்த தென்னவை யோபி றகங்கவர்
மாண்ட தென்னபொ யோவெ னவிங்கினி
வேண்டி யென்னப்ர யோச நநின்பத மடைவேனோ
சூழ்ந்து பன்னிரு காத மணங்கமழ்
தேன்கள் விம்மியி ருல்கள் கிழிந்திடை
தூங்கு தென்மலை யாச லநின்றடி யவர்போலத்
தாழ்ந்து சன்னிதி யூடு புகுந்தலை
மோந்து தண்மலர் மாரி பொழிந்திடு
தாம்ப்ர பன்னிம கார நதின்றமெ னுலகாளே. (க)

தனந்த தானன தனதா னனதன
தனந்த தானன தனதா னனதன
தனந்த தானன தனதா னனதன—தனதான.

பரந்து நாடொறு மறிவீ னரைமன
துளைந்து பாடியு முதவா ரதுகொடு
பசும்பொ னுபீரம் வருமா கிலுமவர் பிறகேபோய்
இரந்து தானினி முடியா ததைவிட
விறந்து போவது மொருதாழ் விலையென
திடும்பை பாரத கதைதா னுனதிரு வருள்தாராய்
புரந்த ராதியர் பதமோ ரணுவென
விகழ்ந்து ஞானமு மனுபூ தியுநிலை
பொருந்து போதமு முடையார் பெறுகதி பெறுவேனோ

கரந்தை வார்சடை முடியா ரிருகரம்
வகிர்ந்து கோதிய குழலாய் தமிழ்முனி
கமண்ட லோதக நதிமேல் கரைவள ருலகாளே. (௨)

பிறந்த நாண்முத லுனையே துதிசெய
மறந்து போனது விதிதா னினியொரு
புறம்ப தாகவு மனையே கனவிலு நினையாதே

யிறந்து போவது நிசமே யடிமையு
மிருந்த நாள்வரை யுனையே மலரடி
யிறைஞ்ச வேயருள் புரிவாய் திரிபுரை யபிராமி

சிறந்த கோமதி மயிலே குயின்மொழி
நிறைந்த சோதியின் வடிவே மலைமகள்
திகம்ப ரீயெனு மழகே யழகொளிர் சிவகாமி

கறந்த பாலமு தனிவே தனமதை
யருந்தி யேபொதி கையில்வாழ் தமிழ்முனி
கமண்ட லோதக நதிமேல் கரைவள ருளகாளே. (௩)

---

தான தத்தன தான தனந்தன
தான தத்தன தான தனந்தன
தான தத்தன தான தனந்தன—தனதான.

ஊர மெத்தனை வேனி னெடுஞ்சுர
கோர மெத்தனை காடு நெருங்கிய
சூழ லெத்தனை மாக டினஞ்சொல முடியாதே

பார னேத்தினு மோடி நடந்திரு
கால்க டுத்தத லாம விதம்பெறு
பாட லுக்கொரு காசு பணந்தரு பவர்காணேன்

ஆர ணப்பிர மாதியர் விஞ்சையர்
தேவர் சித்தர்மு னீசரர் புங்கவர்
ஆதி பத்திய ரான புரந்தரர் முதலானோர்

சார நித்திய சேவை வழங்கிமண்
மீது தெக்கண பாரிச வங்கிரி
சார விற்கொலு வாக விருந்தவெ ளுலகாளே. (௪)

தத்த தான தனத்தன தானன
தத்த தான தனத்தன தானன
தத்த தான தனத்தன தானன—தனதான.

கட்டு பாச மிறுக்குவ ராநய
னத்தி லூசி நிறுத்துவ ராநர
கத்தி லேதலை குப்புற வேவிழ வெறிவாராம்

வெட்டி யூறு படுத்துவ ராமதி
லுப்பு நீரு மொழுக்குவ ராமழன்
மெத்தி வாதை வருத்துவ ராமன முருகாராங்

கிட்டி யூடு நெறுக்குவ ராமெம
னுக்ர தூதர் பொறுக்கரி யாரவர்
கிட்டி நாளு மலக்களி யாதருள் பெறுவேனோ

முட்டி லாம லறத்தை யெநாளும்வ
ளர்த்து நீள்பொரு ணைத்துறை மேவிய
முக்க ளாநிழ லிற்குடி வாழுமெ னுலகாளே. (௫)

---

தான தத்தனத் தனத்தனத்த தானதன
தான தத்தனத் தனத்தனத்த தானதன
தான தத்தனத் தனத்தனத்த தானதன—தனதனதனன.

வேத னுக்கெனைக் கிருப்பிடிக்க வேலைபல
தாய ருக்கெனைப் பெறச்சலிக்க வேலையொரு
மேதி னிக்கொடிக் கெனைச்சுமக்க வேலைகொடு நரகிலேநமனார்

தூத னுக்கெனைப் பிடித்திழுக்க வேலையம
ராச னுக்கெனைச் சிதைத்திறக்க வேலையெளி
தோபி றப்பெடுத் தெனக்கிறக்க வேலையிவை யொழியுநாளுளதோ

சாத னத்தனத் தவத்தகத்ய மாமுனிவ
னாத ரித்தகித் திரைப்பிறப்பி லேவருவ
தாம தத்துவத் தைவித்தரிக்க லோகமதி சயமதாமெனவே

மாதர் மக்களோக் கமிக்கமுக்ய ராய்முழுது
மாது முத்தமிழ்க் கிரிப்புறத்தில் வீழ்பொருநை
மாந திப்படித் துறைக்கடுத்த கோவில்வள ருலகநாயகியே (௬)

தத்தன தனனத் தாத்த தந்தன
தத்தன தனனத் தாத்த தந்தன
தத்தன தனனத் தாத்த தந்தன—தனதான.

மித்திரர் குறையைக் கேட்க வும்பெறு
புத்திரர் பசியைப் பார்க்க வுந்தமிழ்
விற்கவு மெலிவுற் றேற்க வுந்தொழில் பலவானேன்

எத்தனை கவலைக் காற்று வன்றின
மிப்படி யலையப் பார்த்தி ருந்தனே
யெப்படி மறுமைக் கேற்ற சிந்தனை பெறுவேனோ

தத்திடு பொருளைத் தீர்த்த மும்படி
வித்துறு வினையைப் போக்கி யன்பொடு
தட்டுறு புவனத் தோர்க்க ருங்கதி தருவாயே

சித்தச னுருவைத் தேய்த்த புங்கவ
கர்த்தனொ டருளைப் பூத்திருந் தொரு
சித்திரை விசுவிற் காட்சி தந்தவெ னுலகாளே. (எ)

---

தத்தன தந்தன தத்தன தந்தன
தத்தன தந்தன தத்தன தந்தன
தத்தன தந்தன தத்தன தந்தன—தனதான.

துர்ச்சன சங்கம்வெ றுத்துனை நம்பிய
சற்சன சங்கமி லக்ஷண மிஞ்சிய
சொற்க பதங்களை நித்திய முந்தொழ மருளாதே

முற்சன னங்கள் கொடுத்திடு சஞ்சல
முற்றி யெழுந்த துயர்க்களை யுந்தவிர்
முத்தி வழங்க வனுக்ரக மென்றருள் புரிவாயோ

கற்சிலை யெந்தைசி வத்தவு டம்பினில்
பச்சிலை முந்துப றித்தணி பண்புறு
கற்புவி ளங்கிய பொற்புகி ரம்பிப கடலேகூ

விற்சிலை தங்கு நுதற்சிறு பெண்கண்மு
டித்த சுகந்த மணக்கு நெடுந்தெரு
விக்ரம சிங்கபு ரத்திலி ருந்தவெ னுலகாளே. (அ)

தனதானன தானன தானன
தனதானன தானன தானன
தனதானன தானன தானன—தனதான.

விரகாதியில் வீழ்பழி பாதக
னுபகார சரீரமெ டாதவன்
விபரீத விரோதவி பாஷித னமராதே

யிரவாம விராதப சாசனோர்
பரிபாக மிலாதநிர் மூடனு
னிருபாத சரோருக சேவைசெய் திரிவேனோ

பரஞானத்ரி கோணக்ரு பாகர
வபிராமம னோகர மோகித
பரிபூரண காரண கோமள மகமாயி

யுரகாபர ணேசபி ரானொடு
மலைபாசல பாரிச மாகிய
வுயர்மாமதி லாலய மேவிய வுலகாளே. (௯)

---

தனனத் தாத்த தனத்தன் தானன
தனனத் தாத்த தனத்தன தானன
தனனத் தாத்த தனத்தன தானன—தனதானா.

உடல்விட் டாத்ம மிறக்குமு னேகிறு
கிறெனச் சேத்ம மிழுக்குமு னேயென
துயிர்விட் டாக்கை கிடக்குமு னேசில சிலபேர்போ

யுறவுச் சோக்க ளழைக்குமு னேயவ
ரிழவுக் காட்சி கொடுக்குமு னேயனை
யொருமித் தாட்க ளெடுக்குமு னேபறை யொலியோடே

சுடலைக் காட்டி னடக்குமு னேயதி
லெருவைக் கூட்டி யடுக்குமு னேயொரு
துறையிற் றீர்த்த முகக்குமு னேதலை மயிரூடே

சுருளத் தீக்கொளி வைக்குமு னேமட
மடெனக் காட்டெரி பற்றுமு னேயொரு
துணைபற் றேற்குநி னற்புத தாமரை யருள்வாயே

கடலிற் காட்டிய புத்தமு தேவடி
வெழுதிக் காட்டிய சித்திர மேபர
கதியைக் காட்டிய தற்பர மேசுவை யுறுதேனே
கருணைக் கூத்தினர் முக்கள வீசரை
மருளப் பார்த்த விழிக்குயி லேவிரை
கமழப் பூத்தமெ யுற்றவி லோசன மகமாயி
படலைத் தேத்துள வற்கொர்ச கோதரி
பொதியக் கோட்டுறை முத்தமிழ் மாமுனி
பரவக் காக்ஷி கொடுத்தக்ரு பாகர வபிராமி
பனசக் கோட்டுர சக்கனி யேதெய்வ
மகளுக் கேற்றிடு பொற்சல மேமறை
பழகிப் போற்றிடு நித்யகல் யாணியெ னுலகாளே. (ய)

தந்ததந்த தனத்த தனந்தன
தந்ததந்த தனத்த தனந்தன
தந்ததந்த தனத்த தனந்தன—தனதான.

இந்த்ரியங்க ளிழுத்த விடந்தொறு
நின்றுநின்று ப்ரமித்து மயங்கிய
விந்தநெஞ்ச மெனக்கொர் பெரும்பகை யினிமேல்யான்
அந்தியந்த னிலைத்தை விளம்புவன்
வந்திருந்து ளதுக்க சுகங்களி
னங்குமிங்கு மலக்கழி யுந்தொழி லொழியாதோ
மந்த்ரமங்க ளவிக்ரக சுந்தரி
வன்புயங்க சகஸ்த்ர பணங்கள்சு
மந்திருந்த சகத்ரை யமுந்தொழு மகமாயி
சந்த்ரவிம்ப முகத்தொ ளிகண்டொரு
கும்பசம்ப வனித்தம் வணங்கவொர்
தண்பொருந்த நதிக்கரை நின்றவெ னுலகாளே. (யக)

தான தானத் தனத்த தனத்தன
தான தானத் தனத்த தனத்தன
தான தானத் தனத்த தனத்தன—தனதான.

வீர சூலப் படைக்கை தரித்திடு
சோல நீலப் பொருப்பின் மருப்புயா
மேதி யேறித் துரத்தி முடுக்கியெ னுடன்மீதே

யார வாரித் துறுக்கி முறுக்கிய
பாசம் வீசிப் பிடித்து மடித்தென
தாவி மோசப் படுத்து மவத்தையி — லுறலாமோ

வாரி சாதப் பிறைக்குள் வியப்புறு
கேச பாரச் சொருக்கவி ழுப்பதம்
வாடி யோடிச் சிவப்பவு வப்புடன் — வருவாயே

பார தூரத் தைமுற்று நினைத்தடி
யேனை யாளக் கருத்தி னிணைத்தொரு
பாவ நாசத் தலத்திலி ருக்குமெ — னுலகாளே. (கஉ)

---

தையாதன தானன தானன
தையாதன தானன தானன
தையாதன தானன தானன—தனதான.

நெல்வாலள வாகிலு மோர்பொருள்
செய்வாரிலை யேயென பாவமெ
னிர்வாசமு நீயறி வாய்சிறி — தருள்பாராய்

இல்வாழ்வைவி டாதலை வேன்வினை
பொல்லாதது வேறவ காசமு
மில்லாமலை யோதவி மாறுவன் — வழிகாணேன்

வல்வாயம தூதர டாவகை
சைவாகம வேதபு ராணமும்
வல்லோர்மன வாலைய நூபுர — மெனும்வாழ்வே

கல்வாயுறு தேரையு மோர்பொருள்
செய்யாதறம் யாவையு மேபுரி
கல்யாணம னோகர கோமள — வுலகாளே. (கந)

---

தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன—தனதான.

உறவை மாதரை மைந்தரை நண்பரை
மனையை வாழ்வைம கிழ்ந்துப்ர பஞ்சமி
துறுதி யாமென வம்பினி னம்பின — னறியாதே

பிருதி காலம் வரும்பொழு திங்கிவர்
வருவ ராருட னென்றுநி னைந்தில
னிதென பாதக மிந்தவ கம்ப்ரமை யொழியாதோ

சறுவ லோக பயங்கரி சங்கரி
சறுவ தேவ நிரந்தரி யந்தரி
சறுவ பூதது ரந்தரி சுந்தரி மகமாயி

மறைப ராவிய மந்த்ரசு மங்கள
சொருப ஸ்பாவமு ணர்ந்தவர் சிந்தையு
மலைய பூதர முங்குடி கொண்டசிவ னுலகாளே. (கச)

---

தானன தானன தனத்ததன தானதன
தானன தானன தனத்ததன தானதன
தானன தானன தனத்ததன தானதன—தனதான.

வாலாய மாயுனை வழுத்துகில னேடியம
தூதாளு மோலையு மழைக்கவரி லோசிறிது
யாகாணி நாழிகை தரிக்கவச மோபிசக விடுவாரோ

காலாற நீழலொரு சற்றுமிலை யாம்வழியி
லேகீழு மேலினுநெ ருப்பொரியு மாமடிமை
கால்பாவு மோவதுக டத்தியம லோகமிசை கொடுபோனு

னுலேழு கோடிநர கத்தெறிவ ரேசிறிது
தேவானு கூலமினி யெப்படிய மேயடிய
னுலேசு மாவநுப வித்துமுடி யாதுதிரு வருள்தாராய்

ஆலால போசனர கத்யமுனி பூசனைசெய்
தேகாக மாகவொரு செட்டிவினை தீரவருள்
வார்பாவ நர்சர்புணர் நித்யகலி யாணியெனு முலகாளே.

உலகம்மை சந்தவிருத்தம் முற்றிற்று.

---

உ

சிவமயம்.

## பாவநாசம் என்னும் சிங்கை

# உலகம்மை பிள்ளைத்தமிழ்.

### பாயிரம்.

#### விநாயகர் துதி.

தேர்கொண்ட மண்டலப் பருதியிற் செக்கச் சிவந்தமா ணிக்க
வெற்பிற், செறிகிளைப் பச்சறுகின் மரகதக் கொடிகள்படர் சென்
னியிற் பொங்குகங்கை; நீர்கொண்ட குண்டுபடு சுனையைக் கலக்
குபு நெடும்புனன் முகந்துமீள, நீளப் பணைக்கைக் குறுந்துளியி
லாழியி னிறைக்குமழ களிறுகாக்க; கூர்கொண்ட கண்டக முடுக்
குமொரு நூலிழை குழற்கா னறும்பொகுட்டுக், கோகனக மாக
னக சாலைப் பெருந்தவக் குலமுனிவ னுவடித்த; பேர்கொண்ட
மறைகட் கடங்காது நிறைதிருப் பேர்புனைந் துலகமாதின், பேரரு
டிளைப்பவளர் பிள்ளைமைப் பருவமுறை பேசுமென் கவிதழையவே.

#### சரசுவதி துதி.

வடுவகிர் பொருங்கணிள மடமகளிர் கைக்குலை மடற்பசுங்
காந்தள்வதியு, மரகத மணிச்சிறைப் பைங்கிள்ளை யொருகரு மணிக்
கட் டொடுந்தகையிலாக்; கொடுமுனைக் கவரலகின் முடைகொள்
புல வொழுகுவாய்க் கொள்ளையிரு ளள்ளிமெழுகிக், குயின்றனைய
வன்சிறைக் காசத்தி னிழிமுட் குடம்பையுள் வதிவதேய்க்கும்;
விடுசுடர் நிலாக்கண்டு மாயிர மிதழ்ப்புதிய வெள்ளிவெண் கதவு
சாத்தா, விரைநறுங் கடவுட் செழுந்தா மரைக்கோயின் மேயசொற்
பனுவலாட்டி; யுடுவுதிர் நெடுங்குடுமி மலையத் தடஞ்சார லொரு
சார் பதிட்கோயில்வா, மூலகுடைய நாயகி திருப்பெயர் வழுத்த
விங் கொருசிறிய னுவாழ்ந்ததே. (௨)

#### உலகம்மை துதி.

விண்ணுங் கட்புவியு மளவிடு மடற்கமுக வேலிகெழு மருத
வைப்பின், வெண்பா னறும்புனல் பிரித்துண்ணு மோரெகினம்

விடுதலை நகத்தி ஞெடும்யாப்; புண்ணும் பசும்புரவி யிரதங் கடாவுமென் றாழ்வெயில் படச்சூடுபெட், டுவர்பட்ட வட்டச் சிறுக்கூப வெம்புன்லை யுண்பது நிகர்க்குமமுதும்; பண்ணுங் குழைத்துச் சமைத்ததீங் கனிமொழிப் பனுவற் கிழத்திபாடற், பசுந்தே னனைக்குந் திருச்செவியி னுற்பழம் பரசமைய பேதவேதத்; தெண்ணுங் கடந்துபர நாதவெறு வெளிவீட் டிருந்தவுல கீன்றசிங்கைக், கிறைவியிப் பேதைமைச் சிற்றடிய னுவினி லியங்குபுன் சொற்கொள்வதே.

முறுக்கும் புரிப்பவள வார்சடைக் காட்டெந்தை முதண்ட கோடிமுட்ட, முட்டிப் பரந்தெவையு மிறதிப் படுத்துவதை முனியறிந் தூண்மிசைந்த; சுறுக்குங் கறைக்கால கூடப் பிழம்பவன் கண்டத்தி னளவுதொட்டுக், கனியும் பெருஞ்சுவைத் தெள்ளமுதமாக்கியுயிர் காக்குமெய்க் கருணையதனு; னிறுக்குந் தராசுநிறை மன்னுயி ரனைத்துமுழ் நெறியினுய்த் தருளுமமலை, நிமலையுல கம்மைவெண் கமலைதி னிசைத்தமிழ் நிறைக்குந் திருச்செவியினிற்; பொறுக்குந் தரத்ததென் றெனவழுவு மிளிதகைப் பொய்ந்நிலைச் சின்மதியினேன், புன்கவியு நன்கவிதை யாகப் படுத்திப் பொறுத்தினி தளிக்குமன்றே. (௪)

வாக்குமன முந்தொடா வெட்டா வதீதத்தின் வளர்கின்ற வொன்றுபலவா, மன்னுயிர்க் கன்னையெனு மறிஞரறி விற்றங்கி வாழுமுல கம்மவம்ம; நீக்குபு துடைத்துநீ காக்கப் படுந்தேவர் நின்னைப் புரக்கவென்ற, நிற்குமொரு பிள்ளைமைப் பருவந் தொடரம்பனுவ னினைவுறுமெ னினைவினின்றாய்; பூக்குடுமி வாரணத் துவசனயன் மான்முதற் புத்தேளி ருலகமடையப், பொறையுயிர்த் தளியா வகண்டபரி பூரணப் பொருளா யிருந்தநீயே; மேக்குயர் பெலஞ்சயில முதலிய விலங்கன்முதல் வேந்தன்மக ளாகியன்றோ, வேட்கையின் விழைந்தொழுகு வாட்கயற் கண்ணருளு வித்தகினு மழகிதன்றே. (௫)

பாயிர முற்றிற்று.

---

# நூல்.

## முதலாவது, காப்புப் பருவம்.

### திருமால்.

தேர்கொண்ட பருதிநிலாப் பூத்த தென்னச், செம்மேனி வெ
ண்டவள துளம் போர்ப்ப; வேர்கொண்ட மாணிக்க வெற்பின்
பாங்க, ரெய்துலக மாமயிலை யினிது காக்கத், தார்கொண்ட நிறத்
ததுழா யங்கேதன் சாய்க்குந், தண்சாரன் மரகதவே தண்டத் துச்
சிக்; கூர்கொண்ட விழிக்கோதைக் கோதை யீட்டுங், கொழுங்
கருணைச் சூற்கொண்ட கொண்ட றானே. (௧)

### முக்களாலிங்கர்.

எண்டிசை வெற்பர சன்றரு புத்ரியை மும்முனைச் சூற்படை,
எந்தை மனத்தின் விழைந்தன னிப்பொழு தென்னமுற் பாற்பர,
சின்றலை வைத்த பெரும்புவ னத்துயிர் நன்மணக் காட்சியை, யின்
றறி யத்தகு மென்றிமை யத்துறை நண்ணவிப் பார்த்தலை; பண்
டினு மிக்க துணர்ந்த தமைக்கவொர் சொல்முனிக் காற்றலை, பம்பி
யுவட்டெறி கங்கை யளித்தினி தன்னவற் றேக்கிய, பண்ணை
நினைத்திட பங்கட் விப்பொலி தன்னுருக் காட்டிய, பைந்தமிழ்
முக்கள வின்கண் முளைத்தெழு செம்மலைப் போற்றுது; முண்டக
நெட்டிதழ் மண்டப முற்றுறை பொன்மகட் கேற்றிட, முன்பட
லைத்துள வங்கடு வைத்தளி யுண்ணமட் டேற்றிய, மொய்ம்பக லத்
தை வழங்கு முகிற்கிருண் மின்னெனத் தோற்றிய, முன்கை வளைச்
சிறு தங்கையை முற்றெழு பண்மிடற் றேற்றிசை; வண்டு வழுக்
கி விழுந்து குழித்தெழு மென்மதுத் தேக்கெறி, வம்பலர் மைக்குழ
லம்பிகை யைச்சுடர் செம்மணிச் சூட்டர, வங்கை முறுக்கிடு கங்
கண னைப்பொரு வெம்முனைக் கோட்டெழின், மங்கையை விக்ரம
சிங்க புரத்துல கம்மையைக் காக்கவே. (௨)

### நான்முகன்.

மறைக்குங் கடைக்கால மோரா யிரங்குடுமி வடபூத ரத்தை
வழுவி, வாழிப் பெரும்புவன கோடியுடை படமடியு மன்னுயிர்க்
கண்டுகண் க; ணிறைக்கும் பழங்கருணை சூற்கொண்டு திரியுமன
நிலையினு லுலகமீன்ற, நின்மலனை மருவுமுல கம்மனையை யெம்மனை

யை நித்தம் புரந்தருளுமா; லுறைக்கும் கறைப்பகட் டாழியையம் படைமாய னொருவர்முத லிருவர்நால்வ ரேழ்முறை திறம்பாது பல தொழி லியற்றுமா றொருதொழி லியற்றநகையா; னறைக்கும் பொலன்று திணுக்குஞ் சுரும்பூக நகைமுகை நெகிழ்ந்து கிழிபு, நளினநெடு மடல்வயிற் றவதரித் தருளுமொரு நான்முக மறைக் குழவியையே. (௩)

விநாயகர்.

அந்திப் பிறைக்கொழுந் தமுதரு மணநாறு மழல்விழுது விட்ட சடைமீ, யத்திரைக் கட்புணரு நாரங் கிடந்தலைய வடியிட்ட லைந்து சிகரப்; பந்திப் பருப்பதச் சிலைப்பொளி திருவுருப் பானிலாப் புழுதி யாடிப், பற்றுநர் மனச்சேவ கத்துலவு மலையப் பசும்பிடி யை யினிது காக்க; தொந்திப் பெரும்பண்டி சரியவணி கிண் கிணி துணைச்சர ணலம்பவருவி, தூங்குங் கவுட்கடா மாறலைத் தெழவலஞ் சூழ்ந்திளைய வீரன்முந்து; முந்தித் தனித்தேகி யிம சிதப் பருவக முகட்டருள் பழுத்த தெய்வ, முக்கட் பழங்கனி புதுக்கனி தரக்கவரு மும்மதக் களியானையே. (௪)

சுப்பிரமணியர்.

முற்றுந் தவள மதிச்சுரபி முழுக்குங் கலைவெண் மடிசுரந்த, முதுவர னமுது கரந்துநிலா முகக்குங் கோர வாய்பெய்யுந்; தெற்றும் பனைச்சந் தனவளஞ்சூழ் சிகரப் பொதியத் தமிழ் மணக் குஞ், சிங்கபுரத்தி லுலகுடைய தெய்வச் சிறுமான் புறங் காக்க; வெற்றுங் குருதிப் புனல்குளித்த விலைவேற் காத்தி னுன்குதலை; யிறைவன் மகுடத் தஞ்சுதலை யெய்தப் புடைத்தோ ராறுதலை, சுற்றும் பவுரித் திருநடனச் சுருதிப் பொருட்கும் பொருளுரைத் துச், சுரரேத் தெடுப்ப வொருசேவற் றுவச முயர்த்த பெருமானே.

இந்திரன்.

நன்னுதன் மடவார் முகிழ்விர லணைந்த நாதயா ழிசையுமைக் கந்த, நாண்மலர்த் தெரியல் வரியளி தெரிந்த நயவளங் கனிந்த பாணிசையு; மின்னமு தயிர்க்கும் வள்ளையும் வளர்க்கு மிளங்கிளி மழலையும் பயிலு, மெழுநிலை மாட மறுகுசூழ் சிங்கை யிறைவி யைப் புரக்கவேத் துதுமால்; பின்னுதெண் டிரைவா ருதியிலவந் திறங்கிப் பெரும்புனன் முகந்துகொண்டெழுந்த, பெய்ம்முகிற்

படலமின்னொடுந் தவளப் பிறங்கன்மீ திவர்ந்தன வடித்த; மின்னகு குலிசக் கதிர்ப்படை சுமந்து வெறிபடு மும்மதத் தரச, வெண்ணிறத் தயிரா வதக்களிற் றிருந்து விண்ணுலா வருமிறைவனையே. (௬)

இலச்சுமி, கலைமகள்,

மூரிச் சிகரந் தெரியாது முன்னீர்க் கிடங்கு கலங்காது, மோட்டுக் கமடத் தகடுபடு முதுகு சலியா தமரரெனும்; பேரிற் சிறந்தோர் கைவருத்தம் பிறவா திமையப் பெருங்கிரிவாய்ப், பிறந்த கருணை யுலகுடைய பெண்ணா ரமுதைப் புரந்தளிக்க; பாரித் துயர்ந்த வரைநிறுவிப் பல்லா யிரவிண் ணவர்கூரப், பசுட்டுப் புரந்தீ யெழக்கடையும் பருவத் தொருமா தவர்க்கணியாய்; வாரிக் கடல்வெண் டிரைக்கமஞ்சூல் வயிற்றில் வரும்பெண் ணமுதுமுயிர், வகுத்துப் பழநான் மறைக்கடலின் வளர்நா வள்ளத் தமுதமுமே.

வயிரவர்.

பொருதிரை திரைத்துதறு மமுதவா ரிதியினொடு பொன்னின்மணி மண்டபத்துப், புனிதமறை யுபநிடத மயமாய் வகுத்தவெப் பொருளுக்கு முற்பத்தியா; யிருபுதி னிரட்டிபடு திரிசோண வட்டத்தி னிளவெயி லெறிப்ப நாப்ப, ணிருக்கும பராபரை யருட்பாவ நாசத்தெ மிறைவியை யுகந்த காக்க; சுருள்படு நெடுந்தோகை ஞமலியம் புரவிமிசை தோற்றிவெங் கனலிதூற்றுஞ், சுழல்கட் கடுங்கூளி யாடமுக் குடுமிவிடு சூலாயு தந்தரித்துக்; கருவிட முடைத்தொழுகு பகுவா யெயிற்றுரக கங்கண மணிந்து புவனங், காக்குங் கறைக்காளி மைக்கஞ்சு கந்தொட்ட காரிப் பழங்கடவுளே. (௮)

சப்தமாதர்கள்.

அங்கணில மடையவு மிடைந்தழு மருப்பினை ளந்திசொலு முகிரின்வகிர் கொந்தள முடித்தவ, ளன்றமரர் பசிகெட முகந்தமுதளித்தவ ளஞ்சனமு மதசலதி வெங்களி றகைப்பவள்; வெங்கனலி விழியலகை யங்கொடி யுயர்த்தவள் வெண்கிரண நிலவுதரு வன்சிறை யனத்தினண், மென்கலப மயின்முது கிருந்தமர் விளைப்பவள் வெந்திறலினெழுவ ரிவர் செஞ்சரண் வழுத்துதும்; வங்கமறி கடன்மடை திறந்ததென் மதப்புனல் வண்டுபடு கவுள்வழி

யலம்பியிரு பக்கமும், மண்பெருகி யலேயெறிய வன்றிணி மணிப்புய மைந்தர்மறு கிடைநடவு சிந்தூர வயக்கரி; திங்களூத வியருட திமிர்ந்தய லெடுத்தெறி செங்கலவை யளறுகண் முகந்துட விறைத் தொளிர், திண்கனக வரையென நிமிர்ந்துநிலே பெற்றுயர் சிங்கை நக ருலகுடைய மங்கையை யளிக்கவே. (௯)

பத்திரகாளி.

பொதியப் பொருப்பில் வளர்கா முகிலேப் புரட்டி யொளி கால்; புதுமுத்தரித்த வெறிமீன், உதரிச் சுருட்டு திரைபாய் பொரு நைத் துறைப்பெணுமையா ளுலகைப் புரக்க நினைவா; முதி ரப் பசித்த பசியா லுருமுக் கரிக்கு மதர்வாய் முனையைப் பரக்க விரிவாய்; அதிரக் கொடிற்றி னிருசார் களிறிட்டதுக்கு மொருகூ ரலகைக் கொடிப்பி ணையையே. (௰)

முப்பத்துமுக்கோடி தேவர்.

கன்னிமதிள் வேலித் தமிழ்ச்சிங்கை யுலகுடைய கன்னியைப் பாவ நாசக், கடவுண்மனே யாட்டியைப் பல்லுயிர்க் கன்னேயைக் கனகனுடல் கிண்ட வுகிர்வாட்; கொன்னுதி மடங்கலுக் கிளேய வளே வேதக் குலத்துக்கு மூத்த வளேமென், கொம்பனைய மேலோ க்கொ ருயிரனைய வருமைக்குமாரத்தி யைக்காக்கவோர்; பன்னி ருவர் திமிரநூ றுயிரங் கதிருதைய பாற்கரர்வெ ளோறுகைக்கும், பதினொருவ ரிருகோடி வெண்பிறை யலங்கற் பனிச்சடில கோடி யிறைவர்; முன்னிருவர் நான்மறை மருத்துவர் வசுக்கள்கடை முடியாத வெண்மராக, முப்பத்து முத்தேவ ரெத்தேவ ரும்பருக முதமுதுரைத்த மதியே. (௰௧)

காப்புப்பருவ முற்றும்.

## 2-வது செங்கீரைப்பருவம்.

---

ஒருதனிக் கருணையங் கடவுட் பிராட்டிபத யுகளம் பணிந்த கேண்மை, யுள்ளத்தி னவரவர்க்கேற்றபடி வேண்டுவன வுருவெடுத் தருளு மென்றென்; றருமறைகள் வாய்விட் டாற்றுவது கேள்வியி னறிந்தவர் வியந்து நோக்க, வசலப் பெருந்தலைவன் மனையாட்டி புதல்வியென் றருவிநீ ராட்டி முனைவே; விருவிழிக் கஞ்சன முறைத்தணி திருந்திநீ றெழுதியமு தூட்டி முதிரா, வின்னிளங் குதலைகேட் டம்மம்ம வின்னஞ்சொ லின்னஞ்சொ லென்ன மகிழத்; திருவருள் சுரந்துசிறு மகளின்விளை யாடுவாய் செங்கீரை யாடி யருளே, திக்களா வியநீழன் முக்களா முதல் வாழ்வு செங்கீரை யாடி யருளே. (க)

சத்திரத் தங்கட் பெரும்புவன நிழலிடுந் தலைவரும் புலமை மறையந், தணருமுத லேனையோ மனைவரும் புதல்வரொடு தத்தமக் குரிய வாழ்க்கை; முத்திணர்ப் பைந்தெரிய றுயல்வரு குயத்திரண் முரட்குவ டனுக்கு மிடைநூன், முரிகுழன் மடந்தைய ரொடும்பொருநை நீராடி முதல்வரொடு நிற்ப ராவிப்; பத்திரத் தண்பொழிற் சூழல்க டொறுங்குழீஇப் பாலடிசி லட்டு முட்டப், பசித்தவர்க் கீந்துண்டு புனைவன புனைந்துதொடர் பழவினை துடைத்து நீக்குஞ்; சித்திரைத் திங்கட் சிறப்புடைய செல்வமே செங்கீரை யாடி யருளே, திக்களா வியநீழன் முக்களா முதல்வாழ்வு செங்கீரை யாடி யருளே. (உ)

இன்றமி ழலங்கனீர் தெளிதரு பெருங்கொள்ளை யின்மாலை யருவி சொரியு, மியனெடுஞ் சுந்தர வரைச்சந்து கொண்டுதலை யிர்ம்புனற் றிரைகள் வீசிச்; கொன்றையம் படலப் பொலங்காடு பாசடைக் கூவிளக் காடு நிலவுக், குறுந்துளி செறித்தனைய தும்பையங் காடுநிலை குலையவெங் கறைமி டற்று; மின்றவ ளெயிற்றினர வம்புலி யுலைந்திட விரைந்துபல வடிபெ யர்த்து, வெண்ணிலா முத்தங் கொடிப்பவளம் வால்வளை வெறிக்கயல் படும்பத் தையிற்; சென்றிகரு ணாநிதி குடைந்தாடு மன்னமே செங்கீரை யாடி யருளே, திக்களா வியநீழன் முக்களா முதல்வாழ்வு செங்கீரை யாடி யருளே. (௩)

நாவடித் தெழுதாத மறையுந் தொழும்பர்புனை நாட்பள்ளி யந்தா மமு, நாரணன் முடித்துளவு மாரணன் முதற்புலவர் நகை முடித் தருவின் மலரும்; பாவடிக் களியானை யதளிட் டசைத் தருப் பாயம் பொதிந்த மேனிப், பண்ணவன் சடைமுடிப் பிறை வயிற் றமுதப் பசுந்துளியும் விளரி பாடிப்; பூவடித் திளநற விறைக்குஞ் சுரும்பிமிர் பொலங்கொன்றை யுநதும் பையும், பூளையும் பூளைப் பசுங்கா பெருக்குமென் பூங்கொடிப் பச்சை யது குஞ்; சேவடிப் பங்கய மணக்குந் திருத்தோகை செங்கீரை யாடி யருளே, திக்களா வியநீழன் முக்களா முதல்வாழ்வு செங்கீரை யாடி யருளே. (ச)

வன்பொது ளிலைப்பணைக் கோழரைக் குங்கும மலர்ச்சரண மாப முதலா, மன்றலம் பொழிலிற் றுவன்றிப் பெருந்தேவர் மாதவக் கிழவர் சூழப்; பொன்பொதி யவிழ்த்தேன் முறுக்குந் தெறித்திளம் புதுநறவு சாய்க்கு மிதழிப், புரிசடைக் கடவுளிற் குடமுனி யிருக் குமொரு பொருவிறென் கயிலை யெனவாய்; மின்பொதி விசும்பளக் குங்குடுமி பிடரிமதி வெண்கிழித் துக்க வமுத, வெண்கனி மெழுக் குற விளர்த்துவட கயிலையொடு வேற்றுமைய தன்றி யுயருந்; தென் பொதிய மால்வரைச் சாரல்குடி வாழுமயில் செங்கீரை யாடி யரு ளே, திக்களா வியநீழன் முக்களா முதல்வாழ்வு செங்கீரை யாடி யருளே. (ரு)

கொங்கவிழ் தடக்குமுத மூங்ககறித் திழிநறக் கொள்ளைய திருந்து குப்பக், குளப்படி நடைப்பக டுரப்பிமது வாய்க்களமர் குழுமிவிரி செக்கர் நெடுவான்; * பொங்கதிர் முகிற்பிடரின் மின் கொடி நிறைந்தெனப் பொற்கயி றெடுத்து வீக்கிப், புரைபடு நு கத்திட் டிறுக்கிமலம் வைத்ததிற் பூட்டுறுத் தூன்று கொழுவிற்; பங்கய மடங்கச் சவட்டியுழு பழனப் பழஞ்சேறு பட்டு நேமிப், படர்சிகர நடுவையிற் பருதிவிடு தேரிற் பசும்புரவி கால்வ ழுக்கச்; செங்கய விளம்பகடு வெடிதாவு சிங்கையுமை செங்கீரை யாடி யரு ளே, திக்களா வியநீழன் முக்களா முதல்வாழ்வு செங்கீரை யாடி யருளே. (சு)

வேறு.

வரியெறி சிரகரி ணறுபக நறவுகு டைந்தா டுந்தோறு, மரு மட னெறிபடு 1 வனருக மணியிலி ருந்தாய் வெண்பாவின்; விரி

* பொங்கதிர்-பொங்குகதிர். 1 வனருகம்-தாமரை.

திரை யிருகரை பொருதுடை கடலின்மு ழங்கா லங்காலு, மிட
லர வமளியி னவேணி லினிதுகி டந்தா யைந்தாக; வுரியனல் கன
ல்புனல் வெளிவளி புவியென வொன்றாய் நின்றா[2]யெண், ணுபய
மு மிருபது மெழுதொகை புணர்வுற வொன்றா கும்[3]கோணத்;
திரிபுரை திரிபுர மடுபகை யுறவினள் செங்கோ செங்கீரை, திரிபுவ
னமுமருள் புரியுல குடையவள் செங்கோ செங்கீரை. (எ)

வேறு.

பொங்குளைய வடிசுவலி னீலப் பரிகட் டுங்கதிரி னிரதமிட
றாத் தடவுத் திண்சினைக ளொடியவில வங்கோ லஞ்சாயப், புண்
படவின் முகடுதொடு சர்ய்கைப் பனசத் தண்டலைக ளழியவழி தே
றற் றிரள்பொற் செங்கனிய பொரியலரை நெடுஞ்சூ தம்போப்,
புன்சிதடி யொலிகெழுப ராரைக் குடசத் தின்பொழில கடுவையு
யர் சோதித் தருவர்க் கங்குலைய விடிகுமுறு மஞ்சா றாஞ்சாதிப்,
பொங்காடி பறியமுதிர் கூனற் கனிதெற் றுங்குலைகொள் கவிழ்தலை
ய வாழைக் குலமுற் றுந்தொலைய வளர்கறிப டர்ந்தே றுஞ்சாரற்,-
குங்கிலிய முறிபடவ சோகக் கிளர்கொத் தும்பணையும் விழநெடிய
பீலிச் சிறகர்ப் பைங்கண்மயி லினமகவி நின்றா டுஞ்சோலைக், குங்
குமமு மிடறுவிடு பாளைப் பருவப் பைங்கமுகு முதிரும்விளை யே
னற் பொதுள்விக் குங்கதிரு மிதணும்வெதி ரங்கா டுந்தாளிற்,
கொங்களையு மிளையமது பானப் பறவைத் தும்பியளி ஞிமிறுபடி
யாமற் றளைவிட் டங்கூண்மல ரலர்கணியி ருங்கோ டுஞ்சாரற், கொ
ம்பொரொடு குரவுழிசை சேரத் துணிபட் டொன்றுபல சிதைவுபட
மோதிப் புளினக் குன்றுசெறி யிருகரையி டந்தோ றஞ்சாடித்—;
தங்கநறு மடல்விரவு கோடற் படலைப் பங்கிமுது குடுமிவரை கா
வற் றலைமைக் குன்றவர்க ளுறைகுடில்பி டுங்கா வென்கூனித்,
தந்திமுச வியமிருக மாளக் கருவிக் கொன்றுநிமிர் வரிசிலைக டுணிக்
குலைவலைவக் கும்பகழி வயின்வயினெ றிந்தே மண்கிறித், தந்தநுதி
புதையவுழு பாழிக் கருமுட் பன்றிகளு முலைமுறுக வூறிக் குறு
மைக் கண்களமு துருகவய முந்தாய் வண்காவிற், றண்டழைகள்
விளையுமுணா வாகக் கறிகற் குங்குருளை வருடைகளு மாலக் குழு
றிப் பங்கமெயி றுழுகுமர வும்பால் வெண்பாதித்; திங்களுழை
முழையரியு மாடற் றறுகட் குன்றுபடு காடகட தாரைக் கலுழிக்
குஞ்சரமு மடுகபமு மொன்றோ டொன்றுலத், தெண்டிரைக ளொ

---

2 எண்உபயம்-பதினாறு. 3 கோணத்திரிபுரை-நாற்பத்துமுக்கோணம்.

மேறிய வாரிப் புனல்கொட் டுஞ்சுழியி னுழைச்சுழல வீசிப் பருமுத் துங்கிரண மதியுநிதி யும்போ துந்தூவித், தென்பொருநை யருவி சொரி யாணர்ப் பொதியத் தென்றல்வரை யருகுவட பாலிற் பொ லிவிற் சிந்தூர நுதல்வனிதை செங்கோ செங்கீரை, செந்தமிழும் வடகலையும் வேள்வித் தருமத் தந்தணர்சொன மறையுநிறை வீதிப் பழனச் சிங்கையுல குடையமயில் செங்கோ செங்கீரை. (அ)

வேறு.

சுட்டு பெரும்புவ னம்பல கோடியு மீன்றதூஉ பொய்மேனைக், கின்னுயிர் நன்மக வென்று பிறந்து மெனைத்துயிர் யாவையுநின்; றூட்டி வளர்ப்பது பொய்வள மென்முலை யுண்டு வளர்ந்துமெலா, வுலகும் வியாபக மானது பொய்யொரு தொட்டிலுள் ளாகியும் வெஞ்; சூட்டர வச்சய னத்தனை முதலியர் துஞ்சிய வூழியினுந், துஞ்சுகி லாதது பொய்யென மல்விழி துஞ்சியு மாயவிளை; யாட் டய ருஞ்சிறு பேட்டர சோதிம மாடுக செங்கீரை, யாரப் பொதி யச் சாரற் றலைமக ளாடுக செங்கீரை. (கூ)

சுருட்டி யிடுங்குழை வார்குழை யோலை துழாவு நெடுங்கணி ளங், தோகை யிமாசல மனைவி முலைப்பா றுய்த்தலர் சேதாம்பன், மருட்டிய வாயமு தூறலி னலவண் மடிபை நனைத்து மகாண், மகிழ்ந னழைத்தனும் வந்து பிதற்றுபு மழலைத் தேனினுளந்; தெரு ட்டிய வன்செவி யொக்க நனைத்துரை தெரியா மென்குதலைச், சில்லரி நூபுர பல்லவ மஞ்சலி செய்பவ னைத்தொலையா; வருட் டிரு நதியி னனைத்து வளர்த்தபெ ணுடுக செங்கீர, யாரப் பொதி யச் சாரற் றலைமக ளாடுக செங்கீரை. (க0)

சூடக முன்கையி லாட மணிக்குழை தோளில் விழுந்தாடச் சுட்டியு மாடமென் முச்சி பிலைச்சிய சூழிய நின்றூட; மாடக யா ழிசை யம்பவ ளக்கவின் வானில வாடநிரை, வகிர்படு மதிநுதல் குறுவெயர் வாடவொர் மன்றினு ளின்றூடும்; நாடக குஞ்சித பா தச ரோருக நம்பனு ளங்கவரா, நாகிள மேனி துவண்டா டப்பத நறுமல ரிதழியின்வா; யாடக மென்சிறு கிண்கிணி யாடவு மாடுக செங்கீரை, யாரப் பொதியச் சாரற் றலைமக ளாடுக செங்கீரை,

செங்கீரைப் பருவம் முற்றிற்று.

ஆகப் பருவம் 2-க்கு விருத்தம் 22.

## 3-வது தாலப்பருவம்.

கொங்கார் முகிழி னெகிழ்த்துதறிக் கொன்றைப் பயிரிற் படியுநறுங், கொழுந்தண் ணறவ நுகர்வாழ்க்கைக் குறுங்கட் பறவையினமிரியச்; கங்கா நதிப்பெண் ணொருத்திநெடுங் கல்லென் றிரைவாய்ப் படுந்திவலைக், கவண்கல் லெறிந்து விழிசெறிந்துங் காவற் றொழில்பூண் டினிதிருந்த; வெங்கா ளிமகச் சிறுபடல மிடையுந் தனிக்கங் தாய்ப்பவள, வெற்பின் றலையிற் கழிந்தமுடை விதிவெண் டலைகாட் டியவேணிச்; செங்கா டுழக்கி விளையாடுந் தெய்வப் பிடியே தாலேலோ, திருமுக் களவின் கனிகனிந்த தேனே தாலோ தாலேலோ. (க)

புழுங்குந் தருணத் தருணவெயிற் புனிதத் தனிக்கை நிமிர்த்தெடுத்துப், புவனப் பரப்பி லுறைத்திருந்த புதையங் கறைமுதிருட்கவளம்; விழுங்கு கதிர்ச்செம் முகக்களிறு விரவு மிரவு தனையறுத்து, வெளிச்சே வகம்போற் குலவிநிற்ப மேக படலம் பொதிந்துமுனே; மழுங்கும் பொதும்பர்த் தடங்கோட்டு வளையுந் தோட்டிக் குட்படுத்து, மலையப் பாகன் றங்களிறை மகளென் றுனைவந் தனைபுரியச்; செழுங்குன் றருவிக் கானீட்டுஞ் சிகரா லயத்தாய் தாலேலோ, திருமுக் களவின் கனிகனிந்த தேனே தாலோ தாலேலோ. (உ)

அருவிச் சிகரப் படாமுலைப்பச் சமைமென் றடந்தோட் குலைக்காந்த, ளங்கைக் கலைநற் றிருங்குநிலா வலங்கற் சுதிர்வான் மதிவதனப்: பருவப் புயல்வார் குழற்பொதியப் பாவை யுயிர்ப்பச் சந்தனப்பூம், பழுவச் சிலதி வளர்த்துவிடும் பணிக்குஞ் சிறுகாற் பசுங்குழவி; புருவச் சிலைபாய் வழங்குமுன்றிற் புறத்திலகத்திற் காவணத்திற், பொருவிற் படையேற் றிளங்குமரர் பொலந்திண் கொடிஞ்சித் தேருருட்டுந்; தெருவில் வளர்ந்து விளையாடுஞ் சிங்கைப் பதியாய் தாலேலோ, திருமுக் களவின் கனிகனிந்த தேனே தாலோ தாலேலோ. (ஙு)

மூத்து விளைந்து சரியைமுதன் மூன்றுங் கடந்து பரநாத, முடிவிற் றெளிந்த சின்மயமா மூலத் தலத்து வேரூன்றி; யேத்தி வழுத்தும் பழந்தொழும்ப ரிதைய கூபத் துவட்டெறிந்தூற், றிருந் து வழியு முழுவலன்பி னின்பப் புனித நீர்பாய; நீத்த மகர

சலதிநெடு நேமிப் பொருப்பு வேலியிட்ட, நிலத்து வேதத் தொடை வயின்வாய் நிலையா வகுத்த வறுசமையப்; பாத்தி நிறையப் படர்ந்தபசும் பயிரே தாலோ தாலோலோ, பாவ நாசத் தினி தமர்ந்த பாவாய் தாலோ தாலேலோ. (௫)

பொருது கரைகொன் றிரங்குதடம் புணரி யமுதக் கடனடு வட், புதுப்பூங் கடப்பஞ் சோலையின்வாய்ப் புரைதீர் கடவுண் மணிகுயிற்றுஞ்; சுருதி பயின்மண் டபத்திருந்த தோற்ற மென் முட் புறக்குடக்காய், தூக்கு முதுகு வடிப்பலவுஞ் சூதத் தருவும் பெயர்த்தெறிந்து, வருதண் டரங்கப் பொருநைநதி வற்று நெடுநீர்ப் புடைகிடக்கு, மலர்க்கா வகத்தி னுலைமுகத்தின் மாட்டி யுருக்கும் பொலனிமைத்த; பருதி மதிள்வான் சினகரத்திற் பயிலுங் குயிலே தாலேலோ, பாவ நாசத் தினிதமர்ந்த பாவாய் தாலோ தாலேலோ.

மட்டா ரளசத் திருத்தாயர் வாய்விட் டழுமுன் பசிக்கிரங்கி, மணிக்காற் றொட்டில் விட்டிறக்கி மடிமே லிருத்தி முத்தாட்டிக்; கட்டார் மணிக்கச் சிறுக்கவொட்டாக்கதிர்மா முலையின் முகத்தருகு, கருங்கண் டிறந்து பிதிரோடு கனியுஞ் சுவைப்பா லிலத்தொருபீர்; விட்டா டகக்கை வலம்புரியின் வெளவாய் விளிம்பு துளும்பவிட்டு, விம்பக் கனிவாய் நெறித்தூட்டி மெல்லென் றுருக்கிக் கிடத்தவணைப்; பட்டா டையின்மேற் கிடக்குமொரு பச்சைக் குழந்தாய் தாலேலோ, பாவ நாசத் தினிதமர்ந்த பாவாய் தாலோ தாலேலோ.

வேறு.

மடல்விடு கமலா சனவிதி விதிமுறை வீணே போகாமே, மரகத மழைமே னியனருள் புரிதொழின் மாறாய் மாறாமே; கடன் மறி திரைநீ ரிடைபல வுலகுயிர் பாழாய் மூழ்காமே, கவுண்மத வயிரா வதநட வரசுவி ணோர்வாழ் வோயாமே; படவடி வெழுதா வருமறை முதலிய மாறுன் மாளாமே, படர்சினை வடவா நிழல் வயின் மவுனம தாய்மே வாதேயோர்; தடவிம கிரிமே லரன் மணம் விழைபவள் தாலோ தாலேலோ, தமிழ்முனி தொழுமால் விடைவரு முலகுமை தாலோ தாலேலோ. (எ)

உருவெனி லுருவா யருவெனி லருவா யுயிரெனி லுயிரேயா, யுளவெனி லுளதா யிலதெனி லிலதா யுணர்வெனி லுணர்வேயா; யிருளெனி லிருளா யொளியெனி லொளியா யிசையெனி னிசையேயா, யியலெனி லியலா யயலெனி லயலா யெமரெனி லெம

ரேயா; யருளெனி லருளாய் மருளெனின் மருளா யறிவெனி னறிவேயா, யலையெனி னலையாய் மலையெனின் மலையா யணுவெனி னணுவாயோர்; சரிதையி னமையா வமைவின ளிமையா சலமகள் தாலேலோ, தமிழ்முனி தொழுமால் விடைவரு முலகேழ் தரு பரை தாலேலோ. (அ)

வேறு.

பருமநெ டுங்களி றுடலம் வகிர்ந்த பசும்பொ னசும்பூறும், பச்சுதி ரத்தடி முடைநா றுரிவைப் பருவப் புயன்மூடுங்; குருமழ வெயில்கள் விளிம்பு தளும்பிய கோடீ ரப்பழுவக், குலமா ணிக்க மலைப்படு போகங் குழைபயிர் மாதேவி; யுருமுறழ் வெடிகுர லுடைபடு கண்டை யொலிப்ப நடாவுகடா, வூர்தி யமன்பதி குறுகா துன்பத யுகளம் வணங்கினர்சீர்; தருமன பஞ்சரம் வளரு மிளங்கிளி தாலோ தாலேலோ, சங்கத் தமிழ்பயில் சிங்கைப் பதி யுமை தாலோ தாலேலோ. (௯)

திணிந்திடு பொற்குவ டாயிர பந்திச் செம்பொ னெடுங்கிரி வாய்க், தீப மிடுஞ்சிறு தட்டென முட்டி திசைப்புவ னந்தோறும்; பிணிந்திடு மைந்து புலத்தின் வழிப்படு பேதை மனத்தினையுன், பேழை முகைக்கம லச்சரண் வைத்தருள் பெற்றவர் புன்பசியுந்; துணிந்திடு நெட்டை முடப்பிறை கட்டு துவண்ட கொடிப்பவளத், துய்ய கதிர்ச்சடை யையனை வைகல் சுடுங்கா மப்பசியுந்; தணிந் திட மூரல் விருந்திடு மம்பிகை தாலோ தாலேலோ, சங்கத் தமிழ் பயில் சிங்கைப் பதியுமை தாலோ தாலேலோ. (௰)

கொன்னவில் வளையுடல் வள்வாய் நேமிக் கோன்முத லியர் பரவுங், கொள்ளைச் சுமையுமெய்ம் முனிவர ரொடுகுட முனியுந் தொழுதேத்தும்; பன்னரு முதுமறை யாவும் விராவிப் பழவடி யவர்நின்று, பழிச்சி முழக்குஞ் சதிமுறை பிறழாப் பாணி பதம் பெயராக்; கன்னிப ரமிழ்தின் மிழற்றும் பாடற் கம்பலை யுங்குளி ருங், கடவுட் பல்லிய வொலியுந் தனது களிப்பொடு மாறுசெயச்; சன்னிதி முன்வரு நன்னதி யுடையாய் தாலோ தாலேலோ, சங் கத் தமிழ்பயில் சிங்கைப் பதியுமை தாலோ தாலேலோ. (௧௧)

தாலப்பருவம் முற்றிற்று.

ஆசப் பருவம் 3-க்கு விருத்தம் 33.

## 4-வது சப்பாணிப்பருவம்.

கோட்டானை யெட்டுமுயர் கோட்டசலமெட்டும்வெங் கோட்டுளை யெயிற்று மோட்டுக், குலநாக மெட்டும் புறங்கொள்ளு நன்னுரகர் கொன்றலை சுமக்கு மான்மே; ரோட்டாத வக்கடவுண் மதிவிளக் கிடுபுவன வுறையுட் புகுந்து முறைநீ, யோங்கிப்ர பஞ்சந் தழைப்பப் பிழைப்பிலா தொன்றுடொன் றினிது கூட; விட்டா *வியத்திற் பிரித்திவை துடைத்திட் டியற்றிவினை யாடு வது போ, லெழுந்துபொற் பித்திகைப் பத்திமணி மாடத் திருக்தொலீ கறங்க நீங்காத்; தாட்டா மரைக்கரங் கூட்டிப் பிரித்தம்மை சப்பாணி கொட்டி யருளே, தமிழ்ப்பாடன் முனிதொழு மணக்கோல வடிவழகி சப்பாணி கொட்டி யருளே. (க)

மீன்றமர வெண்டிரை புரண்டகழ் கயக்கடலும் விரிதிசையொ ரெட்டு மேழு, மெட்டுபடு பைங்குலக் கிரியுமவை சூழ்சக்ர வேதண்ட மதுவு முயிரு; மூன்றளவை யுலகமொடு பல்லா யிரங்கோடி மூதண்ட வைப்பு நெடுவான், முப்பத்து முக்கோடி பண்ணவரு மைந்தொழின் முடித்துமுடி யாத வருமு; மூன்றமறை யும்பல வனைத்துமுன் னைவப்பென்ன வறிவிற்கு ணிக்கு நெறியோர்க், கத்தகைய வன்றிமற் றிலையெனக் கைபுடைத் தறிவுறத் தருள்வ தேய்ப்பச்; சான்றவர் மனக்கோயில் குடிபுக்கு வாழுவாய் சப்பாணி கொட்டி யருளே, தமிழ்ப்பாடன் முனிதொழு மணக்கோல வடிவழகி சப்பாணி கொட்டி யருளே. (உ)

இமைக்குங் கதிர்ச்சிகர மேருப் பொலன்றலையி லேற்றிக் கிடந்த தொல்லை, யெல்லைப் பெரும்புவன முழுதுங் குளிப்பாட்டு மெறிதிரைப் புணரி மூழ்கி; யமைக்குங் கடுங்கால வடவாமு கக்கொள்ளை யள்ளெரிப் படலை மாந்தி, யாழித் தடங்கடற் கொருபு தல்வி யிடைகிடந் தலமர வலைத்த பாரச்; சுமைக்குங் குமக்குன் றணைத்தபுயன் முதலினோர் துஞ்சிருட் கங்குல் கழியக், காத்தித் திருக்கருணை யவிரொளி பரப்பிநிறை துயின்முற் றெழுப்பி யெவையுஞ்; சமைக்கும் பசுங்காந்த ளங்கைமலர் சேப்பநீ சப்பாணி கொட்டி யருளே, தமிழ்ப் பாடன் முனிதொழு மணக்கோல வடிவழகி சப்பாணி கொட்டி யருளே. (ந)

---

*வியம்-ஏவல்.

அலைவைத் திரங்குஞ் சகத்திர முகக்கடவு ளாதிப் பழங்கண் ணைகவா, ணற்றமுத வெள்ளமொரு புன்னுனிப் பனிநீரி னளவை பட முடியில் வைத்தோன்; கொலைவைத்த வில்லிற் குனித்திட்ட நெட்டைக் குவட்டுவற் பாழி மேருக், குன்றினுக் கப்புறஞ் சென் றுடல் குலைந்தது ருறித்திப் புறத்தி னணுகிக்; கலைவைத்த திங்க ளங் தலைவனெதிர் மாலைக் கணங்குழை சமைத்து நெடுவிட், கலத் திட்ட திமிரக் கருஞ்சோ றெடுத்துண்டு கதிர்நிலவின் வாய்வி ளக் கித்; தலைவைத் துறங்குமலை யாசலத் தலைவியொரு சப்பாணி கொட்டி யருளே, தமிழ்ப்பாடன் முனிதொழு மணக்கோல வடி வழகி சப்பாணி கொட்டி யருளே. (௪)

சூலாட்டு கூந்தலம் பிடியொடுங் கடகளிறு தோய்ந்தாடு மலைய வருவித், தூநறும் புனலாட்டி யீர்ம்புனல் புலர்த்தியுஞ் சுண்ணந் திமிர்ந்து பிருசெஞ்; சேலாட்டு படைவிழிக் கஞ்சனந் தீட்டியுந் திங்கள்வகி ரன்று நிலவுத், தெண்ணீ ரணிந்தவா ணுதலென்று சுட் டியொரு செஞ்சுட்டி சாத்தி யிட்டு; நூலாட்டு நுழைமருங் கேற் றியமு தூட்டியு நொடித்துரை பயிற்று வித்து, நூன்மணித் தொட் டில்வைத் துபநிடத மயமான நுண்பெருங் கீர்த்தி சொல்லித்; தா லாட்டி யுந்தினம் வளர்க்குநாங் காணவொரு சப்பாணி கொட்டி யருளே, தமிழ்ப்பாடன் முனிதொழு மணக்கோல வடிவழகி சப் பாணி கொட்டி யருளே. (௫)

வேறு.

கன்று சினத்துளை வெண்ப லராநெளி கடக முறுக்கியிடுங், கைத்தலை முத்தலை வடிபடு சூலக் கடவுளு நீயுமணந்; தொன்ற வியங்கிய வைந்தொழில் வேறற வொன்று மியங்கிலபோ, லுபய வளைக்கை பொருந்த வியங்கிய வொளிபிரி யப்பிரிய; வென்றி மத ம்பிழி வேழக் கோடுகு வெண்முத் தப்புனறேய், விஞ்சையர் வஞ் சியர் கொங்கைக் கோடுகு வெண்முத் தும்பொதியக்; குன்றில் வரன்றி வரும்பொரு நைப்பிடி கொட்டுக் சப்பாணி, குலவரை யரசியன் மலைமக ளுலகும்மை கொட்டுக சப்பாணி. (௭)

நீலு மணிச்சிறை வண்டுமு செங்கழு நீரை மணந்தும்வளர், நீதி யறங்கள் வழாது மடுக்கியு நெட்டிதழ் விட்ட புழைக்; காலர விந்த மலர்த்தட நின்றமு கவுணியர் கோனுண்ணக், கைச்சிறு கிண்ணத் திளமுலை யமுது கறந்து கொடுத்துமிருட்; டால மடைத்த மிடற்றூர் சுடலையி லாடத் தாளமெடுத், தாட்டியு முன்பு

சிவந்தன விப்பொழு தப்படி யெம்மானுன், கோல வளைக்கை சிவந்து விடும்படி கொட்டுக சப்பாணி, குலவரை யரசியன் மலை மக ளுலகுமை கொட்டுக சப்பாணி. (எ)

எட்டுமு னிட்ட சகத்திர வண்ட மெனைத்தும் வலித்தாளு, மெக்கு வயிற்று முடப்பிறை வெண்ப விருட்டு நிறச்சூரன்; விட்ட வயப்படை பட்ட பறந்தலை வெற்றிட மறஞேடு, மெய்க்குரு திப்புனன் மொய்க்க வெகுண்டவன் விற்கே டுற்ருேட; முட்டியொர் கோக்கி னலைப்புகு மங்க மிரட்டை படக்கிழி, முற்கும ரற்கொரு வெற்றி புரிந்தம ரர்க்கரு ளச்சோரி: கொட்டு மயிற்படை யுய்த்த கரங்கொடு கொட்டுக சப்பாணி, கொட்டு புனற்பொரு னைத்துறை நின்றவள் கொட்டுக சப்பாணி. (அ)

வேறு.

கட்டுமங் கலநா ணரம்பையர் பெறத்தேவர் கதிபெறக் கடவுணீலக், கறைக்கண்ட னென்னுமொரு பெயர்பெற வமைக்குங் கடுக்கறை திரண்டதெனவு, மட்டுடைந் திதமூறு தேறலை முகந்தினிது வாய்மடுத் துண்ண வெண்ணி, மழலையா ழிசைவண்டு தண்டுணர்க் காந்தணறு மலர்முகையில் வீழ்ந்த தெனவு; முட்டுமெண் டிசைதுருவி.......................................முழுநிழற் பாசொளிப் பருமணி பதித்தெனவு முகைவயி றலம்பி கறவங்; கொட்டுபைங் கழுநீர் மணங்கைத் தளிர்கொண்டு கொட்டியருள் சப்பாணியே, கொம்மைமலை யெனவிம்மு பொழிமன்முலை யுலகம்மை கொட்டியருள் சப்பாணியே. (கூ)

இழைக்குந் தவத்தொருவன் மூவுலகும் வேரறு மிகற்கணைக ளொன்று குழைசென், றிரங்குங் களித்தடங் கயல்கட் குடைந்தது மிதழ்த்துகிர் விளிம்பு பூத்துத்; தழைக்குங் குறுந்தா ணிறைக்கட் கிடந்ததுந் தண்ணளி துளும்பு வதனத், தண்ணளி மதிக்கழகு தோற்றதுங் குதலைச் சதங்கைப் பதங்கள் வென்ற; மழைக்கும் பசுந்தளிர்ச் சூதமுஞ் சோகமு மலர்ந்தவும் வழங்கி யாழு, மாங்குயிற் கிளவியு மருட்டித் திருக்கொழுநன் மனமுங் குழைதத மொழியாற்; குழைக்குங் கரும்புங் கொடுத்தகைத் தளிர்கொண்டு கொட்டியருள் சப்பாணியே, கொம்மைமலை யெனவிம்மு பொழிமன்முலை யுலகம்மை கொட்டியருள் சப்பாணியே. (க0)

தத்தோடு கடவுலக முதலண்ட கோளகைத் தட்டுநிலை கோடியி யந்தத், தட்டினுட் கடவுளர் முதற்பல சராசரந் தருமுதல்வி நீயி ருக்க; மத்தோ டுடைந்தவெண் டயிரென வுடைந்தனது மாயை யின் மயங்கி யீண்டு, மாண்டுபடு தெய்வம் பழிச்சித் திரிந்திம்மை மறுமையும் பாழ்படுத்திப்; புத்தோ டழுந்திக் கிடக்குமவர் புகும் வழிப் புகுதாம லெம்மை மறைநூற், பொம்மல்படு செம்மைத் திருத்தாள் வணங்கப் புரிந்தெமது சுற்ற முற்றுங்; கொத்தோடு தொண்டுகொண் டிருகணருள் கொட்டுவாய் கொட்டியருள் சப்பா ணியே, கொம்மைமலை யெனவிம்மு பொம்மன்முலை யுலகம்மை கொட்டியருள் சப்பாணியே. (கக)

சப்பாணிப்பருவம் முற்றிற்று.

ஆகப்பருவம் 4-க்கு விருத்தம் 44.

---

## 5-வது முத்தப் பருவம்.

பொற்று துறைக்கு நறைக்கமலப் பொகுட்டில் விளையு முத்த மிரு, புருவச் சிலையார் களமுத்தம் புணரிக் கடல்வாய்ப் படுமுத் தம்; வற்று நெடுந்தண் டுறைப்பொருநை வளைக ளளிக்குமாமுத் தம், வகுக்கும் புவன கோடிகளு மற்றெவ் வுயிரும் பெற்றவுனக்; குற்று தரிக்குந் தாயரியா முனது தொழும்பு புரியுமவ, ருறைபுட் பொருள்வேட் டடைந்தாலவ் வொழியா விழுக்க நினக்கன்றே; முற்று மழலைச் சேதாம்பன் முத்தந் தருக முத்தமே, முத்தே வரையுந் தருமுலக முத்தே முத்தந் தருகவே. (க)

தெற்றுந் தரங்கக் கருங்கடலுஞ் செவ்விக் கமலத் தடமுமடற், சென்னிக் கமுகப் படப்பையுநீர் சிந்து முகிற்றண் படலமும் போய்ச்; சுற்றுந் திரிந்து தருவியந்தச் சுடர்வாண் முத்தும் பெற லரிதாற்; சொன்ன பொருளத் தனையும்விழித் துணையு மமுதக் கதிர்முகமும்; பற்றுந் திருமங் கலத்தணிநாண் பைம்பொற் கழுத்தங் குழலுமென்றிப், படியுன னிடத்தி லவயவமாய்ப் படர்ந்து சிறந்த பெருங்கருணை; முற்றுந் தருங்கண் பசுங்கரும்பே முத்தந் தருக முத்தமே, முத்தே வரையுந் தருமுலக முத்தே முத்தந் தருகவே. (உ)

நித்தன் குனிக்கும் பாண்டரங்க நிருத்த னொருத்தன் கருத் துருகி, நெக்குக் கலவி புலவிபின்வாய் நிரைத்தா ரிதழி பொன் கொழிக்கு; மத்தம் படருஞ் சடைக்காட்டு மதிக்கோட் டமுதத் திவலையென, மலர்ந்த சிறுபூந் தும்பையயன் மந்தா கினிப்பெண் மயிலொளிப்பச்; சித்தங் கறுத்து நீயுதைத்த திருத்தாள் வருடிப் பிழைபொறுப்பாய், தேனே யெனத்தண் செழுங்குமுதந் திறப்ப நிலவுக் கால்வீசு; முத்தம் பொதிந்த கனிப்பவள முத்தந் தருக முத்தமே, முத்தே வரையுந் தருமுலக முத்தே முத்தந் தருகவே.

அள்ளித் திமிரஞ் சுளித்தெறியு மலரி மணித்தேர் பதிந்து ருளு, மாழி யுழுத மேலைநிலத் தந்தப் பருவ வேளாளன்; புள்ளிக் குறுந்தா ரகையெருவெண் பொடியிட் டிமநீர் பாய்ச்சியிளம், புனிற்றுப் பிறைவான் முளைதெளிப்பப் புதுப்பூங் கலைவே ரூன்றி நிலா; வெள்ளிக்குருத்து விரித்தமுத மென்சூன் முதிர்ந்து பால் சோதி, விளைந்த கதிர்வெண் டலைசாய்க்கும் விரவும் புரிசை வரம் புடுத்த; முள்ளித் திருநாட் டணங்கரசே முத்தந்தருக முத்தமே, முத்தே வரையுந் தருமுலக முத்தே முத்தந் தருகவே. (௪)

பொழியுங் கருணைக் களிக்கயல்பைம் பொற்றோண் முகந்த குழையோலைப், புறம்போய்த் திரிய விருப்புளகப் பொருப்பி னடு வட் பொருத்திசைத்தேன்; பிழியுங் குழைந்த நரம்பறிந்து பிணித்திட் டிறக்கும் வீணையின்மேற், பிறைக்கூ ருகிர்மெல் விரல ளைந்து பெருநீர் மதுர மிக்குற்ற; வழியுங் குதலைப் பசுங்கிளி யோர் மடற்காந் தளில்வந் திருந்ததென, வளைக்கை யிருந்து மழலைசில வ்ழங்கு வதற்கு மறுவார்த்தை; மொழியும் பவளந் திறந்தொருகான் முத்தந் தருக முத்தமே, முத்தே வரையுந் தரு முலக முத்தே முத்தந் தருகவே. (௫)

வேறு

மிக்க தவத்தி னுழைந்து விருப்பொடு பெற்ற வெனக்கொரு கால், விட்டொளிர் பொற்பணி யைம்படை சுட்டி திருத்து மிவட் கொருகா; லொக்க விருத்தி வழங்குப சொற்கள் பயிற்று மவட் கொருகா, லொக்கலை வைத்தமி தம்பின ருத்தி வளர்க்கு மவட் கொருகான்; மைக்குவ ளைக்கண் வளர்ந்திடு தொட்டி லசைப்பவ ளுக்கொருகான், மற்றினி நித்தில வண்டல் வெயர்ப்ப விளைப்பவ ளுக்கொருகான்; முக்கள விற்குடி கொண்டவ ருக்குயிர் முத்த

மளித்தருளே, முத்தமிழ் விக்ரம சிங்க புரத்தினன் முத்த மளித்தருளே. (சு)

மைத்த மணிச்சிறை வண்டு சரோருக மாளிகை யும்புனல்வாய், வண்குமு தப்புது மாளிகை யும்போய் மன்றல் விருந்துண்ணத்; தத்த முயிர்ப்பெடை யோடுயிர் சேவற் றூழ்சிறை நேமியினங், தழுவியும் வழுவியு மருள்வட விருள்படு தண்டலை வண்டலைபூங்; கொத்தலர் வாவி யுழக்கியு மேதி குழக்கன் றுள்ளம்னைச், குறுகியும் நின்ற மலங்கசத் திரைதரு குருமணி வெயிலோடு; முத்நிலாவிரி பொருநைத் துறையவண் முத்த மளித்தருளே, முத்தமிழ் விக்ரம சிங்க புரத்தினன் முத்த மளித்தருளே. (எ)

சீத நதித்திரை யடிபட் டுளைபடு சினையுடை பட்டலறித், திரிவளை முத்த முடைபடு பவவு செழித்துவர் வளைமுத்தஞ்; சாதக நுகரப் புயன்மழை சிதறித் தகர முகக்கயல்பாய், தடவரை முகடியர் வரைமுக் தங்கனி தழுல்பட வரைமுத்த; மாதவி னித்தகை முத்த மிரண்டுமுன் னணிவா ணகைமுத்தி, னம்பவ ளக்கனி முத்தை நிகர்த்தில வைம்புலன் வழிசெல்லா; மூசறி ஞர்க்கொரு முத்தி யளிப்பவண் முத்த மளித்தருளே, முத்தமிழ் விக்ரம சிங்க புரத்தினன் முத்த மளித்தருளே. (அ)

வேறு.

பெண்முத்த மொன்றுள்து சேண்மதி மதித்தம்ம பெரிதுமுத்தாடல்வேண்டும், பிறைநுதலி யெனவேறு பொருண்மினைத் தனைகொன்மெய்ப் பேருவமை யங்கள்காட்டி, யொண்முத் தரும்புங் கனித்துகிர் திறந்தெமக் குரையா திருத்திரியா, மேர்துசொற் பொருள்சினைப் பெயர்வினை குறித்ததன் றொருதொழிற் பெயர்குறித்தேம்; விண்முத்த முச்சிப் பசங்கமுக முத்தமொடு விளரிவண் டுளறுமுளரி, வெண்ணிள முத்தமுந் தத்துந் திரைக்கடல் விளைந்தபருமுத்தமும்பைக்; கண்முத்த மும்பெற வெமக்கரிய முத்தமே கனிவாயின் முத்தமருளே, கலசமுனி தொழுசிங்கை யுலகுடைய மடமங்கை கனிவாயின் முத்தமருளே. (சு)

வெம்பிக் கொடுஞ்சம ருடற்றுமொன் னலர்நாட்டு வேண்டுவன கொள்ளையிட்டு, வேந்தற் களிக்குமொரு சேவகன் செயலெனவிலங்கற் குறிஞ்சிசாடித்; தும்பிப் பருப்பத முதற்பல வனைத்தனைத்

யுஞ் சூற்பேய் விழித்துணங்கச், சுடுகொடும் பாலைப் புலத்தெவையு முலலைத் தொகைப்பெரும் பொருளுமலர்வாய்ப்; பம்பிப் பொறிச் சிறைய வளியுளறு மருதப் படப்பைபடு வளனும்வாரிப் பணிலமுரல் வருணன் றிருக்கோயி லடையப் பரப்பியுர கேசன்மருடங்; கம்பிப்ப வருதிரைப் பொருநைபந் துறையிறைவி கனிவாயின் முத்தமருளே, கலசமுனி தொழுசிங்கை யுலகுடைய மடமங்கை கனிவாயின் முத்தமருளே. (க0)

உண்ணென்று கொங்கைக் குறுங்கண் டிறந்துபிதி ரோடிவரு பாலருத்தி, யொக்கலையில் வைத்துமனை முன்றிற் புறஞ்சென் றலாவித் திரிந்துமேனை; தண்ணென்ற தென்றற் குழக்கன்று மெல்லென்று தடவக் குழைந்தசீதத், தமனிய மடற்குயிற் பிள்ளையென றினியசெந் தாக்கிள்ளை யென்றெனருமைப்; பெண்ணென்று முப்பத் திரண்டறம் வளர்க்கவரு பெருமாட்டி யென்றுகடவுட், பேரமுத மென்றரு மருந்தென்று வாழ்வென்று பெறலருஞ் செல்வ மென்று; கண்ணென்று கண்ணின்மணி யென்றுசீ ராட்டுமயில் கனிவாயின் முத்தமருளே, கலசமுனி தொழுசிங்கை யுலகுடைய மடமங்கை கனிவாயின் முத்தமருளே. (கக)

முத்தப்பருவம் முற்றிற்று.

ஆகப்பருவம் 5-க்கு விருத்தம் 55.

---

## 6-வது வாரானைப்பருவம்.

பவுரி திரித்த நிருத்தனழல் பழுத்த வுடம்பு குழைத்திருந், பச்சை யுடற்செம் மாந்துசெழும் பதுமத் திருத்தாண் மண்டலித்துக்; குவியு முழந்தாண் மிசைவளைக்கை குனிப்பு நிமிர்த்து நீட்டிமலர்க், குவளைக் கருங்கண் முகிழ்த்தும்னிக் குமிழி னுனிக்கணேக்கியந்த; வவிர்பொற் கிரண மணிக்குமிழி னடங்குங் கவன வழியையுச்சி, யள்வுஞ் செலுத்தி நினைவிலசஞ் சலமாயிருந்து தியானிக்கு; மவுன மமையு மினியெமது வாழ்வே வருகவருகவே, மலைய முடையா ளுலகுடையாண் மறைநான் குடையாள் வருகவே.

வீழ்ந்து விழுந்து வெயிற்கதிர்பட் டெலிந்து இடந்த சருகேனு, மூன்று சரண யுகளசரோ ருகத்தி லருச்சித் தய்யாமற், பாழ்த்த

செனனத் தொடுந்திமிரப் பரவை யழுவத் தழுங்கவிடும், பாச
வெரியும் பவவெயிலும் பாழ்பட் டெரிப்பத் திரியுமனக்; காழ்த்த
வயிரச் சிலைதுழைக்கோர் கலவிப் பெருநா ணிறுக்கிநிறை,
கலங்கா வறிவின் கணைகொழுவிக் கனிவாய் நெகிழ்ந்தீ சனையனை
யார்; வாழ்த்த மனத்துக் கெட்டாத வாழ்வு தருவாய் வருகவே,
மலைய முடையா ளுலகுடையாண் மறைநான் குடையாள் வருகவே.

பொதிவாய் முளரித் தளைநெரியப் புளுங்குஞ் சுடரோன்
றனையொருநாட், புகல்பெற் றமையான் மதிக்களங்கம் போக்கக்
கரங்கொண் டழைப்புதென; நுதிவாய் புரட்டித் தீட்டியகூர்
நொள்வாண் மழுங்கக் கறைதோய்த்த, நுண்ணீர்க் கயிற்றின் குறிப்
படுத்தி நுடங்கா தறுத்துத் திருந்துதிருப்; பதிவா யுமிழ்ந்த படி
விளக்கும் பதும ராக வரிசேர்த்த, பருதி மதிட்செந் துகிற்கொடி
யாற் பகலைவிழுங்கு மருண்மாலை; மதிவாய் துடைக்குந் தமிழ்ச்
சிங்கை வளநாட் டரசி வருகவே, மலைய முடையா ளுலகுடை
யாண் மறைநான் குடையாள் வருகவே. (௩)

அழியா முதலே முதற்சமய மாறும் பொருந்தி யவரவருக்,
கருளுங் கருணைத் தெய்வதமா யமையு மமைவே யமையாத;
மொழியா ரணத்தின் முதுப்பொருளே முதிராப் பருவத் தாணி
முத்தே, முத்தே வருமுற் பவித்தவொரு மூலத் தலமே நிலவலை
யத்; தொழியா தியற்றுந் தவத்தருளத் தொன்றே யொன்று
ளப்புரிய, வுணர்வே யுணர்வு கடந்தபரத் தொடுங்கி யொடுங்கா
துயிர்த்தொகையூழ்; வழியா வியக்கி விளையாடு மாயைக் கடலே
வருகவே, மலைய முடையா ளுலகுடையாண் மறைநான் குடை
யாள் வருகவே. (௪)

எழுதுந் திலக நுதலின்முளைத் தெழும்வேர் வழிக்க வருக
சிற்றி, லிழைத்த சிறுசோ றொருக்காலின் கெமர்க்குந் தரநீ வருக
வுடற்; புழுதி துடைக்க வருகவிரைப் புதுநீராட்ட வருகபணி,
பூட்ட வருக வஞ்சனங்கண் புனைய வருக பசித்தழுத; வழுகை
தணிய வொக்கலைவைத் தமுத மருத்த வருகவெடுத், தயினி
சுழற்ற வருகதொட்டி லாட்டித் துயிற்ற வருகதமிழ்; வழுதி யுல
கந் தனிபுரக்க வருவாய் வருக வருகவே, மலைய முடையா ளுல
குடையாண் மறைநான் குடையாள் வருகவே. (௫)

வேறு.

கற்றைச் சுடர்க்கடவுண் மதிமுது குறிஞ்சவுயர் கடிமனை யியற்
று வதுபோற், கன்னிமா வினைமாக்கண் மணமுற் குறித்தெனக்
கடையுக முடிந்த காலைப்: பொற்றைத் திசைக்கிரிக ணேட்டு நே
மிப் புறச்சுவ ரெழுப்பி விரியும், புவனப் பெருங்கோடி வீடுக ள
மைக்கும் பொருட்டெம் பிராட்டி விழைவா; விற்றைப் பகற்புவி
யி லத்தகை நிறீஇவகுத் திட்டதுகொ லென்று மருள்பட், டிருக்கு
முதல் யாவரு மழுங்கத் தெருத்தலை யிருந்தினிது சிற்றில் கோல;
வொற்றைப் பிறைக்கண்ணி யண்ணல்பங் குறையுளென வுறையுநா
யகிவருகவே, யுரைதெரிசொன் முனிபரவு நறைவிடையில் வரு
கருணை யுலகநா யகிவருகவே. (சு)

இருக்கோ விடும்பொருண் மணக்கோல நெஞ்சகத் தேக்கற
வடங்க நோக்கி, யித்தலை யிருத்தியென வத்தலைபி னவனருளி னெ
ம்மைத் துறந்து நெடுநாண்; மருக்கோதை விரிகுழற் பன்னியொ
டு மின்னிய வளர்க்குந் துளக்கின் முனிமேவான், வைகின னெனக்
கண் டிருந்துமவ னெனவிழையும் வானவ ரொருங்கு வினைநோய்;
முருக்கோம வெங்கன லியற்றுந் தவத்தரொடு முதுபொல னடுக்க
ன்மேரு, முந்துதமிழ் வரைகாண வந்தரு கிருந்ததென முனிவர்
விண் ணவரின்வினையு; முருக்கோ புரந்திகழ் திருக்கோயி லரச
மட வோதிமப் பெடை வருகவே, யுரைதெரிசொன் முனிபரவு
நறைவிடையில் வருகருணை யுலகநா யகிவருகவே. (எ)

பாவிடு நிலாத்தெள்ளு துள்ளுவெள் ளருவிசெம் பருமணிக்
கொள்ளை தள்ளிப், பாயுமிய சயிலத் தரும்பிநின் கேள்வரெழு பண்
ணிசைப் பறவை யாறு; காவிடு தொறுந்தளை தெறித்தொழுகு
மிதழியம் கத்திகைத் தேறன் மோதிக், கட்டவிழும் வட்டச் சடா
பந்தி வெந்தழற் கானத் தலர்ந்து ஞான; நூவிடு நெறிப்பொறை
யொழுக்கந் திறம்பா நுணங்கிய வரம்பில் புலமை, நோன்மைபர்த
மானதப் புனல்வாவி யிற்பொலிய நூற்சுருதி யாகமாதி; யோவிடு
மலர்க்கிறை சிவப்பக் கறுத்தகய லுண்கணு யகிவருகவே, யுரை
தெரிசொன் முனிபரவு நறைவிடையில் வருகருணை யுலகநா யகி
வருகவே. (அ)

வேறு.

கோடி யிரண்டு மொன்றொன்று கூடா துடல நடுமுடங்கு, குழவித் தவள வக்கணிலாக் கொழும்பொற் சடிலந் திசையளப்பப்; பாடி யிரண்டு மணிக்குழையும் பாடற் சுருதி யிசைதூங்கப், பண்ணுஞ் சுருதி வீணையிசைப் பாண ரிருவர் குடியிருப்ப; வாடி யிரண்டு பதஞ்சிவந்த மலரின் விமலப் பெருஞ்சோதி, யாகங் குழையப் பொதிந்துகணை யரவம் புகுவ தெனச்சினவி; யோடி யிரண்டு குழைநுழைபு முபய விழியாள் வருகவே, யொன்றும் பலவு மாகி நிறை வுலகே வருக வருகவே. (௯)

சொரியுஞ் சுனைமுட் கனிதகர்ந்து சுரிகூ னுடம்பி னிடக்கயங்கித், தூணைமாக் கடுவ னலர்ப்பிணவு துனியுற் றகன்றோர் புடையொதுங்க; விரியுமெ குவட்டுத் தலைதூங்கு வெண்பா லருவிக் குறுந் திவலை, வீசுங் கூதிர்க் குண்ணடுங்கி மெல்லென் குழவி கைநெகிழப்; பிரியுங் கடுவன் புதுந்தணைத்துப் பெருங்காம் பரிற்பாய் தலுந்தொடர்ந்தப், பிணவுங் குதிப்பப் பணிக்கெழுந்து பிறங்குங் கனகப் பழஞ்சுவர்தேய்த்த; துரியும் பொதும்பர்த் தடம்பொருநை யொலிநீர்த் துறையாள் வருகவே, யொன்றும் பலவு மாகிநின்ற வுலகே வருக வருகவே. (௧0)

பொன்னிற் பொலிந்த மேனிவலம் புரிவாக் கியபால் புகட்டி மணிப், பொலந்தொட் டிலின்மேற் கிடந்தவிரு புடைநின் றூட்டுஞ் சேடியர்கள்; கன்னிப் பிடியோ வொருபிடிக்குங் காணு மருங்குற் கருங்குயிலோ, காணும் பொருளோ காண்பவர்தங் கண்ணோ வெங்கள் கண்மணியோ; தனனிற் புவன மீன்றெடுத்த தாயோ விமபூ தரத்திறைவன், தலைமா மகளோ வான்வாழ்க்கை தழையுந் திருவோ வென்றுன்னை; யுன்னிப் புகழ்ந்து தாலாட்ட வுழைக்கண் வளர்வாய் வருகவே, யொன்றும பலவு மாகிநின்ற வுலகே வருக வருகவே. (௧௧)

வாரானைப்பருவம் முற்றிற்று.

---

ஆகப்பருவம் 6-க்கு விருத்தம் 66.

## 7-வது அம்புலிப் பருவம்.

---

தளிசிந்து வெண்டிரைக் குரைகடற் பட்டவ தரித்துவரு
ஞான்று பொய்கைத், தடத்தெழு மறைக்குழவி கைம்மலரி னம்
மைதரு தமனிய மிழைத்த வெள்ளத்; துளிசிந்து தெள்ளமுத
வள்ளமென வொள்ளொளி துளும்பினை கிடத்த லானுஞ், சுற்
றுந் திசும்பரர் தரிப்பநீ புனையுஞ் சுடர்க்கலை கொடுத்த லானுங்;
களிசிந்தி யிரவலர்த முகமலர வீசுங் கலாநிதிய தென்னு மொரு
தான், கற்பித்த பேருலக மடையவிரு ளடையாது கான்றொளி
விரித்த லானு; மளிசிந்து கட்கடை செலுத்தினு ளதுவறிந் தம்
புலீ யாட வாவே, பங்கைமழு வண்ணல்புணர் சிங்கையுல கன்னை
யுட னம்புலீ யாட வாவே. (௧)

உள்ளிவெளி யிற்கிடந் தாசையிருள் வேறுத் தொழுகொளி
நிலாப்பரப்பி, யுயர்வுபட முயல்படுங் கலைபல விரித்துநீ ருடைய
குவ லயமலர்த்தி; யெள்ளரிய மேனெறி பயின்றுதண் ணளிசுரந்
தின்பம் பயந்து தெளிவா, யிம்மதிய மெய்த்தொண்டர் தம்மதிய
மொத்திவ ணிருந்ததென் றுனைவிழைந்தாண்; மள்ளருழு கொழு
நுதி படுந்தோறு முள்ளுறைய் வனசங் கிழிந்துசாய்க்கு, மகரந்த
சீகரம் வரம்பிடறி வருசோனை மாநதியின் மானவழியு; மள்ளனீ
ரயல்வேலி முள்ளிநா டுடையவளொ டம்புலீ யாடவாவே, யங்கை
மழு வண்ணல்புணர் சிங்கையுல கன்னையுட னம்புலீ யாடவாவே.

மீனவெறி வெள்ளத் தரங்கப் பெருங்கொள்ளை வெள்ளத்
தடம்பள்ளவாய், விரிநெடுங் கடலகடு கிழியப் பிளந்தொளி விளங்
குமிள ஞாயிறென் றாழ்; வானமர வெண்டிரைக் குண்டுநீ ருவ
ளக மலர்ந்திடு நறும்பொகுட்டு, வட்டவா யம்புயமி னமுதப்
பசுங்கதிரின் மறுமட லொடுக்குமின்ற; பானவி னிலாக்கற்றை
முற்றுமிரு ணுங்கிப் பரந்திரு விசும்புபொதியப், பாசடை மடற்
குமுத முகமலர நீவருதல் பார்த்தினிதெ னம்மைவாட்க; ஞான
மலர்க்கா சலர்ந்தவதி சயநோக்கி யம்புலீ யாடவாவே, யங்கைமழு
வண்ணல்புணர் சிங்கையுல கன்னையுட னம்புலீ யாடவாவே. (௩)

விரிபொறி நெடும்பணைக் கயிறிட் டிறுக்குமிள வெயில்விட்
டெரித்தசடில, விமலனுக் கிருவிழி யெனுந்தகையு மிரணிய விலங்

கல்வட மேருவலனுத்; திரிதொழிலு மம்பரப் பெருவெளி யடைக்கு முதுசெறியிருட் படலைவெட்டித், திறக்குந் திறத்திரு நிறத்தசுட ரெனவுஞ் சிறந்திரத பானுவொடுநீ; யுரியசெய லொருவனென் முறையுமிப் பெருமித மொழித்தியவ னுதையகதிர்ப், டொளி யிழந் தம்புகல் புகுந்துபடு புன்மையு முணர்ந்தவ னிருப்பதொ ருவி; யரிவையெம் பெருமாட்டி சரணடைந் ததுகளைந தம்புலீ யாடவாவே, யங்கைமழு வண்ணல்புணர் சிங்கையுல கன்னையுட னம்புலீ யாடவாவே. (௪)

சுழிபட்ட வெண்டிரைச் சலராசி மூழ்கித் துகிற்சுவை மறந்துவயிறு, சூற்கொண்டு தெள்ளமு தளித்துவட மேருவிற் சுரரைவலம் வந்துநுதல்வாய்க்; கிழிபட்ட வொற்றைத் தழற் பார்வை யெம்பிரான் கிளர்சடைப் பழுவவமிர்த, கீலால மேற்றனி யிருந்தனை யுனக்கென் கிடைத்ததவ ணிகழினுழியாப், பழிபட்ட வினையுந் துடைத்தெம்ம னோர்பெரும் பாவந் தொலைக்குமாதி, பாவகா சத்திருத் தலமகிமை யின்னம் பகுத்தறிந் தில்லைபோலு; மழிபட்ட நின்குறை யொழித்தருளு மிங்கிவளொ டம்புலீ யாட வாவே, யங்கைமழு வண்ணல்புணர் சிங்கையுல கன்னையுட னம்புலீ யாடவாவே. (௫)

மருளூறு சிந்தைக் களங்கந் துளங்குநிலை மம்மர்படு விரக மொருவா, மற்றையொரு செயலற்ற சஞ்சல மொடுந்தன்னை வக் கித் திருக்குமமைசித்; தெருளூறு மன்பர்தங் கட்புலத் தன்றி முதுதெய்வப் பழஞ்சுருதியுந், தெரிதர வெளிப்படா வொருதனி முகப்பரஞ் சிற்பரையெ னம்மை யிவள்கா; ணிருளூறு முள்ளக் களங்கமும் பிறநிலையு மிருபதிற் றேழுசாரத், திறைவனெனு மாசையுஞ் சஞ்சலமு முடையநிற் கெளிதின்வெளி வந்துவாட் கண்; ணருளூற வம்மென் றழைத்தனள் கிடைப்பதன் றம்புலீ யாடவாவே, யங்கைமழு வண்ணல்புணர் சிங்கையுல கன்னையுட னம்புலீ யாடவாவே. (௬)

தளவைப் பதித்தசெங் குமுதவித முமுதூற நடமுலைக் குவடுபடாத், தண்பொலன் மருமத் திரைந்தொழுக மெல்லென் றளிக்குதலை விசுமின்ப்; விளமைத் திருப்பருவ வுருவுகண் டறிவ தற்கெளிதிது வெளிற்றுமதிநீ, யென்பதா லறியகிற் றிலைபோலு

மம்மையிவ ளிடையிங் கலைக்குமேலாய்; குளவைப் பிணைக்கடங் தப்புறத் தாயிரங் குருதியங் தோட்டுமொட்டுக், குலமுளரி மேற் பரம் பொருளொடுங் கூடுமக் கோமளானந்தரூப; மளவைக் ககப் படா தெங்ஙனந் தெளிவதினி யம்புலீ யாடவாவே, யங்கைமழு வண்ணல்புணர் சிங்கையுல கன்னையுட னம்புலீ யாடவாவே. (௭)

ஊழிக் கடுங்கன லெடுத்துக் கவிழ்க்கும்விழி யுழுவையம் போத்தினுரிவை, யுடைதிரு மருங்கசைத் திரவாடு நாடகத் தொருதலைவ னட்டகேண்மை; வாழிப் பெருந்தகைச் செல்வக் குபேரனெழின் மாற்றியதை முன்னியன்றோன், வன்பெயர்ச் சார்பினு லுனைமுனியு மெனவருவதற்கஞ்ச லஞ்சலஞ்சல்; வீழிக் கனிப்பவள வாய்திறந் தண்ணலருண் மெய்ப்படிவ மென்னவிழி யு, மேன்மையு மளித்தன ளுனக்குமுன் குறைநீக்கி மேற்பதம் வழங்கியருள்வா; ளாழிப் பழம்புவன மடையப் படைத்தவளொ டம்புலீ யாடவாவே, யங்கைமழு வண்ணல்புணர் சிங்கையுல கன்னையுட னம்புலீ யாடவாவே. (௮)

உலைக்கும் படிற்றமய லுற்றுத் தகாதன வுஞற்றுமொரு வணிகனிடர்கட், டொழித்தவ னசைத்தகலை மலினந் துடைத்த விவ ளொருதிருச் சன்னிதியினீர்; நிலைக்கும் பெருந்திமிர சலதி வான் படவிடு நெடுஞ்சுட ரலங்கலயிர்த், நின்கலையின் மாசுநீ யிவண்வரிற் கழுவுவது நிலைமையலீ தீரியதன்றே; மலைக்குஞ் சிலைக் கொலைவெ மதகைவன சார்விடும் வடிக்கணை யுடைக்கழுதலேய், வைத்திடு மிருளுட லுடைத்துக் குதித்தொழுகு வண்டிரை நிறைந்தபொருநை; யலைக்குந் தடங்குடுமி மலையா சலத்தியுட னம்புலீ யாடவாவே, யங்கைமழு வண்ணல்புணர் சிங்கையுல கன்னையுட னம்புலீ யாடவாவே. (௯)

புள்ளிச் சிறைப்பாடன் மகரந்த வண்டுபடு பொன்னிதழ்க் கொன்றைபூக்த, புரிசடைக் காட்டில்வைத் தனனிறைவ னென்றுநீ போதா திருக்கின்மிகைகாண்; வெள்ளிப் பருப்பதத் தொரு ஞான்று விமலனொடு மேவா விருந்ததன்னை, விட்டுவலம் வந்தகண நாதனை முனிந்தயில் விழிக்கடை சிவந்துகாட்டி; யெள்ளிக் கதறக் குருதி யூனும் பறித்தந்த வெம்பிரா னம்பொன்மேனி, யிடமும் பறித்தனண்மு னப்படியொர் கோபம்வரி னெப்படி பிழைப்ப

தளிதே; னள்ளிக் கொளுங்குழவி யம்மென் றழைத்தவுட னம்புலீ
யாடவாவே, யங்கைமழு வண்ணல்புணர் சிங்கையுல கன்னையுட
னம்புலீ யாடவாவே. (௧௦)

துடைத்திருள் விழுங்குமுழு நிலவாய் விசும்புறிற் சுடர்மணி
யிமைக்குநெற்றிச், சூட்டரா மோட்டுட னிமிர்த்துப் பிடிக்கு
மொரு துண்டப் பிறைப்பிள்ளையாய்; விடைத்துவசன் வார்சடைக்
காட்டிடை யொளிக்கிலிவண் மென்சரண மறியுமுருவம், வேறுபட்
டிரவிவர விரவினு லவ்விரவி வெண்ணகை கழன்றுவீழ; வுடைத்
துணையு மாய்வுற மிதித்துத் துவைத்தவிவ ளொருவிசைய மைந்த
னிருதா, ளுண்டு நீயெப்படிவ மாயெவ் விடத்துறைதி யோடரிக்
கண்களருள்விட்: டடைத்துமைக் கடைமடை திறந்தொழுகு மம்
பிகையொ டம்புலீ யாடவாவே, யங்கைமழு வண்ணல்புணர் சிங்
கையுல கன்னையுட னம்புலீ யாடவாவே. (௧௧)

அம்புலிப் பருவம் முற்றிற்று.

ஆகப் பருவம் 7-க்கு விருத்தம் 77.

## 8-வது அம்மானைப் பருவம்.

கள்ளூறு பனிமடற் செழுமுளரி மாளிகைக் கன்னிகை
விசைத்தெறிந்த, கதிரின்முத் தம்மனை திறம்பிமண் புகவிழக் கண்டு
நகை கொட்டியண்டத்; தெள்ளூறு மிழுதிற் கவர்ந்துறையு
நீயெறியு மினமணிய மனையின்முத்திட், டிளைத்தவம் மனையுயர
மாணிக்க வம்மனை நளிரியொழுகி நின்றுவெண்டான்; முள்ளூறு
நச்சரவ சயனனுந் திசைமுகனு மோட்டுவெண் மன்றியெகின, மூ
துரு வெடுத்தன்று துருவவொரு நின்மகிணன் மூட்டழலி னிற்
றல்காட்ட; வள்ளூறு மன்பினர்க் குள்ளூறு மினபமே யம்மானை
யாடியருளே, யாரப் பொருப்பினுயர் சாரற் புறத்துமயி லம்மானை
யாடியருளே. (௧)

வண்டினிய வேழிசைக் கல்விபயில் கள்ளொழுகு மறைமகளி
ரிருவர்செங்கேழ், மாணிக்க வம்மனையு நீலவம் மனைகளும் வகுத்
தாட நீயெறிந்த; தண்டரள வம்மனைக ளிற்சிலநி னதரவொளி
தாவிச் சிவந்துவாட்கட், டாரையொளி வீசிக் கறுத்துவர வம்மக

ளிர் தங்களம் மனையுமேயந்திக்; கொண்டனை யெறிந்தனை யெனத் தனி மருண்டுகை குலைந்துமனம் வெஃகவந்தக், கோலவம் மனை யுந் திறம்பாது பற்றிமென் குறுநகை முகிழ்த்துவீசி; யண்டமு மகண்டமு நிறைந்துவிளை யாடுவா யம்மானை யாடியருளே, யாரப் பொருப்பினுயர் சாரற் புறத்துமயி லம்மானை யாடியருளே. (௨)

விம்மா மணிக்கச் சிறக்குமிள முகைதெரிய வெள்ளிடை மருங்குலசைய, வேர்வைக் குறுந்துளி துளிப்பவிழி புடைபெயர வெள்வளை யுடைத்தகாந்தட்; கைம்மா மலர்த்தலையி னம்மனைநி னெதிராடு கன்னியரின் முன்னர்யாணர்ச், கதிர்மணி யிமைக்கு மென் புளினவெளி தோன்றநீர் காலூன்றும் வல்லிதுயலச், செம்மா ணொளித்தபன் னுதவங் குளிரவிரி சீகரக் கொள்ளை துள்ளச், செங்கயல்கள் புரளப் பொலிந்தெறி திரைக்கையிற் றெண்ணிலா முத்தம்வாரி; யம்மானை யாடுதண் பொருநையந் துறையிறைவி யம்மானை யாடியருளே, யாரப் பொருப்பினுயர் சாரற் புறத்துமயி லம்மானை யாடியருளே. (௩)

பாரா யணக்கடவு ளுன்மறையி னுச்சிப் பழம்பொருளின் மவுணன்முன்னாட், பாழியெண் டிசைமுக மிருட்டுவிட மொரு கைப் படுத்ததென நின்கைநின்று; மோரா யிரங்கோடி கருநீல வம்மனைக ளும்பர்சென் றள்வியிம்ப, ருலகமுந் திடராழி மால் வரைக் கப்புறமு மூழியிருள் விழுதுவிட்டுப்; போராது குழுமிப் பரந்தொழுகி நிற்பவப் பிறழொளிய மனைகள்யாவும், பெய்வளை யடுக்குமக் கைம்மல ரமைத்துவெம் பிறவித் துவக்குநீக்கி; யாரா தனைப்பழந் தொண்டர்க் கிரங்குவா யம்மானை யாடியருளே, யாரப் பொருப்பினுயர் சாரற் புறத்துமயி லம்மானை யாடியருளே. (௪)

முகிழ்தனச் சிலதிய ரொடுஞ்சென்று பானிலா முற்றத் திருந்துநின்று, முளரிக் கரத்தொன்றி லம்மனைக ளொருகோடி முறைமுறை யெறிந்துமேற்றுந்; தொகுவளை யிணைக்கையினு மத்தொழில் புரிந்துமத் துணைவளைக் கைகண்மாறிச், சூதமென் றளிர்மேனி முற்பட வெறிந்துபின் சுற்றிப் பிடித்துமுகிர்வா; ணகு மணி யினத்தலை பொறுத்துமத் தொழிலின்வழி நாட்டங்களோட்டி விட்டு, நளினா னனத்திளங் குறுவெயர் பொடிப்பவிரை நறுமலர்க் கூந்தலசரிய்; வகிலமு மீனத்துபிரு மெய்ப்பொருளு மானபரை

யம்மானை யாடியருளே, யாரப் பொருப்பினுயர் சாரற் புறத்துமயி லம்மானை யாடியருளே. (ரு)

வேறு.

தருண நிலாமுழு நித்தில வம்மனை தழன்மணி யம்மனை கைத்; தாமரை நின்று மெழுந்தும் விசும்பிற் றடவி யிறங்குவகண்; டிருண்டு ஞாலம் விழுங்கா தொளிசெய வித்தகை மதியென்றா, புலகொளி யமையா திவைபழை யனவென் றெண்ணி யிருந்தாய் மேல்; வருணம் விளங்கிரு விரிசுட ரம்மை வகுத்தனள் விடவின் போய், வாளர வஞ்சி வகுத்தப யம்புக வருவகொ லென்றுபுகன் றருநெறி வேதமு மம்ம ருழ்ன்றிட வம்மனை யாடுகவே, யழலயில் வெம்முனை விழியுல கம்மனை யம்மனை யாடுகவே. (சு)

ஓடு நெடுஞ்சுட ருலைமுக வனலிட் டோட வுருக்கியபொன், னொழுகு பசுங்களி கொண்டு குழைத்திழை பிடையின லுந்தியின் வாய்த்; தோடு நெளிந்தலர் தாமரை தந்த தொகைப்படு பேரண் டங், துகள்பட வுயிர்க ளலந்தலை பட்வடி சுவலுழை விடுபரியேழ்; பாடு துலக்கிய தேரரி யொளிபாழ் படவிட வரவாசின், படமுடி பொறைகெட வடியொடு கிண்டெழு பருவரை யம்மனைவைச்; தாடு மலர்க்கைபி லம்மனை பன்மணி யம்மனை யாடுகவே, யுழலயில் வெம்முனை விழியுல கம்மனை யாடுக வம்மனையே. (எ)

மும்மத வேழ நடுங்கப் புடைபடு முழையிற் றுயிலரிமா, முண்டவெண் கோடு பிடுங்கிச் சிதறிய முத்த நிலாமுன்றின்; மம்மர்செய் வாளி நெடுங்கண் மணிக்குழை மட்டு நெருங்கவிராய், வரையர மகளி ரிருந்தெதி ராடுசெ மணியம் மனையாவுந்; தம்மக வோடணை பிணவு திரட்டிய தழலென் றிரிபுநறுந், தண்கனி யென்ற முகக்கலை யெற்றத் தன்மய தன்மையினே; ரம்மனை யாடு தமிழ்ப்பொதி யத்தின ளம்மனை யாடுகவே, யுழலயில் வெம்முனை விழியுல கம்மனை யாடுக வம்மனையே. (அ)

வேறு.

அலையர் தொருமித் தைம்புலனு மடக்கி யடங்கா மும்மலமே, ரறத்துக் கொழுந்து படுந்தழலு மடுக்கநு குடுமித் தலைகவிழ; நிலையா வருவித் திரைப்புனலு நிலைபெற் றொருநதாண் மடித்தொ ருகா, ணிழவிச் சுருங்க விழிபுதைத்து நிறைபும் பரம வணுந்த

வத்துத்; தொலையா வுலவை யுந்திநின்றுந் தொடர்ந்தும் பிரமரந் திரவாய், தூரக்க வெடிக்குங் கனற்சிகை போய்த் துறக்கம் புகத்தா பதர்தவஞ்செய்; மலையா சலத்துக் கொருதலைவி மணியம் மானை யாடுகவே, வற்றாக் கருணை யுலகுடையாண் மணியம் மானை யாடுக வே. (கூ)

வெள்ளைப் பிறைக்கோட் டசலவுரி விழுப்புண் கவச மெடுத் தணிந்த, விமல னுருவிற் கழைகுழைக்கும் வில்வேள் கணையாய் வாரந்திரீர்; கொள்ளைப் பெருக்கு நனைப்பவிரு கோட்டாற் குழ வித் திங்களுழுங், கொடிச்செஞ் சடைக்காட் டிதழியின்வீழ் குறுங்கட் சுரும்பாய் மலர்க்கரமேற்; பிள்ளைப் பிணையாய் மிடற்றி விருள் பிழிபுக்கடுவா யுளத்கடத்திற், பெயராக் கயலாய் மயல் விளையப் பிறழுங் கருங்கண் ணிருமருங்கும்; வள்ளைக் குவவுத் தோடடர்க்கு மணியம் மானை யாடுகவே, வற்றாக் கருணை யுலகு டையாண் மணியம் மானை யாடுகவே. (க0)

துளங்கா மதுகை வயற்களமர் துணைவாண் மருப்புக் கரும்பகடு, தூரத்தி யுழும்வாட் கொழுமுனையிற் சுரிசங் கிடரிக் கருவுயிர்ப்ப; விளங்கா நிற்கு மணித்தரளம் விரைமென் பொகுட்டுப் பன்முளரி, விசிக்கும் பொதிவா யுடைத்திழியும் வெள்ளக் கலுழி நறுந்தெ ளியிற்; குளங்கான் மதகு திறந்துவரு கொள்ளைப் புனலிற் பெருக வதிற், குளிர்வான் செக்க ருடுத்திரளாற் குலவுந் துழனி நெடுங் கழனி; வளங்கூர் சிங்கை நகர்க்கரசி மணியம் மானை யாடுகவே, வற்றாக் கருணை யுலகுடையாண் மணியம் மானை யாடுகவே. (கக)

அம்மானைப் பருவம் முற்றிற்று.

ஆகப் பருவம் 8-க்கு விருத்தம் 88.

---

## 9-வது நீராடற்பருவம்.

ஆதிபரை நீமுதற் பொருளினுரு விற்கசிந் தருள்பெருகி யொ ருவடிவமா, யளவைக் கடங்காது பலபேத சத்தியா யளவளா யெங் குமாகி; மாதிர நெடும்புவன முழுதளித் தூழியினு மன்னிப் பொலிந்த தேய்ப்ப, மலயப் பெருநகிரிபி லூற்றிருந் தொழுகி யொரு வழிபட விசேட நதியாய்; மோதிபெண் பகுதிபடு கால்க

ளா யெவ்வயினு முறைமுறை புகுந்து விரவி, முவுலக மடையவும்
புரவுதந் தலைசுடன் முசுந்துபொழி கொண்டல் வறளும்; போதி
லும் வளங்கெழு தளங்கிமிழ் தடந்திரைப் பொருநைநீ ராடியருளே,
பூவைவா சக்குழலி பாவநா சத்தலைவி பொருநைநீ ராடியருளே.()

நெக்கிள முகைக்கலவை யெக்கரிட வம்மநீ நின்றுபுன லாட
வியவா, நிலவொளி புரண்டென முடங்கிப் புரண்டுவிழு நிரை,
நுரை நெருங்கனோக்கிச்; செக்கர்முழு மாணிக்க முச்சட் பொருப்
பின்வான் றிவழுடல் குழைந்தமழவுத், திங்கடவழ் சென்னியி
லிருந்துமா கங்கையொரு சிறிதும் பெறுதபேறு; மிக்கொழுகு
தெக்கண நெடுந்திசைக் கங்கையாய் மேவலிற் பெற்றனளெனு,
விளைபெருங் களிதூங்க வளிதூங்கு சந்தமலர் விடுசினை பொதிந்து
வானம்; புக்குலவு பொதியத் தடங்குடுமி யிடறிவரு பொருநைநீ
ராடியருளே, பூவைவா சக்குழலி பாவநா சத்தலைவி பொருநைநீ
ராடியருளே. (௨)

கோற்றொடி யுனக்குமென் புனலாடு பருவமுங் குறுகியதி
ஞான்றிலுன்னைக், குளிப்பாட்டி யெழின்மேனி கைபுனைந் தருள்
பெறல் குறித்ததுகொ லறிதரேற்றே; நாற்றிணையு நெய்தற் கடற்
சாடு புனலோடு நுரைநுரைத் துகிலுமகிலு, நானக் குழற்கவரு
மலர்முகைக் கிளநிலா நடுநித் திலக்குவாலுங்; காற்றணவு மிசை
விடப் பாந்தள்வேந் தாயிரங் காந்தளஞ் சுடிகைநெரியக், கல்லிப்
பிடுங்கிப் பிரித்தமணி யுந்திரைக் கையிற் கொணர்ந்துநின்னைப்;
போற்றுமெய்ச் சேடியு ரெனப்பரவு தண்டுறைப் பொருநைநீ
ராடியருளே, பூவைவா சக்குழலி பாவநா சத்தலைவி பொருநைநீ
ராடியருளே. (௩)

ஏந்திழை முகக்கொங்கை கங்கையெனு மாற்றவ ளெனக்க
ருதி யாடமுனியே, லீர்ங்கதிர் மதிக்குழவி தவழ்பொதிய வுச்சியி
னிழிந்துபடு சீகரத்தாற்; பாய்ந்திரு விசும்பிற் பெருக்கெடுத்
தகன்மணிப் பாலறையறை போற்கிழித்துப், பாதல வரைப்பிற்
படர்ந்துகடன் ஞாலப் பரப்படைய விரவியோடிக்; காந்தெரி
நிறத்தமா ணிக்கமுத் தினமணிகள் கமழகிற் பருமுருடுகள், கந்
தித்த சந்தனத் திரள்களொடு சங்கினங் கரையிரு மருங்கு தள்ளிப்;
போந்தலை திரட்டியெறி திரிபதகை யென்னவரு பொருநைநீ ராடி

யருளே, பூவைவா சக்குழலி பாவநா சத்தலைவி பொருநைநீ ராடி யருளே. (௪)

அங்கிணடு வெள்ளிப் பருப்பதத் தச்சிதிக முண்ணலங் கடவுள்சடலே, யடலைபடு வெண்மாலை நிலைபரவு செம்மாலை யாகத் தழற்குழைக்தோர்; பங்குதழை பச்சைபட விளைவிற் றிளைத்தாடு பச்சிளங் தோகைமழலைப், பவளவா யோதிமப் பார்ப்பெனத் தவழுமென் பனிமதிக் குழவியோடுஞ்; சிங்கமழ வென்றுவெண் மருப்புக் குறுத்தவிடு செறுகளிற் றிளையகன்றுங்; தென்றற் குழக் கன்றும் வன்றிறற் குன்றவர் சிறுநுங்விளை யாடுசாரற்; பொங்கர் செறி பொசியப் பொருப்பிறைவி தண்டுறைப் பொருநைநீ ராடி யருளே, பூவைவா சக்குழலி பாவநா சத்தலைவி பொருநைநீ ராடி யருளே. (௫)

சொரியுங் குறுந்துளி நறுப்படலை யளகச் சொருக்கவிழ்ந் தெங்கும்விரியத், துதைமலர்ச் சைவலக் கிளையென றிரிந்துமச் சுரி குழற் காடுதடவித்; திரியுங் கொழுங்கடைக் கண்களைத் தம்பி னங் திரிவதென் றெண்ணிவந்து, தெள்விழி யிரங்குகரு வரிமிடற் றறுபதச் சிறையளி மயங்கியார்ப்ப; நெரியுந் தரங்கக் காத்தோ டலைப்புண்ட நீள்வதன மதியமென்று, நேமியம் புட்பெடை தணக் தமுலை கண்டுகிளை நிற்பதென மீண்டுமருள்ப்; புரியும் பெருங்கருணை யுருவப் பசுந்தோகை பொருநைநீ ராடியருளே, பூவைவா சக் குழலி பாவநா சத்தலைவி பொருநைநீ ராடியருளே. (௬)

வேறு.

கனிசிங் தைபினெடு நின்பத நூபுர கமலத் தலர்வாரிக், கை கொ டருச்சனை செய்பவர் பற்பலர் கன்னிகை நின்முன்னர்ப்; பனி தரு புதுவிதழ் புதுமடல் பலபல பால்வளை நித்திலவெண், பங்தெ றி யுந்திரை பங்கையி னிட்டெதிர் பஃறுளி மென்புளகேற்; றினி து கசிந்து தெளிந்து விளங்கி யிருந்தவர் கைபரவ, வெவ்வெவர் வந்தன ரவ்வவர் வெவ்வினை யெவ்வப் படநூறிப்; புனித வொழுக் கங் தருமொரு பொருநைப் புதுநீ ராடுகவே, புவனைகல் யாண சவுந்தரி பொருநைப் புதுநீ ராடுகவே. (௭)

அதிக தவத்தரு வடைய விரிந்தினி தூர்வச் செறிபைங்கூ, ழளவின் மனப்புனம் விளைவிப் பான்மல ரைங்கணை வேடனடுங்;

கதியக விரக நெருப்பவி தரமுக் கண்வரை குளிர்விக்கும், கன்னி மயிற்பெடை நின்னிரு நயனக் கருணைப் பழநதிபோன்; முதிய மரப்பொழின் முதலொ டெரிந்து முதைப்புனம் விளைவிப்பான், முதுகு குனிந்தடு கார்முக வேட்டுவர் மூட்டழ லவியநெடும்; பொ திமை யுடற்குளிர் வித்திடு பொருநைப் புதுநீ ராடுகவே, புவனை கல் யாண சவுந்தரி பொருநைப் புதுநீ ராடுகவே. (அ)

அன்னே துரியா தீதப் பொருளே யருளே தெருளேயே, ரறி வே யறிவா லறிவா ரறிவுக் களவா யளவாகாய்; மின்னே யிருளே நிலவே வெயிலே வெளியே வளியேபார், விசிவே கனலே புனலே யெனவாய் வேறாய் வேறாகா; யென்னே யென்னே நின்னுடை மாய மியாவ ருணர்ந்தவரே, விச்சா ஞானக் கிரியா சத்தி யெனும் பேர் புனைகின்ற; பொன்னே நின்னே ரில்லாய் பொருநைப் புதுநீ ராடுகவே, புவனைகல் யாண சவுந்தரி பொருநைப் புதுநீ ராடுகவே.

வேறு.

வழிந்து பசுந்தே னொழுகுமலர் மனையாட் டியர்நின் னெடுங் குடைய, வற்று நெடுநீ ரிளையநிலா வளைக்கை முகந்திட் டவர்வ விமை, யழிந்து படநீ யிறைப்பமெலிந் தாற்று ரவரும் புனலை முகந், தருமைத் திருமே னியிலிறைக்கி லம்ம மிகையென் றெல்கி நிற்பக்; குழிந்து கருங்க லறைகிழியக் கொழுங்கா மூகிற்சாந் தரைத்துருட்டுங், கொழுந்தண் டரங்கக் கரத்தினிலக் குறுங்கைப் புனலை யெற்றியுன்மேற்; பொழிந்து சிதறி முழுகாட்டும் பொரு நைப் புதுநீ ராடுகவே, பொருவில் கருணை யுலகுடையாள் பொரு நைப் புதுநீ ராடுகவே. (க0)

இரட்டைப் பணிக்கோட் டொற்றைமுற்று விளைய நிலவுப் பிறைமவுலி, யெங்கோன் விடுத்த வடாதுபுலத் தெறிநீர்க் கங்கை படிந்தெவருந்; திரட்டித் தருவெவ் வினையனைத்துஞ் சிதையத் துடைப்பா னடைந்ததனுத், திங்க டொறும்வந் தினிதாடுந் தெய் வத் தலைமை படைத்தனையுன்; பாட்டுக் கலவ னுடைந்தோடப் பசும்பொற் கணைக்காற் கிடைந்துவரால், பதுங்க விழிக்குக் கய லொதுங்கப் பருவாய் மகரந் தகரவலை; புரட்டிச் சுருட்டித் துறை நிறைக்கும் பொருநைப் புதுநீ ராடுகவே, பொருவில் கருணை யுல குடையாள் பொருநைப் புதுநீ ராடுகவே. (கக)

நீராடற் பருவம் முற்றிற்று.

ஆகப்பருவம் 9-க்கு விருத்தம் 99.

## 10-வது பொன்னூசற் பருவம்.

நிலைபட்ட வெண்ணிணத் தென்புக் கொழுங்கா னிறத்திப்
புறத்துமறைய, நெய்த்திடு முடைத்தசைத் தோலெழினி கட்டி
யளி நெஞ்சகப் பலகைகிழிட்; டலைபட்ட மும்மல மொருங்குபட
டமல்விட்ட மாகச் சமைத்துமூட்டி, யமையாத விருவினைப் பழு
வடந் தூக்கிவைத் தைவர்நின் றுட்டவிரிபா; சிலைபட்ட நெட்டி
தழுப் புண்டரிக வீட்டிருந் தியன்மறைத் தச்சனிச்சித், தியலு
மெத் தொழிலும் பெறத்தனி வகுத்துதவ வின்னுயிர்க ளென்ன
மன்னிப்; புலைபட்ட வுடலூச லாட்டுமட வன்னமே பொன்னூச
லாடியருளே, புவனைதிரி புரைமும்மை யவனிதரு முலகம்மை
பொன்னூச லாடியருளே. (௧)

வண்டல்படு மள்ளற் சருஞ்சேறு நாறுமலர் வாவியின் முளைத்
தெழாமன், மறிபுனல் வறப்பவறள் பாசடைப் படராமல் வார்புழை
யி னூலிழைந்த; கண்டக நெடுந்தாளி ன மலராமன் மதிவரவு கண்
டுமுகி ழாமலகல்வான், காற்றும் பனிக்குறுந் திவலையிற் புரிமுகங்
கருகிச் சமட்புறுமற்; பண்டவழி சைச்சுரும் பறுகான் மிதித்து
ழுப் பருமட லுடைந்திடாமற், பகலவற் கண்டன்று பரநாத வொ
ளியிலே பகலுயல ரடியருள்ளப்; புண்டரீக மண்டபத் தாசமட
வன்னமே பொன்னூச லாடியருளே, புவனைதிரி புரைமும்மை யவ
னிதரு முலகம்மை பொன்னூச லாடியருளே. (௨)

திண்ணிய கவட்டுலவை யுடல்குழைந் தீனுத் தேமா விளந்த
ளிர்களுஞ், சினைவிடப் பொதுளாத வாலியையு முயர்மடத் தெங்
கின்மட னெற்றிமுற்றுப்; பண்ணியல் சுரக்குங் குரும்பையும்
பாசடைப் படரா மடற்குமுதமும், பைந்தாளின் மலராத குவளை
யும் மொட்டகம் பல்காத கோகனமுந்; தண்ணிழல் பரப்புமென்
கொடிகிளைத் தலராத தளவுஞ் சுமந்தொ ரெண்டோட், டானுச்
சினைப்பொலந் தருவிற் படர்ந்ததி சயந்தா விரங்கு பொருளைப்;
புண்ணிய நதிக்கரையில் வளர்காம வல்லியே பொன்னூச லாடி
யருளே, புவனைதிரி புரைமும்மை யவனிதரு முலகம்மை பொன்
னூச லாடியருளே. (௩)

குருந்துப் பணித்திங்க ளங்குழவி வாணிலவு கோலிவிட் டெறி
யுமுத்திற், குயிற்றுமணி யூசற் புறத்திருந் தாடுவது கொடிமதி

ளிலங்கைநிருதன்; பெருந்துப் புடைப்புய மிரட்டித்த பத்துப் பிறங்கல்கொ டசைத்த நிலைநாட், பெயர்தந் தனுங்குமக் கயிலைப் பொருப்பினுறு பெற்றியை நிகர்க்குமென்ன; வருந்தத் தெவிட் டாப் பழங்கடவுளமிர் தமே யமிர்தந் திரட்டுசுவையே, யச்சுவையி னிச்சைதரு மானந்த வின்பமே யகின்முரு டுருட்டியெறிதண்; பொருந்தத் துறைப்பசுங் கன்னியா சன்னமே பொன்னூச லாடி யருளே, புவனை திரி புரைமும்மை யவனிதரு முலகம்மை பொன் னூச லாடியருளே. (௪)

பின்னுதிரை நீருண்ட கொண்டற் படாத்துறழை பிறை யனைய கூந்தல்செருகும், பிள்ளைவண் டாட்டயரும் வெள்ளிவெண் டோட்டுமென் பிச்சியந் தொடையுமடுபோர்ச்; கொன்னுதி யயிற் கணுழை யணிமணிக் குழையுமுடல் குழையுமதி நுதலுமுகமுங், குங்குமச் சேதக மெழுக்கெறி பெருந்தனக் குவடுமுத் தாபரணமு; மின்னிலகு முத்தந் தெறிக்கக் குனிக்கும்வரி விற்கரும் புஞ்சுரும் புண், வேரியைம் பாணமுந் தோன்றவென் சிந்தையர விந்தமுஞ் சிந்தாமணிப்; பொன்னெடுங் கோயிலு மிருந்துவிளை யாடுவாய் பொன்னூச லாடியருளே, புவனை திரி புரைமும்மை யவனிதரு முலகம்மை பொன்னூச லாடியருளே. (௫)

தத்துந் திரைக்கடல் கிடந்தலறும் வயிறுயர் தடங்குடுமி யிடறியுடையத், தண்புயலி னுண்டுளி யருதொழுகு சாரலிற் றழைமுடையு மிதணமேறி; முத்தும் பனித்தளவு மளவென வருபுகுறு முளைமுறுவ னிலவுகொட்ட, முறுகூறு விமயந் திறந்து குறமகளிர்கரு மோழிலுழு பொடியிலெயினர் வித்துந் தினைக் கதிரின் வீழ்கிளி யினங்கடியு மென்மொழியை யாழினிசையாய், வேட்டசுண மாப்பறவை கேட்பவதிர் மழைவாலைய மிடைபடுஞ் சிறையினைமறையப்; பொத்தும் பணைச்சந்த னூசலத தொருதலைவ பொன்னூச லாடியருளே, புவனை திரி புரைமும்மை யவனிதரு முலகம்மை பொன்னூச லாடியருளே. (௬)

தீட்டுமுனை வயிரவுளி வாயிட்ட பத்துத் திருத்துமொரு கோமேதகச், செம்மணிப் பலகைகி ழிட்டுவித் துருமச் செழுமை கால் புனைந்து திசைவே; ரோட்டுமிரு ளோட்டெழ லெயிற்கற்றை விட்டுவிட் டுமிழ்மணிப் பலகைமேலிட், டொளிர்புருட ராகமுழு

நீலவுரு வைத்துவை டூரிய வடிம்பழுத்தி; யீட்டுசுடர் வயிரத்
துளைத்துவட நாற்றிமுத் தினமணி விதானமாக்கி, யித்தலை குயி
ற்றுமணி யூசனடு மரகத மிருந்தாடு கின்றதென்னப்; பூட்டுமணி
வார்முலைக் கோட்டிளைய போட்டுமயில் பொன்னூச லாடியருளே,
புவனைதிரி புரைமும்மை யவனிதரு முலகம்மை பொன்னூச லாடி
யருளே. (௭)

ஒழுக்குங் கொழுக்கற்றை முழுநிலவு புடைபரந் தொழுகிநின்
றசையவசைய, வொள்ளொளிய வெள்ளிவெண் பருமுத்த வூசலை
யுதைந்துநீ யாடுவதுவான்; முழுக்குந் தடங்கரை யுடைத்தெறி
பயோததி முகட்டிற் சுருட்டிவாங்கி, முறிபடு நெடுந்துளைக் கல்
லோல மீமிசையின் முதிரச் சிவந்துநாட்டி; மழுக்கிற் சுடர்ப்
பவள பழலைவா யிளவரச மரகதப் பச்சை வருண, மடவனப்
பார்ப்பிருந் தாடுவதை யெய்ப்பமது வாம்பதும வடிபணிந்தோர்;
புழுக்குங் கருக்குழிப் புகுதாம லாளுவாய் பொன்னூச லாடிய
ருளே, புவனைதிரி புரைமும்மை யவனிதரு முலகம்மை பொன்;
னூச லாடியருளே. (௮)

கங்குல்பட ரைம்பான் முடித்தகொந் தளமைக் கருஞ்சுரு
ளெறித்த விருளுங், கழுவுங் குருச்சுடர்க் கருநீல முழுமணி கவிழ்
த்திட்ட கொள்ளையிருளுஞ்; செங்குமுத முத்தங் குருத்துவிடு
வெயிலுமணி செம்மணி கொழித்தவெயிலுங், சில்லமிர்த மெல்
லென் குறுந்தரள நகைசிந்து தெண்ணிலவு முறிமேனியிற்; றங்கு
மொரு வெண்டரளம் விண்டகதிர் நிலவுமுன் றளிருடற் பச்சை
யொளியும், சாயளக் கோமள மணிப்பசுஞ் சோதியுந் தத்தமின்
மயங்கியொளிரப்; பொங்குதமிழ் மலைப் பொருப்பிறைவி பண்
மணிப் பொன்னூச லாடியருளே, புவனைதிரி புரைமும்மை யவனி
தரு முலகம்மை பொன்னூச லாடியருளே. (௯)

கயலாடு தெண்டிரைத் தண்டுறையும் வார்கடற் கம்பலையு
மெறியவலறிக், கைபரந் தசுரக் கடற்படை யொடுங்கடைக் கண்
கடைக் கனவினங்ச; மயலாடு கண்டக நிசும்பா சுரன்றமையன்
மறவிகண் முகிழ்ப்பமறலி, வஞ்சின முரைத்துமுது வெஞ்சமர்
விளைத்தமர் வழங்கக் குழங்கனமாலைப்; பெயலாடு கொண்டற்
கருங்குழற் சூலினிப் பெண்ணைக் கடைக்கணித்துப், பேரம ருட
ன்றிவர்க் கொல்லென விடுத்துப் பெயர்த்தா யிரம்பருவமோர்; புய

லாடு தண்டலையின் மணியூச லாடுவாய் பொன்னூச லாடியருளே, புவனேதிரி புரைமும்மை யவனிதரு முலகம்மை பொன்னூச லாடி யருளே. (௧0)

மாதுங்க கனகா சலக்கார் முகத்தலைவன் மருள்கதுப் பிருள் பழுக்கு, மழவெயிற் செம்பொற் கிரீடமும் பச்சிள வரைத்தோளு மூசனிகருங்; காதுந் திருக்குழையு மிருவிழியு மொருபசுங் கவி ஞெழுகு குமிழுமமிழுங், கதிர்வதன விம்பமும் புதியவிதழ் விம்ப மும் கரகமல மலருமுருகுங்; தாதுந் ததும்புசெங் கழுநீரு மின்னு முக தரிகமுஞ் சிற்றுதரபந், தனமும் பொலம்பட்டு மேகலையு நூபுரச் சாணுமென் சிந்தைகொளவெப்; போதுஞ் சிலாவிகித மென்னப் பொறித்தமயில் பொன்னூச லாடியருளே, புவனேதிரி புரைமும்மை யவனிதரு முலகம்மை பொன்னூச லாடியருளே. (௧௧)

பொன்னூசற்பருவம் முற்றிற்று.

ஆகப்பருவம் 10-க்கு விருத்தம் 110.

பாயிரத்துடன் விருத்தம் 115.

---

## உலகம்மை பிள்ளைத் தமிழ் முற்றிற்று.

உ

சிவமயம்.

பாவநாசம் என்னும்

# சிங்கைச் சிலேடை வெண்பா.

## காப்பு.

கங்கைவெண்பா மாலைமுடிக் கல்யாண சுந்தரனார்
சிங்கைவெண்பா மாலை சிறப்பாகத்—தங்கியதென்
கற்பகத்தின் கான்மலரக் கட்டினனார் கொண்டொருகைக்
கற்பகத்தின் கான்மலரக் கால்.

## நூல்.

பூங்கழனி மங்கையரும் புண்டரிகப் பொய்கைகளுந்
தேங்க மலங்களையுஞ் சிங்கையே—யோங்கல்
வரிசிலை யானனத்தான் வானிமிர்ந்து காணும்
பரிசிலை யானனத்தான் பற்று. (க)

எவ்வழிநின் றுள்ளோரு மேழிசைய வண்டினமுஞ்
செவ்வழியின் பண்புணருஞ் சிங்கையே—மைவழியுங்
காவிக் கழுத்தினார் கஞ்சபத நெஞ்சுறவிப்
பாவிக் கழுத்தினார் பற்று. (உ)

கல்விக் குரவருமென் கார்க்குரவக் கோதையருஞ்
செல்விக் கினமடுக்குஞ் சிங்கையே—நல்வித்
துருப வரையினார் சோதியர்சார்த் தூலச்
சரும வரையினார் சார்பு. (௩)

மாலைக் குழன்மடவார் வாள்விழியு மாளிகையுஞ்
சேலைக் கொடிதிகழுஞ் சிங்கையே—யாலைக்
கரும்பனைக்கா யங்கெடுத்தார் காலாந்தத் தாடல்
விரும்பனைக்கா யங்கெடுத்தார் வீடு. (௪)

வெவ்வாம் பரிமகமு மெல்லியலார் மெல்லிதழுஞ்
செவ்வாம் பலங்கொடுக்குஞ் சிங்கையே—கைவாங்
கொருகனக வில்லா னுயரிமய வேந்தன்
மருகனக வில்லான் மனை. (௫)

வேம்பருமட் கூனுமத வெங்களிறுந் தண்ணறவார்
தீம்பருவப் பாகிவருஞ் சிங்கையே—கூம்பநிலா
விட்டவிருந் தண்டார் விருப்பாற் புனிதவதி
யிட்டவிருந் தண்டா ரிடம். (௬)

ஆயுத் தமர்நாவு மந்தணரோ மக்குழியுந்
தேயுத் தரமாற்றுஞ் சிங்கையே—நோயுட்
படிந்தவனு கப்பணியான் பாவியென்பா லின்னல்
கடிந்தவனு கப்பணியான் காப்பு. (௭)

மல்லியைந்த தோளினரும் வானசுணப் புள்ளினமுஞ்
சில்லியங்தே ரச்சடைக்குஞ் சிங்கையே—சொல்லினிரு
கான மயிலார் கறிசமைத்த பிள்ளைவரப்
போன மயிலார் புரம். (௮)

நித்திலத்தார் சோறடுபொன் னீர்மையரும் பாவலருஞ்
சித்திரப்பா வைக்கூட்டுஞ் சிங்கையே—யத்திரத்தாற்
சோர விலங்கையினன் சோரவென்ற வாளிதொட்ட
பார விலங்கையினன் பற்று. (௯)

சொப்புக் குழையார்கொங் கைக்குடமு மட்குடமுஞ்
செப்புக் குடம்பழிக்குஞ் சிங்கையே—துப்புப்
பழுக்கு மிதழியோர் பாகர்பசுந் தேன்வா
யொழுக்கு மிதழியோ ரூர். (௧௦)

தூர்ந்த ரொடும்புணர்ந்தார் கண்களுமக் காளையருஞ்
சேந்த் னலம்படருஞ் சிங்கையே—பூந்துளவ
வாரிசவா சத்தார் வணைந்தார் தொழுமலைய
பாரிசவா சத்தார் பதி. (௧௧)

கற்பநிலை வேட்டோர் கருத்தின்மனைப் பித்திகையிற்
சிற்பரைவண் ணங்குறிக்குஞ் சிங்கையே—பொற்பின்
விலக்கற் குடையார் விதிமுதலோர் சென்னி
யலங்கற் குடையா ரகம். (௧௨)

விம்முமலர்ப் பூங்கொத்தும் வித்துரும வாய்ச்சியருஞ்
செம்மலைமாற் றத்தழைக்குஞ் சிங்கையே—கைம்மலரிற்
றுள்ளுமறி வைத்திருப்பார் தொண்டுபுரி யார்க்கிருள்வாய்த்
தள்ளுமறி வைத்திருப்பார் சார்பு. (௧௩)

மிக்க சிறைமயிலு மென்பயிர்க்குத் தீம்புனலுஞ்
செக்கணியா டிக்களிக்குஞ் சிங்கையே—முக்க
ணொருவ ருமாபதியா ருன்னிலர்பான் ஞானத்
திருவ ருமாபதியார் சேர்வு. (கச)

கோட்டரும்பொன் மாமதிலுங் கோடா விளையவருஞ்
சேட்டருக்கன் பாற்றிவருஞ் சிங்கையே—தோட்டருக்கந்
தண்ணந் தெரியலார் சத்தியவே தாந்தமுந்தம்
வண்ணந் தெரியலார் வாழ்வு. (கரு)

கட்டாம் பகைப்புலத்துங் காலமுணர்ந் தோர்கருத்துந்
திட்டாந் தரந்தெரியுஞ் சிங்கையே—யெட்டாந்
திசைக்கலிங்கத் தார்வார் திரைப்பொருநை மான்போற்
றிசைக்கலிங்கத் தார்வா ரிடம். (கசு)

ஏர்வாய் மணிமறுகு மெண்ணெண் கலையினருந்
தேர்வா னினைவிட்டுஞ் சிங்கையே—யோர்பாற்
பசக்கச் சிவந்தார் பனிவரைக்குத் தென்பா
ரிசக்கச் சிவந்தா ரிடம். (கஎ)

காவ னனியறமுங் கான்பொருநைப் பேராறுஞ்
சீவனமன் பாற்பயந்தாழ் சிங்கையே—நாவன்
மறையவன்றா தேவினுர் வால்வளையை மாற்றூர்
மறையவன்றா தேவினுர் வாழ்வு. (கஅ)

பற்றித் தமிழ்கேட்கும் பண்பினருந் தோரணமுந்
தெற்றித் தலையசைக்குஞ் சிங்கையே—நெற்றி
விழிக்குந் திருக்கழலார் கெற்சிதக்கூற் றூற்ற
லொழிக்குந் திருக்கழலா ரூர். (ககூ)

இச்சைகூர் மாந்த ரிணைப்புயமும் பூந்தருவுஞ்
செச்சையா ரத்தாழுஞ் சிங்கையே—பிச்சை
யிடவென் றுவந்தா ரிடுபலிகொண் டாசைப்
படவென்று வந்தார் பதி. (உ0)

ஆசில் வயப்புரவி யார்ப்புங் கணிதரும்வான்
றேசி கனைப்பழிக்குஞ் சிங்கையே—காசிமுத
லாளுந் தலத்தகத்தா ரம்புலிச்சூட் டிற்கவுரி
தாளுந் தலத்தகத்தார் சார்பு. (உக)

பம்பு பொருநையுமெய்ப் பண்புடையோர் நன்மதியுஞ்
செம்புதனை யுட்குவிக்குஞ் சிங்கையே—யம்புயமார்
வேதசிர மத்தார் விரிசடைவைத் தார்நடக்கும்
பாதசிர மத்தார் பதி. (௨௨)

பூங்குழலார் வார்த்தைகளும் பொய்யிகந்தோ ரைம்புலனுந்
தீங்குழலா வாய்த்தேறுஞ் சிங்கையே—யோங்குமுய
ரான குமரனு ரையரெயின் மூன்றெரியத்
தான குமானுர் சார்பு. (௨௩)

மையிற் செறிகுழலார் வார்முலைச்சாந் துங்குருகுஞ்
செய்யிற் கயிலாருஞ் சிங்கையே—கையி
னெருப்புக் கணிச்சியார் நேயமில்லார் பொய்ம்மை
விருப்புக் கணிச்சியார் வீடு. (௨௪)

வவ்வு நிதிக்ககன்ற மைந்தருந்துப் பும்மடவர்
செவ்வி தழைக்கவருஞ் சிங்கையே—யெவ்வினையுந்
தீரத் திருந்தகத்தர் சேவைசெயத் தண்பொருநைத்
தீரத் திருந்தகத்தர் சேர்வு. (௨௫)

கன்னித் தடம்பொழிலாற் கற்றோர்கை வந்தனையாற்
சென்னித் தலம்புகுக்குஞ் சிங்கையே—தன்னைத்
திடவ சனத்தினன் சீர்வழுத்த வைத்தான்
விடவ சனத்தினன் வீடு. (௨௬)

ஓவா வளங்கெழுநீ ரூர்க்களம ருந்தெருவுந்
தேவா லயங்காட்டுஞ் சிங்கையே—மேவா
ரிருப்பரணங் காதரனு நீர்ம்பொதியச் சாரல்
விருப்பரணங் காதரனுர் வீடு. (௨௭)

மெய்யுள் வழங்குதமிழ் வேந்தருமென் பால்வளையுஞ்
செய்யு ளவைவழங்குஞ் சிங்கையே—பையுள்
சிதையத் திருந்தார் திறத்தகன்று மேலோ
ரிதையத் திருந்தா ரிடம். (௨௮)

கன்மந் தருவினையுங் கன்னியர்கொங் கைச்சுவடுஞ்
சென்மந் தரமலைக்குஞ் சிங்கையே—வன்ம
முரணகம லத்தினர் முன்பயிலா நீர்த்த
சரணகம லத்தினர் சார்பு. (௨௯)

பத்த சனங்களுமென் பான்மொழியார் வேல்விழியுஞ்
சித்தச னம்பயிலுஞ் சிங்கையே—சுத்தசல
வானகங்கைக் குள்ளார் வாதா பயமழுமா
ஞானகங்கைக் குள்ளார் நகர். (ந௦)

காம்பார் பசுந்தோளார் கண்ணு மணிவயிறுந்
தேம்பா னலங்கடக்குஞ் சிங்கையே—பாம்பா
பரணத் தாத்தனார் பார்த்தனடித் திட்ட
விரணத் தாத்தனார் வீடு. (நக)

அண்ணற் பழம்பொருளை யாறுமறி ஞோர்மனையுந்
திண்ணத் தறனிறைக்குஞ் சிங்கையே—யெண்ணத்தின்
முன்றுருவ மர்ஞன் முகன்காண மூட்டழல்போ
லன்றுருவ மாஞ னகம். (நஉ)

பாங்களவா வெண்டிசையும் பத்தியடி யார்குழுவுந்
தீங்களவா சஞ்செறியுஞ் சிங்கையே—யோங்காரத்
துள்ளொளியா நின்றானுப நிடதத் துச்சியின்மே
லள்ளொளியா நின்றா னகம். (நந)

மைவார் பொழிற்றுயிலு மாமதியை வேதியரைச்
செவ்வா ரணமெழுப்புஞ் சிங்கையே—யொவ்வாத
போற்றுக் கொடியான் புகழவுமென் பாலிரங்கு
மேற்றுக் கொடியா னிடம். (நச)

தூயவரை யிஞ்சியின்வாய்த் துஞ்சுமதி யைக்கண்டு
தீயவர வங்கடுக்குஞ் சிங்கையே—யாயர்
கறவையா ஞனுன் கனன்மழுவா னன்னப்
பறவையா ஞனுன் பதி. (நரு)

அன்றலைநீ ருண்டவனு மாரத் தடம்பொழிலுந்
தென்றலைம ணந்துவக்குஞ் சிங்கையே—மன்ற
லுலையா வணமளித்தா ரூரனையாட் கொள்ள
விலையா வணமளித்தார் வீடு. (நசு)

வந்துபகைத் தோர் பொரலால் வண்டுமதத் தால்வர்லாற்
சிந்துரத்த வாறடுக்குஞ் சிங்கையே—கந்தரத்திற்
சற்றுக் கறுப்பார் தழற்சிவப்பார் சஞ்சிதமென்
பற்றுக் கறுப்பார் பதி. (நஎ)

காவ விளைஞர் கடுநடையிற் பூந்தடத்திற்
சேவ லனங்குடையுஞ் சிங்கையே—மூவர்
திருப்பாட லாரத்தர் சிற்சபையி லொற்றித்
திருப்பாட லாரத்தர் சேர்வு. (௩அ)

மைதவழ்கண் ணார்மருங்கு மாதவத்தோ ருந்தவறு
செய்தகவுஞ் சிக்காக்குஞ் சிங்கையே—கைதைநறும்
போதைமுடி வைத்தணியார் போற்றறியார் புன்பிறப்பை
வாதைமுடி வைத்தணியார் வாழ்வு. (௩௯)

எவ்வா யினுமுணர்ந்தோ ரின்னறிவு மாகதருஞ்
செவ்வாய் வழுத்தடுக்குஞ் சிங்கையே—வெவ்வாய்
நரககடை கத்தினு னண்ணிவிடா தெண்ணு
முரககடை கத்தினு னூர். (௪௦)

ஈகையற்ற வஞ்சரையு மெண்ணுன் கறங்களையுஞ்
சேகரித்து மெய்ப்புணர்த்துஞ் சிங்கையே—சர்கரத்தை
யுண்ட வருக்கொளியா ரோரர் யிரங்கதிர்வாள்
விண்ட வருக்கொளியார் வீடு. (௪௧)

தூயநிலை வாய்மையருந் தொல்லைமனு நூனெறியுந்
தீய வழுக்கறுக்குஞ் சிங்கையே—நேய
மெடுத்த திகம்பரத்தா ரேத்தவருள் செய்வா
ருடுத்த திகம்பரத்தா ரூர். (௪௨)

வெய்ய மிடியும் விரிபொருகை வெண்டிரையுஞ்
செய்ய வளங்கொழிக்குஞ் சிங்கையே—யையர்
துவளக் குழையார் துடியிடையார் சங்கத்
தவளக் குழையார் தலம். (௪௩)

பூவகத்திற் போர்கடந்த பூட்கையும்வில் வேட்கையருஞ்
சேவகத்தி லேவழங்குஞ் சிங்கையே—பாவகத்தி
லொக்க வருவா ரொருவரெனில் வேறுணரத்
தக்க வருவார் தலம். (௪௪)

மாவாய்மைத் தொண்டர் மணிவாயு நன்மனமுந்
தேவாரப் பண்பாடுஞ் சிங்கையே—யோவாமற்
சீலமிசைந் துள்ளார் தெரிவரியார் தெண்டிரைநீ
ராலமிசைந் துள்ளா ரகம். (௪௫)

நீதியுமென் புட்குலத்தோர் நீள்சிறைய புள்ளினமுந்
நீதின வந்தடுக்குஞ் சிங்கையே—பாதி
மரகதமே விட்டார் வழுதியெதிர் சம்புக்
குரகதமே விட்டார் குடி. (சசு)

வேறற் கரும்பகையும் வேழமதம் பாய்நிலமுஞ்
சேறற் கருமையவாஞ் சிங்கையே—மாறற்கு
வெப்பழிக்கு நீற்றினர் மேவார் புரமெரியுந்
தப்பழிக்கு நீற்றினர் சார்பு. (சஎ)

பத்தி தருவிழவும் பன்மா ளிகையுமுன்னாட்
சித்திரைமா தங்குலவுஞ் சிங்கையே—புத்திராந்
தார்க்குஞ் சரமயிலான் றாதையொரு பாதிதனைப்
பார்க்குஞ் சரமயிலான் பற்று. (சஅ)

பிந்தாத நல்லறமும் பேராயர் வேய்ங்குழலுஞ்
சிந்தா குலந்தணிக்குஞ் சிங்கையே—சந்தார்
புளகத் தனத்தனள் பூட்டுகுறி மார்பத்
துளகத் தனத்தன ளூர். (சகு)

வேய்வனமும் போர்க்களத்து வீரருசெஞ்சாமுந்
தீவனமா கத்தாக்குஞ் சிங்கையே—நோவன்முன்
றந்துபர சண்டன் சமர்விளைப்ப மார்க்கண்டன்
வந்துபர சண்டன் மனே. (ருo)

அன்னந் துணர்க்கமலத் தாடவர்கள் கோம்றுகிற்
சின்னந் துவைத்தார்க்குஞ் சிங்கையே—பொன்னம்
பலவிருப்ப ராஞர் பழம்புவன கோடி
பலவிருப்ப ராஞர் பதி. (ருக)

ஐய பசுந்தமிழு மாற்றினு லந்தணருஞ்
செய்ய மகம்புரியுஞ் சிங்கையே—சையந்
தருகுமா ரத்தியார் தந்தலைவர் வேணி
செருகுமா ரத்தியார் சேர்வு. (ருஉ)

பந்தித்த கச்சுமின்னர் பாடகப்பூந் தாணடையுஞ்
சிந்தித் தனந்திரியுஞ் சிங்கையே—பந்திக்
குடிலச் சடையார் கொடியனைப்பாழ்ம் பீறற்
குடிலச் சடையார் குடி. (ருந)

மெய்ம்மாண் பினருளமு மெல்லியலார் மெய்ச்சுணக்குஞ்
செம்மாந் துணர்விலகுஞ் சிங்கையே—பெம்மான்
கணிச்சிகரத் தாற்றினன் காமருபூந் தென்றன்
மணிச்சிகரத் தாற்றினன் வாழ்வு. (ருச)

மைந்தாயில் வேல்வலியில் வாம்புரவித் தேரேற்றிற்
செந்தி னகரனைநேர் சிங்கையே—யந்தி
திறம்பழகு மெய்யினர் சின்மயவே தாந்தத்
திறம்பழகு மெய்யினர் சேர்வு. (ருரு)

கானூறு நாண்மலரிற் கன்னற் பெரும்பணையிற்
றேனூறு கால்பாயுஞ் சிங்கையே—யூனூற
வுண்டவரை வில்லா ருலகேழு முண்டசரங்
கொண்டவரை வில்லார் குடி. (ருசு)

மூரா லரும்பு முருக்கினரு மொய்ம்பினருஞ்
சேரலரைக் கூழையிற்சூழ் சிங்கையே—சார
லலைய மலையா ரருவிகுதி பாயு
மலைய மலையார் மனை. (ருஎ)

நாற்றமலர்க் கேணிகளு நாகிளஞ்சூன் ஞெண்டினமுஞ்
சேற்ற வளையார்க்குஞ் சிங்கையே—போற்றுகின்ற
போரகவ சத்தினர் போர்ம தகரித்தோல்
வீரகவ சத்தினர் வீடு. (ருஅ)

ஊறு கரிமதமு மொண்டொடியார் கண்மலருஞ்
சேறுவள மாற்கமிடுஞ் சிங்கையே—நீறுபுனை
வார்கரக பாலனர் வாழ்த்துமண வாளர்பனி
தேர்கரக பாலனர் சேர்வு. (ருகூ)

மையார் கரும்புயலை வாழ்வாரைக் கண்டுவப்பாற்
செய்யா ரளகமிகுஞ் சிங்கையே—கையாற்
கடனஞ் சமைத்தான் கழற்காலான் மன்றி
னடனஞ் சமைத்தா னகர். (சுo)

பேரா தறநெறியிற் பெய்யுநறைப் பூங்காவிற்
றோ[illegible]வருமுறுஞ் சிங்கையே—சோராது
பூவாரப் பாட்டினர் பொன்னு டளிக்கவைத்த
தேவாரப் பாட்டினர் சேர்வு. (சுக)

ஆரத் தடம்பொருநை யாறுமடற் காளையருந்
தீரத் தனம்பெயாச் சிங்கையே—வாரத்து
நீளத் தருவா னிழல்வாழ் வருளடியார்க்
காளத் தருவா னகம். (௬௨)

ஊறன் மதநீ ருவாக்களிறு மொண்சுரும்புந்
தேறலவாய்க் கொண்டுலவுஞ் சிங்கையே—நாற
னவத்துவா ரத்தினா னண்ணுமுடம் பெண்ணார்
தவத்துவா ரத்தினான் சார்பு. (௬௩)

அங்கம் பசுந்தளிரன் னார்நுதலு மாடவருஞ்
சிங்கம் புலிபொருதென் சிங்கையே—மங்கை
சுறவுக் குழையார் துணைவிழிதந் தோடாக்
குறவுக் குழையார் குடி. (௬௪)

தப்பாத தெய்வமறைச் சைவருமின் னார்தனமுஞ்
செப்பாக மங்களங்கூர் சிங்கையே—கப்பான
சூலங் கரந்திரித்தார் சூழ்ந்துதக்கன் வேள்விதொக்கார்
சீலங் கரந்திரித்தார் சேர்வு. (௬௫)

பத்தித் துணர்ச்சோலைப் பைங்கனியு மொண்சுரும்புந்
தித்தித் துவைப்பார்க்குஞ் சிங்கையே—சத்திக்கு
வாமங் கொடுக்கின்றார் வன்சமணை யோர்மகவாற்
றாமங் கொடுக்கின்றார் சார்பு. (௬௬)

காரளக மாதருமென் கான மயினடமுஞ்
சீரளவி னாடகநேர் சிங்கையே—நீளவு
கோடீரத் தாரார் குரைகழற்கால் வஞ்சர்கொடுங்
கோடீரத் தாரார் குடி. (௬௭)

ஆக்கமுறு விண்ணவரு மஞ்சிறைச்செஞ் சூட்டனமுந்
தேக்கமல மென்றிருக்குஞ் சிங்கையே—நோக்க
மதியா தவனழலான் வாழ்த்தினரைத் தாழ்த்த
மதியா தனழலான் வாழ்வு. (௬௮)

பாரக் குழலார் பயோதரமும் பைங்கூழுஞ்
சேரப் பணைத்துவளர் சிங்கையே—வாரத்து
நச்சரவ மானார் நரகே சரிநடுங்க
வச்சரவ மானா ரகம். (௬௯)

நேசத் தினின்மடமை நீக்கலினல் லோரெவர்க்குந்
தேசத் தினைநிகர்க்குஞ் சிங்கையே—நீசப்
புலைச்சமைய மாற்றினார் பொய்யறிவுக் கெட்டா
துலைச்சமய மாற்றினா ரூர். (௭0)

வெவ்வலரிக் கெத்துறையு மென்சூ லியர்நாவுஞ்
செவ்வலரிப் பூமணக்குஞ் சிங்கையே—மௌவலரும்
பாக முறுவலா ராம்பலித ழாளைவிட்டு
யோக முறுவலா ரூர். (௭௧)

ஆகுலவா ரங்குறித்த வாயர் குலவணிகர்
சேகுலவா ரம்பிரிக்குஞ் சிங்கையே—கோகுலமு
னைவசனத் தோகையினார் ஞானவடி வின்புடையார்
சைவசனத் தோகையினார் சார்பு. (௭௨)

பன்ன வருந்தமிழ்கேட் பாருமவர் மாளிகையுந்
தென்ன மலையனிகர் சிங்கையே—இன்னலெறி
வானடிக்கு நாடகத்தார் வாழவருள் வார்சடலைக்
கானடிக்கு நாடகத்தார் காப்பு. (௭௩)

சொல்வந்த நல்லோர் தொகுமணியுஞ் சாலிகளுஞ்
செல்வந் தமருறவாஞ் சிங்கையே—பில்வந்து
சேயத் தலைக்கறியார் தீப்பசியார் தீயவெனை
மாயத் தலைக்கறியார் வாழ்வு. (௭௪)

மானந் தரும்பொருநர் வாளிடத்தும் பூந்தடத்துஞ்
சேனந் துவண்டலவுஞ் சிங்கையே—ஞானந்
தடைத்தவரைக் காப்பார் தழல்விழிக்கும் பாம்பா
லிழைத்தவரைக் காப்பா ரிடம். (௭௫)

சொன்முனிவ னின்னிசையுந் தோகையர்மென் சொல்லிசையுந்
தென்மலைய வெற்புருக்குஞ் சிங்கையே—பொன்மலைவிற்
கொண்டு புரங்கடந்தார் கோரவிடம் வாய்நிறைய
மண்டு புரங்கடந்தார் வாழ்வு. (௭௬)

பூணம் புயத்திளைஞர் பொற்படமும் வாம்பரியுஞ்
சேணந் தரத்திரியுஞ் சிங்கையே—தூணங்
கொடுக்குநர கேசரியார் கோளொழித்தா ரென்னைக்
கடுக்குநர கேசரியார் காப்பு. (௭௭)

மீனுகளும் பூந்தடத்து மேதிகளு மென்புறவுந்
தேனுவள மேய்ந்துறையுஞ் சிங்கையே—பானு
வினப்பற் றுவைத்தா ரிமையமகண் மேலே
மனப்பற் றுவைத்தார் மனை. (எஅ)

ஊக்கத் தமர்க்களம்புக் கோர்விழியு மாமடமுந்
தீக்கைக் கனல்வழங்குஞ் சிங்கையே—யாக்கையெனுந்
தோற்பொதியச் சாரலார்தொண்டரெனக் காக்குமிளங்
காற்பொதியச் சாரலார் காப்பு. (எகூ)

மேக்களவிட் டோங்குதமிழ் வெற்புமர விந்தமுஞ்சேர்
தேக்கமரப் பூம்பணைபாய் சிங்கையே—நீக்கமிலா
தெங்கு நிலாவிடுவா ரீரச் சடாடவிமேற்
பங்கு நிலாவிடுவார் பற்று. (அ0)

கொற்றத் தகருங் குடிப்பிறந்த கொள்கையருஞ்
செற்றத் தமர்வளர்க்குஞ் சிங்கையே—முற்றப்
பொறைக்கமடத் தோட்டார் புலன்போயென் னெஞ்சை
மறைக்கமடத் தோட்டார் மனை. (அக)

எவ்வெந்தப் பூம்பொழிலு மீர்ங்குமுத நாண்மலருஞ்
செவ்வந்திப் போதலருஞ் சிங்கையே—யவ்வந்தி
பிட்டுக் கலந்தார் பெருநீர்ப் பழம்புவனத்
தட்டுக் கலந்தார் தலம். (அஉ)

நீரகத்தே யுற்றாளு நீள்வணிகர் பொற்றோளுஞ்
சீரகத் தார்மணக்குஞ் சிங்கையே—தாரகத்தை
யந்தத் தெனக்குனித்தா னன்பினுப தேசிப்பான்
றந்தத் தெனக்குனித்தான் சார்பு. (அங)

ஈவதற்கன் பாம்வணிக ரில்லுமறி வோர்மனமுந்
தீவகத்தின் சாந்தமுறுஞ் சிங்கையே—நோவறுத்தென்
பாடற் களிப்பான் பணித்ததிருத் தாள்வழுத்து
மாடற் களிப்பா னகம். (அச)

விந்தைக் கிணையாம் விறலியரு மெய்யறிவுஞ்
சிந்தைச் சுகம்பயிற்றுஞ் சிங்கையே—முந்தைக்
கடவுண் மறைத்தலையார் காதலித்துத் தம்பாற்
கடவுண் மறைத்தலையார் காப்பு. (அரு)

ஆராயு முத்தமிழு மத்தமிழ்மங் தாகிலமுஞ்
சீரா யசைநடைகூர் சிங்கையே—போரானை
வேகத் தசைத்தோன் மிடையு மிருளொறிப்ப
வாகத் தசைத்தோ னகம். (௮௬)

நாவிக் குழன்முடிக்கு நாரியரும் பல்லுயிருஞ்
சீவித் தளவளவுஞ் சிங்கையே—காவிக்
களத்து விடக்கறுப்பார் காமியத்துப் போமென்
னுளத்து விடக்கறுப்பா ரூர். (௮௭)

வன்னவிலைப் பாவையர்கை வாளுகிரு மான்குயிலுஞ்
சின்னவடு கோதியிடுஞ் சிங்கையே—மின்னவிரும்
வேணிபிறை கத்தான் விதிதலைமா லைச்சூல
பாணிபிறை கத்தான் பதி.

முந்துதவச் செய்கையரு மொய்குழலார் கைவிரலுஞ்
செந்துவரைத் தண்ணளிகூர் சிங்கையே—யிந்து
முடிக்குத் தரித்தார் முனைவிசையன் போர்வில்
லடிக்குத் தரித்தா ரகம்.

ஆறா ரொலியுமின்னா ரல்குலங்தேர்த் தட்டுமியற்
சீறா ரரவமொக்குஞ் சிங்கையே—யேறார்வார்
முன்னகர மானார் முகைநெகிழு முண்டகப்போ
தன்னகர மானா ரகம்.

போதார் மலர்ப்பொழிலும் புத்தேளி ராலயமுஞ்
சீதாரி வாசமுறுஞ் சிங்கையே—சாதாரி
விண்டவிசைப் பாணனார் வெங்கரசங் காரகோ
தண்டவிசைப் பாணனார் சார்பு. )

நாகரிக ரும்பொருநை நன்னதிசீர் வீசுமுத்துஞ்
சீகரமா மாலையொக்குஞ் சிங்கையே—யேக
ரனேக விதமுடையா ரன்புசெய்வார் தங்கள்
சினேக விதமுடையார் சேர்வு. )

பொன்னியலார் நெற்றியுங்தென் புள்ளு மிசைதெரிவான்
சென்னியரைத் தண்மதிசேர் சிங்கையே—யுன்னிமனத்
தின்பாவ மாற்றினு னெய்துகதி யெய்தவணி
கன்பாவ மாற்றினன் காப்பு. (௯௨)

அக்கங் கறுத்தவர்கற் றைக்குழலிற் புத்தியிற்சேர்
சிக்கங் கறுத்துவிடுஞ் சிங்கையே—மைக்கனம்போய்ச்
சாயுச்சி யந்தருவார் தண்பொருந்தத் தாரெனக்குச்
சாயுச்சி யந்தருவார் சார்பு. (௯௪)

பார்த்திக்கி னுள்ள பலதலமு முக்களவுஞ்
சீர்த்திக் களவுபடுஞ் சிங்கையே—மூர்த்திக்கு
மானமொழிந் தார்க்கு வடநிழற்கீழ் வந்திருந்து
ஞானமொழிந் தார்க்கு நகர். (௯௫)

பேர்த்தண் டமிழ்வரையும் பேரறமுஞ் சேர்ந்துகலி
தீர்த்தங் கொடுக்குமியற் சிங்கையே—யூர்த்த
முபனு நடத்தினர் மூதண்டத் தெல்லாச்
செயனு நடத்தினர் சேர்வு. (௯௬)

காப்புவளைக் கையாருங் காலவளைக் குண்மடையுஞ்
சீப்பினள கஞ்செறிக்குஞ் சிங்கையே—கோப்புமுறைக்
குஞ்சிதத் தாளார் கொடும்பா தகர்குடியை
வஞ்சிதத் தாளார் மனை. (௯௭)

காப்பாயர் தோளிணையுங் காந்தளில்வீழ் வண்டினமுஞ்
சேப்பாய் மருப்பொசிக்குஞ் சிங்கையே—காப்பாய
சற்பப் படலையார் தம்படிவ மாம்பவள
வெற்பப் படலையார் வீடு. (௯௮)

குத்திரத்தில் வாசவருங் கோமளப்பூங் கோதையருஞ்
சித்திரத்தை யாயுலவுஞ் சிங்கையே—பத்தர்நினை
பஞ்சக் கரக்களவாப் பாலோன் பரிந்துரையா
நெஞ்சக் கரக்களவா நேர்வு. (௯௯)

பாண்டிக் குலவழியிற் பல்கடவு ளாலயத்திற்
சேண்டிக் குானவிலுஞ் சிங்கையே—வேண்டியெனை
யாழி மலையவெற்பா ராக்கையெடா தாண்டுகொண்ட
வாழி மலையவெற்பார் வாழ்வு. (௧௦௦)

சிங்கைச்சிலேடைவெண்பா

முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| 4 | 32 | வெவ்வா | வெவ்வர |
| 13 | 4 | மெத்தகன | மெத்தக்கன |
| 17 | 13 | முக்காளா | முக்களா |
| 20 | 31 | பெரருளே | பொருளே |
| 32 | 3 | சுபநித்த | சுபநிமித்த |
| 57 | 6 | பிறைலயிற் | பிறைவயிற் |
| 61 | 4 | தாலோலோ | தாலேலோ |
| ஷை | 11 | காவகச்தி | காவகத்தி |
| 77 | 8 | யாடலாவே | யாடவாவே |
| 79 | 17 | கிடரி | கிடறு |
| 80 | 2 | முவுல | மூவுலக |
| ஷை | 7 | நிை, | நிரை, |
| 81 | 16 | தம்பி | தம்மி |
| 84 | 10 | நீரூண்ட | நீருண்ட |
| ஷை | 19 | பொன்லூச | பொன்னூச |
| 85 | 21 | வெயிலுங | வெயிலுஞ் |
| 88 | 23 | சேந்த் | சேந்த |